பக்கங்கள் : இருபத்தெட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2036 மார்கழி 10 ஞாயிற்றுக்கிழமை (25.12.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 29

# ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி. நள்ளிரவு சுட்டுப் படுகொலை!

## நத்தார் பிரார்த்தனையின்போது தேவாலயத்துக்குள் பயங்கரம்!!

மட்டக்களப்பு, டிசெம்பர்25

மூத்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரும் பழுத்த அரசியல் தலைவருமான ஜோசப் பரராஜசிங்கம் (வயது 71) நேற்று நள்ளிரவு நத்தார் பிரார்த்தனையின் போது இனந்தெரியாத ஆயுதபாணிகளால் கொடூரமாக சுட்டுப்படுகொலை செய்யப்பட்டார்.



மட்டக்களப்பு சென். மேரிஸ் தேவாலயத்தில் கிறிஸ்து பிறப்பு ஆராதனையில் அவர் தனது துணைவியாருடன் கலந்து கொண்டிருந்தவேளை இந்தப் பயங்கரம் நிகழ்ந்தது. இந்தச் சம்பவத்தில் அவரது துணைவியார் சுகுணம் (வயது 68) உட்பட ஏழுபேர் காயமடைந்திருக்கின்றனர்.

கிறிஸ்து பிறப்பு ஆராதனையில் கலந்துகொள்வதற்காகத் தனது துணைவியார் மற்றும் உறவினர்கள் சகிதம் ஜோசப் பரராஜசிங்கம் நேற்றிரவு தேவாலயத்துக்கு வந்திருந்தார் என்று கூறப்படுகிறது.

தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பேராயரிடம் இருந்து நற்பிரசாதம் பெற்றுக்கொண்டு திரும்புகையில் பரராஜசிங்கம் மீது வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது. கொலையாளிகள் திடீரெனத் தேவாலயத்தினுள் புகுந்து இப்படுகொலையைப் புரிந்துவிட்டுத் தப்பிச்சென்றிருக்கின்றனர் என்று ஒரு தகவல் தெரிவித்தது.

பரராஜசிங்கம் எம்.பி. சூடுபட்டு சாய்ந்தபோது ஓடிவந்து அவரை அணைக்க முயன்ற அவரது துணைவியார் சுகுணம் பரராஜசிங்கமும் குண்டு பாய்ந்து வீழ்ந்தார். உடனடியாக இருவரும் மட்டக்களப்பு

(16ஆம் பக்கம் பார்க்க)

# யுவதி உட்பட ஐவரின் சடலங்கள் யாழ். கோட்டைப் பகுதியில் மீட்பு!

## மோதலில் பலியானவர்கள் என்கின்றது இராணுவம்

யாழ்ப்பாணம்,டிசெம்பர்25

சுமார் இருபது இருபத்தைந்து வயது மதிக்கத்தக்க இளம் யுவதி உட்பட ஐவரின் சடலங்கள் யாழ்.கோட்டைப் பகுதியில் இருந்து நேற்றிரவு மீட்கப்பட்டு யாழ்.மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன.

அந்தப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற ஒரு மோதலில் இவர்கள் ஐவரும் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்றும் இவர்களிடமிருந்து ஆயுதங்கள் சில கைப்பற்றப்பட்டிருக்கின்றன என்றும் இராணுவப் பேச்சாளர் அறிவித்திருக்கின்றார்.

நேற்று மாலை 5.45 மணியளவில் யாழ். கோட்டைப் பகுதியில் சரமாரியான வேட்டுச் சத்தங்கள் கேட்டன. தொடர்ந்து நகரப் பகுதியில் படையினர் எச்சரிக்கை வேட்டுக்களைத் தீர்த்தும் தாக்குதல் நடத்தியும் பொது மக்களை விரட்டினர். இதனால் பெரும் அல்லோலகல்லோலம் ஏற்பட்டது.

இந்தச் சம்பவங்களால் நகரப் பகுதி முற்றாக வெறிச்சோடியது. அதன் பின்னரே கோட்டைப் பகுதியில் சடலங்கள் கிடப்பது பற்றிய தகவல் வெளியானது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேயிலேயே முதல் பேச்சு தங்கள் முடிவில் புலிகள் உறுதி

கிளிநொச்சி,டிசெ.25

போர்நிறுத்த உடன்படிக்கையை சீராக நடைமுறைப்படுத்துவது தொடர்பான பேச்சுக்கள் முதலில் நோர்வே நாட்டிலேயே நடத்தப்படவேண்டும் என்ற முடிவில் விடுதலைப் புலிகள் உறுதியாக உள்ளனர்.

நேற்று தம்மைச் சந்தித்த இணைத் தலைமை நாடுகளின் தூதர்களிடம் இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

சர்வதேச சமூகமும், உலகத்தமிழர்களும் நோர்வேயின் அனுசரணைப் பணியில் திருப்தி கொண்டுள்ளனர். ஸ்ரீலங்கா அரசும் இதனை ஏற்றுக்கொண்டுள்ளது. அதன்படி அந்த நாட்டில் இரண்டு தரப்பினர்களும் சந்தித்துப் பேச்சுக்களை ஆரம்பிப்பதே மிகவும் பொருத்தமான செயற்பாடாக இருக்கும்.

இதனை விடுதலைப் புலிகளின் தலைமை

(16ஆம் பக்கம் பார்க்க)

## இருபாலையில் கிரனேட் வீச்சு!

யாழ்ப்பாணம்,டிசெ.25

இருபாலைச் சந்திப் பகுதியில் நேற்று மாலை படையினர் மீது நடத்தப்பட்ட கிரனேட் தாக்குதலில் படையினர் தரப்பில் சிலர் காயமடைந்தனர் என்று தெரியவருகின்றது.

ரோந்து சென்ற படையினர் இருபாலை சந்தியில் ஒன்று கூடியவேளை அவர்களை நோக்கி கிரனேட் வீசப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது.

கிரனேட் வீசப்பட்டதை அடுத்து அப்பகுதியில் படையினர் சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்தனர். வீதி வழியே சென்ற பொது மக்கள் பலர் தாக்குதலுக்கு உள்ளாகினர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சை விரைந்து ஆரம்பிக்குமாறு தூதர்கள் புலிகளிடம் வற்புறுத்தல்!

## மோசமடையும் களநிலைவரம் பற்றி இணைத்தலைமை நாடுகள் அதிக கரிசனை

கிளிநொச்சி,டிசெ.25

போர்நிறுத்த உடன்படிக்கை சீர்கெட்டு யுத்தம் வெடிக்கக்கூடிய அபாயகரமான களநிலைவரம் உருவாகிவருவது குறித்து அதிக கரிசனை கொண்டுள்ள இணைத்தலைமை நாடுகள், இயன்றவரை விரைவாக பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு விடுதலைப் புலிகளிடம் வற்புறுத்திக் கேட்டிருக்கின்றன.

இணைத்தலைமை நாடுகளின் தூதர்கள் நேற்று அவசரமாக கிளிநொச்சிக்கு வருகை தந்து விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் பேச்சு நடத்தினர்.

பேராபத்தைச் சந்தித்திருக்கும் யுத்தநிறுத்த உடன்படிக்கையை சீர்செய்வது தொடர்பான பேச்சுக்களை காலம்தாழ்த்தாது உடனே ஆரம்பிக்கவேண்டிய அவசியத்தை அவர்கள் அப்போது வலியுறுத்தியிருக்கின்றனர்.

கொழும்பில் இருந்து வவுனியாவுக்கு விமானம்மூலம் வந்தடைந்த இணைத் தலைமை நாடுகளின் தூதர்களை புலிகளின் சோதனைச் சாவடியில் வைத்து விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பொறுப்பாளர் புலித்தேவன் வரவேற்றார். அங்கிருந்து அவர்கள் பின்னர் தமிழீழ காவல்துறையினரின் வழித்துணையுடன் ஏ-9 வீதி வழியே அழைத்துவரப்பட்டனர். தூதர்களுக்கும்

(16ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நோர்வேயில் பேசுவதே பொருத்தம் என்பதை அனைவரும் ஏற்க, அரசு மட்டும் எதிர்ப்பதேன்?

## தமிழ்ச்செல்வன் கேள்வி

கிளிநொச்சி,டிசெ.25

நோர்வேயின் அனுசரணையை சகலருமே ஏற்றுக்கொண்ட நிலையில் முதற்கட்டப் பேச்சுக்களை அங்கே நடத்துவதே பொருத்தம் என்பது எமது மக்களினதும் தலைமையினதும் விருப்பமாகும். ஆனால் அரசு மட்டும் நோர்வேயின் நடுநிலைப் போக்குகளை பலவீனப்படுத்தும் பிரசாரங்களை மேற்கொள்வதுடன் அங்கு பேச்சு நடத்துவதையும் எதிர்க்கின்றது. இது ஏன்?

- இவ்வாறு கேள்வி எழுப்பினார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

நேற்று கிளிநொச்சியில் இணைத்தலைமை நாடுகளின் தூதர்களோடு நடத்திய பேச்சின் விவரங்களை அவர் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு வெளியிட்டார். அப்போது அவர் கூறியதாவது:-

**கேள்வி:** இன்றைய பேச்சில் ஆராயப் பட்ட விடயங்கள் எவை?

**பதில் :** இணைத் தலைமை நாடுகளான ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம், நோர்வே, பிரிட்டன் போன்றவற்றின் தூதுவர்கள் உள்ளடக்கிய ஒரு குழு எம்முடன் பேச்சு நடத்தியது. தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைகள் தொடர்பாக அவர்கள் தீவிர கரிசனையைச் செலுத்தினார்கள். அது பற்றியே அதிகமாக எங்களுடன் விவாதித்தார்கள்.

இப்பொழுது ஏற்பட்டுள்ள பாரிய நெருக்கடி நிலைமைகளை எப்படிச் சீர்செய்வது என்பது பற்றியும் மக்களுடைய இந்தக் கொந்தளிப்பான நிலைமைகளைத் தணித்து ஓர் இயல்பு நிலையைக் கொண்டுவருவது பற்றியும் பேராபத்தைச் சந்தித்துள்ள இந்த யுத்தநிறுத்த சூழலை எந்த வழியில் சீர்படுத்தலாம் என்பது பற்றியும் அவர்களுடைய கரிசனைகள் இருந்தன. ஆகவே இதற்குத் தெளிவான விளக்கத்தை இன்று நாங்கள் கொடுத்துள்ளோம்.

ஏனெனில் அண்மைக் காலமாக எமது மக்கள் மீது இராணுவம் கட்டவிழ்த்துவிட்டுள்ள வெறியாட்டங்கள், படுமோசமான வன்முறைச் சம்பவங்கள் போன்றவற்றை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரவேண்டும். தொடர்ந்தும் எமது மக்கள் கொல்லப்படுவதும் தெருவில் நெருக்குவாரத்திற்கு உள்ளடக்கப்படுவதும் பெரிய தொந்தரவுகளுக்கு எமது மக்கள் முகம் கொடுப்பதும் நாளாந்த சம்பவங்களாகிவிட்டன.

அண்மைக்காலத்தில் அதுவும் எல்லாவற்றிலும் ஒரு தீவிரத்தன்மையாகப் புங்குடுதீவில் எங்களுடைய பெண்பிள்ளை ஒருவரை கடத்திக்கொண்டு சென்ற கடற்படையினர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி மிகமோசமான - கொடூரமான - ஒரு கொலையைச் செய்து அதை மறைக்க முற்பட்டுள்ளனர். அந்தச் சம்பவம் இப்போது தமிழ் மக்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. இதனை நாங்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றோம். ஏனெனில் பெண்கள் தொடர்பாகவும் சிறுவர்கள் தொடர்பாகவும் கரிசனை செலுத்துகின்ற இன்றைய உலகிலே அதுவும் இந்த சமாதான காலம் யுத்தநிறுத்தம் என்று சொல்லப்படுகின்ற இன்றைய சூழலில் கடந்த காலத்தை நினை ஊட்டுவது போல மிக மோசமான - மனித இனமே வெட்கித் தலை குனியக்கூடிய குரூரமான ஒரு வன்முறை ஒரு பிள்ளைக்கு - எங்களுடைய சகோதரிக்கு ஏற்பட்டிருப்பது மக்கள் மத்தியில் ஒரு தணிக்கமுடியாத ஒரு கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது என்பதை அவர்களுக்குச் சுட்டிக்காட்டியுள்ளோம்.

ஏற்கனவே கிருஷாந்தி குமாரசாமி, சாரதாம்பாள் என்ற வரிசையில் எங்களுடைய பல பெண்கள் இவ்வாறு கடத்தப்பட்டு குரூரமாகக் கொல்லப்பட்டுள்ளனர். சிங்களப் படையினருக்கு இது ஒரு வழமையாக உள்ளது. தற்போது மீண்டும் இவ்வாறான கொடூரம் நடந்துள்ளமையினால் மக்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அமைதி முறையில் போராட்டங்களை நடத்தினர். அதனை இராணுவம் வன்முறைகொண்டு அடக்கியதன் விளைவு தான் வன்முறைகள் அங்கு தீவிரமடையக் காரணமாக இருந்தது.

முக்கியமாக பல்கலைக்கழக மாணவர்கள் தாக்கப்பட்டமையும், துணைவேந்தர் தாக்கப்பட்டமை, பல்கலைக்கழக பேராசிரியர்கள் சுட்டுக்காயப்படுத்தப்பட்டமை போன்ற வன்முறைகள் இப்போது மக்களுக்கும் படையினருக்கும் இடையிலான முரண்பாட்டையும் மோதல் நிலைமையையும் தோற்றுவித்துள்ளன. இந்த நிலைமைகளைக் கட்டுக்குள் கொண்டுவரவேண்டுமென்றால் உடனடியாக யுத்தநிறுத்த அமுலாக்கத்தை உறுதி செய்யவேண்டும்.

யுத்தநிறுத்த அமுலாக்கம் என்பது எல்லா விதத்திலும் மக்களுக்கு நல்லதைச் செய்கின்ற, இயல்பு நிலையைக் கொண்டு வருகின்ற, இரு தரப்புமே ஏற்றுக்கொண்ட சரத்துக்களைக் கொண்டது.

யுத்தநிறுத்த உடன்பாட்டை நடைமுறைப் படுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். இதற்கு சர்வதேச சமூகம் உதவவேண்டும். சிறிலங்கா அரசு முன்நிபந்தனைகளை விதித்து யுத்தநிறுத்த அமுலாக்கப் பேச்சுவார்த்தைகளை இழுத்தடிப்பதை தவிர்க்கவேண்டும் என்பதை இச்சந்திப்பில் விரிவாக எடுத்து விளக்கியிருந்தோம்.

தற்போது ஏற்பட்டுள்ள பதற்றமான சூழலைக் கருத்தில் எடுத்து நிலைமைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர இணைத் தலைமை நாடுகள் உடனடியாக வருகைதந்து எம்மைச் சந்தித்துக் கருத்துக்களை அறியமுற்பட்டுள்ளமைக்கு நன்றி தெரிவிக்கின்றோம்.

அடுத்த கட்ட நகர்வுகளைச் செய்வதற்கு பல ஆலோசனைகளை வழங்கியமைக்கு நன்றி தெரிவிக்கின்றோம். இவ்விடயங்களில் அரச தரப்பு எவ்வளவு தூரம் ஓர் இணக்கப்பாட்டுக்கு வரும் என்பதுதான் இன்றைய நிலையில் கேள்வியாக உள்ளது.

**கே:** அரச தரப்பிடம் இருந்து ஏதாவது யோசனைகள் கொண்டுவந்தார்களா?

**ப:** தற்போதைய நெருக்கடி நிலைமையை எப்படித் தணிப்பது என்பது பற்றிய ஆலோசனையை இரு தரப்புக்கும் வழங்கியுள்ளார்கள். இந்த ஆலோசனைகளில் யுத்த அமுலாக்கம் பற்றி இருதரப்பும் பேசவேண்டும் என்பது முக்கிய ஆலோசனையாக இருந்தது. இதைத்தான் எம்மிடமும் தெரிவித்திருந்தார்கள்.

**கே:** ஜப்பானில் பேச்சுவார்த்தை நடைபெற வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டுள்ள நிலையில் தூதுக்குழுவினரின் பயணம் பற்றி?

**ப:** ஜப்பானியத் தூதுவர் கூட வருகை தந்திருந்தார். எமது நிலைப்பாட்டை ஜப்பான் தூதுவருக்கும் எடுத்து விளக்கினோம்.

ஜப்பானில் பேச்சுவார்த்தை நடத்துவதென்பதில் எமக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை. இருந்தாலும் நோர்வே அனுசரணைப் பணியை வழங்குவதாலும் அமைதி முயற்சிகளில் நோர்வே மிக முக்கிய பங்கை வகிப்பதாலும் நோர்வே நாட்டிலேதான் முதல் கட்டப் பேச்சுவார்த்தையை நடத்துவது பொருத்தமாக இருக்கும்.

நோர்வேயின் அனுசரணையை எல்லோரும் ஏற்றுக்கொண்ட நிலையில் நோர்வே ஒரு நடுநிலையான பொருத்தமான இடம். முதல் கட்டப் பேச்சுவார்த்தைகளை நோர்வேயில் நடத்துவதை எமது மக்களும் எமது தலைமைப்பீடமும் விரும்புகின்றது.

எமது தலைமைப்பீடத்தின் நிலைப்பாடாக நோர்வேயில் முதல்கட்ட யுத்த அமுலாக்கப் பேச்சுவார்த்தைகளை நடத்தலாம் என்பது பற்றி எமது தலைமைப்பீடம் உறுதியாக முடிவெடுத்துள்ளது என்பது பற்றியும் அதற்கான காரணங்களையும் விளக்கினோம்.

அண்மைக் காலத்தில் மஹிந்த ராஜ பக்ஷவோ ஆட்சிக் கூட்டில் உள்ளவர்களோ நோர்வே பற்றியும் ஐரோப்பிய ஒன்றியம் பற்றியும் கடுமையான விமர்சனங்களைச் செய்து நடுநிலைப் போக்குகளை பலவீனப் படுத்துகின்ற செயற்பாடுகளில் இறங்கிக் கொண்டு ஆசிய நாட்டில்தான் பேச்சுவார்த்தை, அனுசரணைப் பணி நோர்வேக்கு என்ற நிலைப்பாட்டை எடுப்பது அரசினுடைய முரண்பட்ட போக்கையும் தமிழ்மக்களுக்கு விதிக்கின்ற சதி முயற்சியாகத்தான் அரசின் செயற்பாடுகளைப் பார்க்கவேண்டியுள்ளது.

நோர்வேயை எல்லோரும் ஏற்றுக்கொண்டிருக்கின்றீர்கள். இணைத்தலைமை நாடுகள், உலக நாடுகள், ஸ்ரீலங்கா அரசு, தமிழீழ விடுதலைப் புலிகள் என எல்லோரும் ஏற்றுக் கொண்ட சூழலில் அனுசரணையாளர்கள் என்ற வகையில், நோர்வேயில் பேச்சுக்களை நடத்தலாம் என்பது மிகப்பொருத்தமாக இருக்கும்.

முக்கியமாக பேச்சுகள், யுத்தநிறுத்த உடன்படிக்கை தொடர்பாக இருக்கவேண்டும். யுத்த நிறுத்தத்தை அமுலாக்கம் செய்வதன் ஊடாக எமது மக்களை ஓரளவு அமைதிப்படுத்தலாம்.

மக்கள்மீது இராணுவ நெருக்குவாரங்களைக் கட்டவிழ்த்துவிட்டு மக்களை அமைதிப்படுத்த முயன்றால் அது ஒருபோதும் வெற்றியளிக்காது. இந்நிலைமைகளைச் சுட்டிக்காட்டி நோர்வேயில்தான் பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டும் என்பதை இன்றைய சந்திப்பில் ஆணித்தரமாக வலியுறுத்தியுள்ளோம். இதனை ஸ்ரீலங்கா அரசக்கும் மற்றும் அனைத்துத் தரப்புக்கும் எடுத்துச் சொல்வார்கள் என்று நம்புகின்றோம்.

**கே:** உலக வங்கி இலங்கைக்கு வழங்குகின்ற நிதியில் 51 வீதம் நிதியை நிறுத்தியுள்ளது. இந்நேரத்தில் தங்களுக்கு ஏதாவது அழுத்தங்கள் செலுத்தப்பட்டனவா?

**ப:** அழுத்தம் என்பதைவிட தங்களுடைய ஆலோசனைகளைத்தான் வழங்கியிருக்கின்றார்கள். தற்போதைய நிலைமைகளின் தீவிரத்தன்மையை உணர்ந்தவர்களாகக் காணப்பட்டார்கள். அதாவது, தற்பொழுது தமிழர் தாயகப் பகுதிகளில் மக்கள்மீது தீவிரப்படுத்தப்பட்டுள்ள வன்முறையில் அதன் எதிர்வினையாக படைத்தரப்பிலே ஏற்பட்டுள்ள அழிவுகள் பற்றியுமே தூதுக் குழுவினரின் உடனடிக் கரிசனையாக இருந்தது.

பேச்சுக்குச் செல்லவேண்டும் என்பதையே வலியுறுத்தினார்கள். ஏற்கனவே எமது தலைமைப்பீடத்தின் நிலைப்பாட்டைத் தெளிவு படுத்தியுள்ளோம். உடனடியாகவே பேச்சுக்களைத் தொடங்கவேண்டும். யுத்தநிறுத்த உடன்படிக்கை அமுலாக்கம் கொண்டு வரப் படவேண்டும் என்பதில் எமது தலைமைப் பீடத்திற்கு இருவேறு கருத்து இல்லை. எமது தலைமைப்பீடம் உறுதியான நிலைப்பாட்டோடு உள்ளது. ஆனால், பேச்சுவார்த்தை நடத்தும் இடம் தொடர்பாக நிபந்தனைகளை விதிப்பது ஏற்றுக்கொள்ளமுடியாது.

சர்வதேச சமூகத்திடமிருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் தமிழ்மக்களினது தொடர்புகளை அறுப்பதோ, பலவீனப்படுத்துவதையோ அனுமதிக்கமுடியாது. சர்வதேச சமூகத்தின் நடுநிலையும் சமதரப்பு என்ற ஏற்றுக்கொள்ளலும், ஆதரவும்தான் சமாதானத்தின் ஒரு பக்கபலமாக உள்ளது.

### கடிதம் எதுவும் வரவில்லை

**கே:** சமாதானப் பேச்சுக்கள் தொடர்பில் ஸ்ரீலங்கா அரசு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இரண்டாவது கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளதே?

**ப:** இதுவரை அவ்வாறான கடிதம் ஒன்றும் வரவில்லை. இன்று வருகைதந்த இணைத் தலைமை நாடுகளின் தூதுக்குழுவினர் ஜப்பானில் பேச்சுக்கள் நடத்த அரசு விரும்புவதாகத் தெரிவித்தனர். அதனை நாங்கள் நிராகரித்துள்ளோம். நோர்வேயின் முதற்கட்டப் பேச்சுக்களைத் தொடங்கி அடுத்தகட்டப் பேச்சுக்களை யோசிக்கலாம். அவசரமாக யுத்தநிறுத்த அமுலாக்கத்தில் எல்லோரும் கரிசனை கொள்ளவேண்டியவர்களாக உள்ளோம்.

இதுதான் வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவர உதவும். கடந்த நான்கு வருட யுத்தநிறுத்த சூழல், அமைதி முயற்சிகள் எல்லாம் எமது மக்களுக்கு வாழ்வியல் நெருக்கடிகளைக் கொடுத்துள்ளனவே தவிர எதுவித நன்மைகளையும் அளிக்கவில்லை. இராணுவ நெருக்குவாரங்களும் அடக்குமுறைகளும் அதிகமாகின்றன.

பொதுமக்கள்மீதான கொலைகளும் தாக்குதல்களும் குறிப்பாக இளம்பெண்களைக் கடத்தி படுகொலை செய்கின்றபோக்கு மக்களிடையோ கொந்தளிப்பு நிலைமையை ஏற்படுத்தியுள்ளது.

இராணுவம் யுத்தநிறுத்த உடன்படிக்கையை ஏற்று அதன்படி நடக்குமாக இருந்தாலே இயல்புநிலையைக் கொண்டுவருவது சாத்தியப்படும். இதன்னை நாம் தெளிவாக இன்று விளக்கியுள்ளோம்.

**கே:** இணைத்தலைமை நாடுகளில் இந்தியாவையும் உள்ளடக்க அரசு விரும்புகிறது. இதுபற்றி இன்றைய சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டதா?

**ப:** இணைத்தலைமை நாடுகளில் புதிதாக எவரையும் இணைத்துக்கொள்வது பற்றி எந்த நாடும் உத்தியோகபூர்வமாக கருத்தை முன்வைக்கவில்லை. ஊடகங்கள் மூலமாக மட்டுமே அறிகின்றோம்.

### மன்னார்த் தாக்குதல்

**கே:** மன்னாரில் நேற்று நடைபெற்ற தாக்குதலுக்கு அரசு விடுதலைப் புலிகள்மீது குற்றஞ்சாட்டியுள்ளதே...?

**ப:** இதை நாம் முற்றாக மறுக்கின்றோம். ஏனெனில், அண்மைக்காலமாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் பொதுமக்கள் வயது வேறுபாடின்றித் தாக்கப்படுகின்றார்கள்; கொல்லப்படுகின்றார்கள். வன்முறைகள் மிகப்பரந்தளவில். கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளன. இதன் எதிர்வினையாக படையினருக்கும் மக்களுக்கும் மத்தியில் மோதல்கள் நடைபெறுவதன் விளைவாக இவை நடந்திருக்கலாமே தவிர, இதனை விடுதலைப் புலிகள் செய்யவேண்டிய தேவை இல்லை. யுத்தநிறுத்த உடன்படிக்கையை விடுதலைப் புலிகள் இன்னும் மதித்து நடக்கின்ற போக்கையே கடைப்பிடித்து வருகின்றார்கள். விடுதலைப் புலிகள் இத்தகைய தாக்குதலைச் செய்யவேண்டுமாக இருந்தால், யுத்தநிறுத்த உடன்படிக்கையில் இருந்து விலகிக்கொண்டு தான் செய்வார்கள். யுத்தநிறுத்த உடன்படிக்கையை மதித்து செம்மையாக நடைமுறைப் படுத்தவே எமது தலைமைப்பீடம் வலியுறுத்திக்கொண்டிருக்கின்றது.

### பேச்சுக்கான வாய்ப்பு உண்டா?

**கே:** இன்றைய சந்திப்புக்குப்பின் நேரடிப் பேச்சுக்கள் உடனடியாக தொடங்குவதற்கான வாய்ப்புக்கள் உள்ளனவா?

**ப:** சர்வதேச சமூகத்தின் கரிசனையும் விருப்பமும் பேச்சுக்களை உடனடியாகத் தொடங்கவேண்டும் என்பதுதான். சர்வதேச சமூகத்தினதும், தமிழ்மக்களினதும், விடுதலைப் புலிகளினதும் விருப்பங்கள் ஒன்றாகவே இருக்கின்றன. இதற்கு இணங்கிவர வேண்டியது ஸ்ரீலங்கா அரசுதான்.

**கே:** ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களது நிவாரணம் தொடர்பாக?

**ப:** கடந்த நான்கு வருடங்களாக எடுக்கப்பட்ட முயற்சிகள் பற்றி ஒவ்வொன்றாகச் சுட்டிக்காட்டினோம். பேச்சுக்களின் தொடக்கத்தில் இயல்புநிலையைக் கொண்டுவர ஸ்ரீலங்கா அரசபடைகள் எப்படித் தவறின? எப்படி எப்படி பேச்சுக்கள் முடக்கப்பட்டன? உபகுழுக்கள் செயலிழக்கச் செய்யப்பட்டன. பேச்சுக்கள் முடக்கமடைந்த நிலையில், ஆழிப்பேரலைகள் தாக்கின. இதில் எங்கள் தேசம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது. அந்த நேரம் அரசுடன் இணைந்து மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்ள இணக்கம் தெரிவித்திருந்தோம்.

சர்வதேச சமூகத்தின் வேண்டுகோளுக்கு இணங்க அவர்களது அனுசரணையுடன் உருவாக்கப்பட்ட உடன்படிக்கையைக் கூட எந்த விதமான திருத்தங்களுமின்றி உடனடியாக ஏற்றுக்கொண்டு ஒப்பமிட்டோம். இதன்பின் பொதுக்கட்டமைப்பைச் சீர்குலைத்து எமது மக்களுக்கு பெரும் அவலத்தை ஏற்படுத்தினார்கள்.

ஒரு வருடம் நிறைவடைந்தும் பாதிக்கப்பட்ட மக்கள் எவ்வளவு நெருக்கடிகளை எதிர்நோக்கியிருக்கின்றனர் என்பதை நேரடியாகப் பார்ப்பவர்கள் உணரலாம்.

(16ஆம் பக்கம் பார்க்க)



இணைத் தலைமை நாடுகளின் தூதர்களோடு பேச்சு நடத்தும் புலிகளின் பிரதிநிதிகள்...

# தாக்குதலைச் சமாளிப்பது பற்றி பொலீஸ் நிலையத்தில் ஒத்திகை

யாழ்ப்பாணம் டிசெ.25

பெரும் எடுப்பில் தாக்குதல் நடத்தப்பட்டால் அதனை எவ்வாறு எதிர்கொண்டு முறியடிப்பது என்பது தொடர்பாக யாழ். பொலீஸ் நிலையத்தில் ஒத்திகை நடத்தப்பட்டிருக்கின்றது.

கடந்த இரு தினங்கள் இந்த ஒத்திகை நடத்தப்பட்டது என்பதை பொலீஸ் நிலைய வட்டாரங்கள் உறுதிப்படுத்தின.

குடாநாட்டில் படையினர் மற்றும் பொலீஸார் மீது பரவலாக நடத்தப்பட்டுவரும் சிறு சிறு தாக்குதல்கள் பெரும் எடுப்பிலான தாக்குதல்களாக மாறும் பட்சத்தில் அதனைச் சமாளிப்பது எப்படி என்பது பற்றி பொலீஸார் கவனம் செலுத்துகின்றனர்.

பொலீஸ் நிலையச் சுற்றாடலில் உள்ள வீதிகள் மூடப்பட்டு பெரும் எண்ணிக்கையான பொலீஸார் இந்த ஒத்திகை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

குடாநாட்டில் உள்ள ஏனைய பொலீஸ் நிலையங்களிலும் இதுபோன்ற தாக்குதல் முறியடிப்பு ஒத்திகை நடத்தப்பட இருப்பதாகவும் தெரியவந்தது. (ஐ-7)

# யாழ். இந்துக் கல்லூரி மாணவன் ஐஸ்கிறீம் வான் மோதி மரணம்!

வலி.தென்மேற்கு,டிசெ.25

சைக்கிளில் வந்த பாடசாலை மாணவன் ஒருவன் ஐஸ்கிறீம் வான் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானான். படுகாயமடைந்த அந்த மாணவன் பின்னர் உயிரிழந்தான்.

பண்டத்தரிப்பு சந்திப் பகுதியில் நேற்று நண்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கிறது.

ஐஸ்கிறீம் வான் மோதியதில் தரையில் தலையடிபட வீழ்ந்த இந்த மாணவன் படுகாயத்துடன் யாழ்.மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டான். எனினும் வழியில் அவன் உயிரிழந்தான் என்று கூறப்பட்டது.


உயிரிழந்த மாணவனின் சடலம் (படம்:நேசன்)

சில்லாலையைச் சேர்ந்த இந்திரசித்துதசன் (வயது 14) என்ற மாணவனே உயிரிழந்தான். இவர் யாழ். இந்துக் கல்லூரி மாணவன் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-15-135-86)

# பட்டாசு சத்தம் கேட்டு மிரண்ட படையினர் மக்களைத் தாக்கினர்!

## யாழ்.இந்துக் கல்லூரி அருகே சம்பவம்

யாழ்ப்பாணம்,டிசெ.25

பட்டாசு வெடிச் சத்தம்கேட்டு கலவரமடைந்த சிப்பாய்கள் வீதியில் சென்ற பொது மக்களை வழிமறித்துத் தாக்கினர்.

இச்சம்பவம் நேற்று நண்பகல் யாழ்.இந்துக் கல்லூரிக்கு அருகே காங்கேசன்துறை வீதியில் இடம்பெற்றது.

இந்த வீதிப் பகுதியில் படையினர் நின்றிருந்த இடத்தில் பட்டாசுகள் கொளுத்தி வீசப்பட்டன என்றும் படபடவென பட்டாசுகள் வெடித்தபோது தம்மீது தாக்குதல் நடத்தப்படுவதாக எண்ணிப் படையினர் மிரண்டனர் எனவும் - கூறப்படுகிறது.

படையினர் முதலில் வானத்தை நோக்கிச் சுட்டனர். பின்னர் வீதியில் காணப்பட்டோரை மறித்து தாக்கத் தொடங்கினர். இதனால், அந்தப் பகுதிகள் சிறிது நேரம் அல்லோலகல்லோலம் ஏற்பட்டது. (ஐ-7-86)

# சிறப்புக் கட்டுரைகள்


✱ அரசியல் ஆய்வாளர் மு. திருநாவுக்கரசு எழுதும் சமாதானத்துக்கான யுத்தமா அல்லது யுத்தத்துக்கான சமாதானமா?

✱ யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் இ.குமாரவடிவேல் எழுதும் மரண வலி உணரும் மனிதர்கள்-

ஆகிய இரண்டு சிறப்புத் தொடர் கட்டுரைகள் இன்று பிரசுரமாகவில்லை. உதயன் ஞாயிறு இதழில் வழமைபோல் அடுத்தவாரம் வெளிவரும்.




சாவகச்சேரியில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தின் போது - அப்பகுதியில் அழகு சாதனப் பொருள்கள் விற்பனை நிலையம் ஒன்றில் கடமையாற்றும் யோகராசா புஸ்பமலர் ( வயது-31) என்பவர் உயிரிழந்தது தெரிந்ததே. அவரது உடலையே படத்தில் காண்கிறீர்கள். (படம்:நேசன்)





நேற்றுமுன்தினம் இரவு யாழ். ஐந்து சந்திப் பகுதியில் படையினரின் சூட்டுக்கு இக்காகிப் படுகாயமடைந்த இளைஞர்கள் இருவரையே படங்களில் காண்கின்றீர்கள். இவர்களில் சண்முகநாதன் றொபின்சன் (வயது 18) அதிதீவிர சிகிச்சைப் பிரிவிலும் ஸ்ரீஸ்கந்தராசா கஜேந்திரன் (வயது 19) 24 ஆம் வார்ட்டிலும் சிகிச்சை பெறுகின்றனர்.

படுகாயமடைந்த இந்த இரண்டு இளைஞர்களும் நீண்ட நேரத்தின் பின்னர் சம்பவ இடத்தில் இருந்து தாங்களாகவே மோட்டார் சைக்கிளைச் செலுத்திக்கொண்டு ஆஸ்பத்திரிக்கு வந்தனர் என்று கூறப்படுகிறது. (படங்கள்: நேசன்)





சுகயீனமடைந்த குழந்தையைத் தமது ஓட்டோவில் ஏற்றிவந்த சமயம் படையினரின் சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் தம்பதியரையே படத்தில் காண்கிறீர்கள்.

11 மாதக் குழந்தையை இவர்கள் ஓட்டோவில் எடுத்துவந்தவேளை கோப்பாய், கரந்தன் வீதியில் நேற்றுமுன்தினம் அதிகாலை படையினர் ஓட்டோ மீது தாக்குதல் நடத்தினர். [படங்கள் : நேசன்]

# சம்பளம் வழங்காததால் ஆசிரியர்கள் அவதி!.

முல்லைத்தீவு கல்விவலயத்தைச் சேர்ந்த பாடசாலை ஒன்றில் கல்வி கற்பிற்கும் ஆசிரியர்களுக்கான இம்மாதத்துக்குரிய சம்பளப் பணம் இதுவரை வழங்கப்படவில்லை என்று தெரியவருகின்றது.

ஆசிரியர்களுக்குரிய சம்பள நாள் கடந்த 20ஆம் திகதி ஆகும். ஆனால், குறிப்பிட்ட பாடசாலை நிர்வாகத்துக்கும் வலயக் கல்விப் பணிமனைக்கும் இடையில் ஏற்பட்டதாகக் கூறப்படும் இழுபறியே சம்பளப் பணம் வழங்கப்படாமைக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

யாழ்ப்பாணம் உள்ளிட்ட பிறமாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் பலரும் இந்தப் பாடசாலையில் கல்வி கற்பித்து வருகின்றனர் என்றும் -

சம்பளத் தினமான கடந்த 20ஆம் திகதி சம்பளத்தைப் பெறுவதற்கென பாடசாலைக்குச் சென்ற இந்த ஆசிரியர்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர் என்றும் கூறப்படுகிறது. (எ-305-204)

# வளவை துப்புரவு செய்துகொண்டிருந்த அரச ஊழியர் மிதிவெடியில் சிக்கினார்

## அரியாலை மத்திய பகுதியில் நேற்றுச் சம்பவம்

அரியாலை மத்தியில் மிதிவெடிகள் அகற்றப்பட்டன என்று உறுதிப்படுத்திய பகுதியில் நேற்று மிதிவெடி ஒன்று வெடித்திருக்கிறது. இதில் அரச ஊழியர் ஒருவர் காலில் படுகாயமடைந்தார்.

அரியாலை மத்தி வைரவர் கோயில் பகுதியில் உள்ள தனது வீட்டின் வளவில் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த ஒருவரே மிதிவெடியில் சிக்கினார்.

நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் ஊழியரான ஜெயராமன் சிங்கராசா (வ்யது 42) என்பவரே மிதிவெடியில் சிக்கினார்.

அரியாலை மத்தி கிராம அலுவலர் பிரிவுக்குள் அடங்கும் இந்தப் பிரதேசம் படையினரால் மிதிவெடிகள் அகற்றப்பட்டு சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்னர் மக்கள் பாவனைக்கு உத்தரவாதப்படுத்திக் கையளிக்கப்பட்ட பகுதி ஆகும். (ஐ-86)

உங்கள் விமானப் பயணத்திற்கு!
Aero Lanka
In Domestic Operation
New way of flying



Head office
No.500,Galle Road,
Wellawatte,
Colombo-06
Tel:2505632-3 Fax:2500626
Jaffna office
No.86,PointPedro Road,
Jaffna. Tel:021-2226242
Fax:021-2225600
Branch
No:14,New Market Building
Chavakachcheri
Tel:021-2227979 Fax: 021-2227979
Trinco Office
No.47,Kandy Road,
Trincomalee.
Tel:026-2221519
Fax:026-2221519
யாழ்⇆கொழும்பு
யாழ்⇆திருகோணமலை⇆கொழும்பு

# ஆதிகோவிலடியில் அழகுற நிர்மாணித்த எம்.ஜி.ஆரின் சிலை நேற்றுத் திறப்பு

கரவெட்டி,டிசெ.25

வல்வை ஆதிகோவிலடி மக்களால் நிறுவப்பட்ட முன்னாள் தமிழக முதல்வர் எம்.ஜி. இராமச்சந்திரனின் ஆள் உயரச் சிலை நேற்று திறந்துவைக்கப்பட்டது.

ஆதிகோவிலடி மாவீரர் நினைவுப் பூங்காவில் இந்தச் சிலையை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் திரைநீக்கம் செய்துவைத்தார்.

எம்.ஜி.ஆர். நற்பணி மன்ற அமைப்பாளர் தி.ஜெயராஜ் தலைமையில் திறப்பு விழா இடம்பெற்றது.

ஆரம்பத்தில் மங்கள விளக்கினை வல்வை முத்துமாரிஅம்மன் கோயில் ஆலய பிரதம குரு சோ.தண்டபாணிக தேசிகர் ஏற்றினார். அவரைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப் பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் எம்.ஜி.ஆரின் சிலையின் திரையை நீக்கினார். அதை அடுத்து எம்.ஜி.ஆரின் சிலைக்கு மலர் மாலையை வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச பொதுமுகாமையாளர் க.சூரியகுமார், வல்வை கிராம சேவையாளர் சி.சிவபாலசிங்கம், சோ.தண்டபாணிக தேசிகர், இன்பருட்டி எம்.ஜி.ஆர். மன்றச் செயலாளர் எஸ். மணியண்ணா ஆகியோர் அணிவித்தனர்.

அவர்களைத் தொடர்ந்து பொதுமக்கள் சிலைக்கு மலர் தூவி வணங்கினர்.

எம்.ஜி.ஆரின் சிலையை அழகுற வடிவமைத்த தமிழகம், நாகபட்டினத்தைச் சேர்ந்த சிற்பி சோக்கிரடீஸ் அவர்களுக்கு வல்வை மாவட்ட வைத்திய அதிகாரி க.மயிலேறும் பெருமாள் பொன்னாடை போர்த்து மலர் மாலை அணிவித்து பணப் பரிசு வழங்கிக் கௌரவித்தார். பின்னர் நினைவுரைகள் இடம்பெற்றன. (ஐ-70)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

முதிரைப் பலகைகளில் மிகவும் தரமாக செய்த மேசை (4'-6''x 2'-6'') மற்றும் மிகவும் நல்ல நிலையிலுள்ள Sanyo Gas Cooker விற்பனைக்குண்டு. தொடர்பு: 176/1, நாவலர் வீதி, (பகவான் பார்மசிக்கு எதிராக) யாழ்ப்பாணம். T.P.: 222 7840. (44532)

கொழும்பு-6 (வெள்ளவத்தையில்) மிகவும் பிரபல்யம் வாய்ந்த Net Cafe விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: 0785243646. (44524)

270 xxx தொடரிலக்கமுடைய MF 135 (DL மொடல்) உழவு இயந்திரமும் பெட்டியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 115, பொன்னம்பலம் றோட், அரியாலை, யாழ்ப்பாணம். 0777170069. (44521)

## கார் விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையில் உள்ள New Model மாருதி சுசுக்கி வெள்ளை நிறக்கார் சகல ஆவணங்களுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 021-222 3604, 0777-158327. (44523)

## வீடு விற்பனைக்கு

வத்தளை, ஹெந்தலை பகுதியில் நிமலமரிய மாவத்தையில் 6 அறைகளைக் கொண்ட மாபிள் பதிக்கப்பட்ட அழகான மாடிவீடு 11½ பேர்ச் நிலத்துடனும் வாகனத் தரிப்பிடம், தொலைபேசி அனெக்ஸ் வசதிகளுடனும் நீர், மின்சாரம் என்பவற்றுடனும் கூடியது. தொடர்புகளுக்கு: T.P.: 2948543, 0773296338. (சி-47030)

ஏழாலை மேற்கு, உத்தமன் சிலையடி எனும் முகவரியில் 3 பரப்புக் காணியுடன் கூடிய சகல வசதிகளும் உள்ள வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: விஜயானந்தன் 0112739531 or 0602212317. (44455)

அரியாலை, சாஸ்திரியார் ஒழுங்கையில் இரண்டு பரப்புக் காணியும் கல்வீடு வளவும் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு: T.P.: 021 222 7246 (44341)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

சுத்தமான Dobermann Pincher & Dachshund குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (44372)

அழகிய பொமேரியன் நாய்க்குட்டிகள் கறுப்பு, வெள்ளை நிறங்களில் (ஆண்,பெண்) விற்பனைக்குண்டு. தொடர்பு: ஐ.பேரானந்தன் இல.37, 4ஆம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். (44374)

நல்ல இன கிறேடன் (காலிக்குயின்) இரண்டு வயது ஆண், பெண் நாய்களும், ஜேர்மன் செப்பேட் (தடுப்பூசி போட்டு பூச்சி அகற்றப்பட்டது) விற்பனைக்குண்டு. தொடர்பு: செல்லையா உருத்திரா, கேணியடி, கொக்குவில் மேற்கு. (44534)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை). தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர்வளவு), 19, முருகேசர்ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (44371)

## காகிதாதி/CD விற்பனைக்கு

பலாலி வீதி, கோண்டாவில் சந்தியில் இயங்கிய சதீஸ் புத்தகசாலையின் காகிதாதிகள், CD க்கள் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: முருகன் இல்லம், கோண்டாவில் வடக்கு, கோண்டாவில். T.P.: 0776915125. (44375)

## தவறிவிட்டது

நமசிவாயம் சந்திரகுமார் என்பவருடைய தே.அ.இல. 643095545V மானிப்பாய் வீதிக்கும் ஒட்டுமடம் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கோணாம் தோட்டம் சந்தி, தச்சுத் தொழிலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு ஒப்படைக்கவும். (44514)

## பூச்சாடிப் பிரியர்களுக்கு

றபர் துகள்களால் (Crumbed Rubber) தயாரிக்கப்பட்ட சிறிய, பெரிய கலர்ப் பூச்சாடிகள் விற்பனைக்குண்டு. வீட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் இலகுவில் இடம் மாற்றி வைக்கக்கூடியது. தொடர்பு: க.ஸ்ரீபதி, நவரட்ணராஜா வீதி, நெட்டிலிப்பாய், கோண்டாவில் (DSI ரயர் களஞ்சியத்திற்கு அருகில்). T.P.: 021-4590372 (சி-46731)

### Refresh System

*புதிய, பழைய கணனிகள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும். தொடர்பு:* 077-3253104, 077-6279671. **சுதுமலை, மானிப்பாய்,**

(44175)(21.16.17)

## வீடு வாடகைக்கு

இல.170, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குழி, கணக்கர் சந்திக்கு அருகில் சகல வசதிகளுடனும் கூடிய 5 அறைகள், 2 பெரிய ஹோல், வாகனத் தரிப்பிட வசதி மற்றும் நன்நீர் வசதியுடன் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. தனியார் நிறுவனங்களுக்கும் வியாபார நிறுவனங்களுக்கும் உகந்தது. தொடர்பு: 021 - 222 7530, 021 - 222 6612.(44305)

பழைய பூங்கா றோட், சொலமன் வீதியில் அமைந்துள்ள சகல வசதிகளும் கொண்ட 5 அறைகள், ஒரு பெரிய ஹோல், வாகனத் தரிப்பிடம் கொண்ட புதிய மாடி வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: 222 5539, 0777 030015, 0777 488185. (44497)

மருதடிவீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சகல வசதிகளும் கொண்ட பெரிய வீடு வாடகைக்குண்டு. றக்கா வீதி, சென். ஜோண் பொஸ்கோ பாடசாலைக்கு மிக அருகில் உள்ளது N.G.O விரும்பத்தக்கது தொடர்பு: 0776176921. (44490)

ICRC சந்திக்கு அண்மையில் யாழ்.கோயில் வீதியில் சகல வசதிகளும் கொண்ட பெரிய வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: 0773 221413, 0112[illegible]699. (சி-47053)

## House to Rent

A House at palaly Road by the side of Nallur [illegible]A's Office with 9 rooms, 2 halls, 2 kitchen and 5 bathrooms of floor area 4000 sq.ft with water supply and electricity. Available for immediate occupation. NGO's preferred. Contact No. 7491, or 7267. (44487)

## திருமண சேவை

இருமனம் கலந்தால் திருமணம்! இருமனம் கலக்கும் தராதரமுடையனவா? எப்படிக் கண்டறிவது?...சிரமமே இல்லை! இன்றே திருமணம் நிறைவேற்றுத் துறையில் தசாப்த கால நிறைவெய்தும் 'சுயதெரிவுமுறை முன்னோடி' பிரபல திருமண ஆலோசகர் குரும்பசிட்டியூர் மாயவேல் அமுதனைச் சந்தியுங்கள்! சந்திப்பு முன்னேற்பாட்டு ஒழுங்கு முறையில் மாத்திரம்! மேலதிக விவரங்களைக் கிழமை நாள்களில் மாத்திரம் பி.ப 4.30 இற்கு மேல் வேல்அமுதனிடம் விசாரித்தறிக! வேல் அமுதனின் கொழும்பு நேரடித் தொலைபேசி 2360488, 4514396.

(சி-47015)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்ப, 1967 ஆம் ஆண்டு பிறந்த, சதய நட்சத்திரம் நோர்வேயில் குடியுரிமை உடைய நிரந்தர தொழில் புரியும் (தற்போது இங்கு வந்துள்ளார்) நற்பண்புள்ள மணமகனுக்கு நற்பண்புடைய படித்த மணமகளைத் தாயார் தேடுகின்றார். தொடர்பு: 2773 மே/பா உதயன். (44540)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1982ஆம் ஆண்டு பிறந்த, உதயத்தில் செவ்வாயுடைய (36½) மணமகளிற்கு தகுந்த மணமகன் தேவை. தொடர்பு: விளம்பர இல. 2770, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (44377)

• யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, திருவோண நட்சத்திரம், 35 வயது, தொழில் புரியும், பட்டதாரி மணப்பெண்ணுக்கு வெளிநாட்டிலோ/ உள்நாட்டிலோ நன்கு படித்த நல்ல தொழில் புரியும் மணமகன் தேவை. குடும்ப விவரம் ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 2772. மே/பா உதயன். (44393)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, நன்கு படித்த, 36 வயது, திருவாதிரை நட்சத்திரம் செவ்வாய்க்குற்றமுள்ள பெண்ணுக்கு வெளிநாட்டிலோ/உள்நாட்டிலோ நன்கு படித்த நல்ல தொழில் புரியும் மணமகன் தேவை. குடும்ப விவரம் ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 2771 மே/பா உதயன். (44392)

யாழ்.இந்து, பட்டம் பெற்ற, நிரந்தர அரச உத்தியோகத்தராக வேலை பார்க்கும் மணமகளுக்கு 39-43 வயதிற்குட்பட்ட படித்த மணமகன் தேவை. தொடர்பு: 0779577323. (44284)

## வீடு விற்பனைக்கு

இலங்கை வடமாகாணம் கோப்பாயில், பருத்தித்துறை வீதியில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்கு முன்பாக மிகவும் பிரபல்யமான இடத்தில் வசதிகளுடன் கூடிய வீடு ஒன்றும் அருகில் தோட்டங்களும் விற்பனைக்குண்டு. வாங்க விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண். 2-728494

(44336)(21.16.17)

## மகளிருக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

சாதாரண Facial அழகுக்கலையின் அடிப்படைப் பயிற்சி, இந்து-கிறிஸ்தவ மணப்பெண் அலங்காரம் மற்றும் மடிசார் உட்பட 4 விதமாக சேலை அணியும் பயிலமர்வுகள்

காலம் : **டிசெம்பர் 30ஆம், 31ஆம் திகதிகளில்**

இடம் : **கலாலயா பயிற்சியகம் யாழ்ப்பாணம்**

*(பெருமாள் கோயிலுக்கு அருகில்)*

**இருநாள்களுக்குமான கட்டணம் ரூபா 1000/= மட்டும்**

(44543)(21.16.17) -பதிவாளர்

## இணுவில் கிழக்கு இளைஞர் கழகம்
## ஆண்டு நிறைவும் பரிசளிப்பு விழாவும் - 2005

காலம் : **இன்று (25.12.2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணி**

இடம் : **இணுவில் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபம்**

தலைவர்: இ.தமிழரசன் (இணுவில் கிழக்கு, இளைஞர்கழகம்)

பிரதம விருந்தினர் : திரு.செ.குபேரநாதன் (கோட்டக்கல்விப் பணிப்பாளர், உடுவில் கோட்டம்)

சிறப்பு விருந்தினர் : திரு.தி.சிவதட்சணாமூர்த்தி (உதவி இயக்குநர், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் யாழ் மாவட்டம்)

• திரு.சக்திவேல் (மாவட்ட இளைஞர் சேவை அலுவலர்)

திரு.பெ.கனகசபாபதி (தலைவர், நல்லூர் ப.நோ.கூ.ச)

★கழகத்தால் நடத்தப்பட்ட பயிற்சி நெறிகளுக்கான சான்றிதழ் வழங்கல் இடம்பெறும்.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

இளந்தாரி கோயிலடி, இணுவில். (44538) **இணுவில் கிழக்கு இளைஞர் கழகம்**

# Oxfam

**Oxfam GB is an International Non Governmental Organization (INGO) based in the United Kingdom, working with others to finding lasting solutions to poverty and suffering. Oxfam has been working is Srilanka since 1986 and has been actively involved in water and sanitation provision, shelter, agriculture, gender equity and rights, food and security income, and legal literacy and rights. We are currently focusing on the immediate response to the thousands of people affected by the War, and Tsunami, and working towards addressing the longer - term development needs.**

**The following vacancies in our North office (Kilinochchi) are to be filled with immediate effect.**

1. **Administration Assistant**
   The ideal candidate should have a sound academic background preferably a degree in Business Administration / Commerce and be familiar will IT Packages.
2. **Finance Assistant**
   The ideal candidate should have an adequate academic background perferably a degree in Business Administration / Commerce and be familiar will IT Packages.
3. **Programme Assistant - Gender and Protection**
   The ideal candidate should have an adequate academic background perferably a degree in sociology and be familiar with IT packages.
4. **Programme Assistant - Emergency Preparedness**
   The ideal candidate should have an adequate academic background perferably a degree in Science and be familiar with IT packages.
5. **Logistic Assistant**
   The ideal candidate should have an adequate academic backgound preferably a degree in any field and be familiar with IT packages.
6. **Water and Sanitation Assistant**
   The ideal candidate should have an adequate academic background preferably a degree in civil engineering / National Diploma in Technology (NDT) and be familiar with IT packages.
7. **Drivers**
   The ideal candidate should possess a valid driving license for all class vehicles and should have minimum two years experience.
8. **Guards**
   The ideal candidate should have completed the secondary education.

**Please note that positions 1, 2, 3, 4, 5 and 6 require fluency in English.**

"Walk in interviwes" will be held during 27th of December 2005 to 30th of December 2005 between 9 a.m. to 3 p.m. at North Office.

**Note: Please bring all the relevant documents.**

**Address:**
**Oxfam GB-North,**
**33, Kanagapuram, Kilinochchi.**

Women are encouraged to apply.

(C/47043)

**சாதனைக் கெடு**

பொன்னாலைச் சந்தியில் நிலைகொண்டுள்ள கடற்படையினர் நேற்றுமுதல் தமது நடவடிக்கைகளைத் தீவிரப்பத்தியுள்ளனர்.

இதனால், யாழ்ப்பாணத்திலிருந்து காரைநகருக்குச் செல்வோரும், காரைநகரிலிருந்து யாழ்ப்பாணம் பயணிப் போரும் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடுவதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக, மேற்படி சோதனைச் சாவடியை வந்தடையும் சகல வாகனங்களில் பயணிப்போரும் வாகனங்களிலிருந்து இறக்கப்பட்டு சோதனையிடப்படுகின்றனர்.

அடையாள அட்டைகள் பரிசோதிக்கப்படுவதுடன் எடுத்துவரப்படும் பொருள்களும் வாகனங்களிலிருந்து இறக்கப்பட்டு சோதனையிடப்படுகின்றன.

# அட்டசீலங்களுடன் இலங்கை வந்தார் மகிந்தர்; அரைக்கால் சமஷ்டியுடன் இந்தியாவுக்கு மஹிந்தா!


**ஆய்வியலில் கொள்கை ஆய்வு என்பது பயன் பொருத்தமான ஒரு சீரிய துறை. இத்துறையில் நாம் சிறப்பான வளர்ச்சியடைய அரும்பாடுபட வேண்டும். இக்கட்டுரை கொள்கை ஆய்வுத்துறையில் ஒரு சிறு முயற்சி மட்டுமே. இது மனவிருப்பங்களுக்கு வெளியே அறிவியலின் வழியில் அரசியல் நிர்ணயங்களை எடைபோடும் ஒரு துறையாகும்.**

ஜனாதிபதி மஹிந்த இராஜபக்ஷதான் இலங்கை என்றில்லை. இலங்கை ஓர் ஆயிரங் காலப் பயிர். இராஜபக்ஷவின் ஆகக்கூடிய அதிகாரகாலம் பன்னிரண்டு ஆண்டுகள்தான். எனவே, இராஜபக்ஷவின் மீது விருப்பற்ற நாடுகளாயினும் சரி அவை இலங்கையை உதாசீனம் செய்யமாட்டா. எனவே, மேற்குலகம் இராஜபக்ஷவிற்கும் அப்பால் இலங்கையை அனுசரித்துப் போகும் ஒரு கொள்கையையே வகுக்கமுடியும் என்பதுதான் அரசியல் யதார்த்தம்.

இராஜபக்ஷ என்ற நபருக்கு அப்பால் அரசுக்கும், அரசுக்கும் இடையேயான தவிர்க்க முடியாத நலன்களின் நிமித்தம் அமெரிக்காவும் அதன் தலைமையிலான மேற்குலக நாடுகளும் இலங்கைக்கு உதவும் என்பது ஓர் அடிப்படை உண்மை. அந்த வகையில் தனது பகட்டுமிகு மேற்குலக எதிர்ப்பிற்கும் அப்பால் தனக்கு மேற்குலகத்தின் அடிப்படை ஆதரவு உண்டும் என்பதும் இராஜபக்ஷவிற்கு நன்கு தெரியும்.

ஜனாதிபதி இராஜபக்ஷ வாயளவில் எவ்வளவுதான் மேற்குல எதிர்ப்புவாதம் புரிந்தாலும் செயலளவில் அவரது கரங்கள் மேற்குலகிடம் தனது பிச்சாபாத்திரத்தை முழந்தாளிட்டு ஏந்த ஒரு போதும் தவறமாட்டா. ஆதலால் இராஜபக்ஷவை கட்டுப்படுத்தவல்ல சூத்திரக்கயிறு அமெரிக்காவினதும் மேற்குலகினதும் கையில்தான் உண்டு என்பது இன்னோர் உண்மையாகும். இராஜபக்ஷவின் ஆட்சியின் கீழ் மேற்குலக முதலீடு குன்றினாலும் மேற்குலகின் நிதியாதிக்கம் குன்றமாட்டாது.





நிதி ஆதிக்கம் என்பதுதான் அமெரிக்கா தலைமையிலான உலகமயமாக்களின் முதுகெலும்பு. நிதிக்கு எவர் கையேந்துகின்றாரோ அவர் ஏகாதிபத்தியத்திடம் மண்டியிடுவார். ஆதலால் ஏகாதிபத்திய எதிர்ப்புவாதம் என்ற இராஜபக்ஷவினதும் ஜே.வி.பியினதும் கோஷங்கள் வெறும் வெற்று வேட்டுக்களேயாகும்.

அதேவேளை இன்னொரு சுவாரசியமான உண்மையுண்டு. அதாவது அமெரிக்காவை வாயளவில் எதிர்த்துக்கொண்டு ஜப்பானை வாரியணைப்பது பற்றிய விவகாரமாகும். அமெரிக்காவினது ஆசியக் கூட்டாளி ஜப்பானாகும். அதாவது அமெரிக்காவினது உலகளாவிய உலகமயமாக்கல் கொள்கையின் ஆசி

## கொள்கை ஆய்வு

யப் பங்காளி ஜப்பான்தான். எனவே, அவர்கள் கூறும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை ஜப்பானிய நட்பிலிருந்து பிரித்துப் பார்க்கமுடியாது. இதன்படி ஜப்பானை ஆதரிப்பது என்பது அமெரிக்காவை ஆதரிப்பதென்பதுதான் அடிப்படையான அரசியற் பொருளாதார உண்மையாகும். இரண்டாம் உலக மகா யுத்த காலத்தில் '' ஆசிய ஆசியர்களுக்கே'' என்ற ஆசிய வாதத்தைப் புரிந்த ஜப்பான் ஆசிய நாடுகளை ஆக்கிரமித்த விதம் வரலாற்றில் மறக்க முடியாத பாடமாகும்.

சிங்கள ஆட்சியாளர்களிடம் காணப்படும் அடிப்படையான மன்னராட்சி எதேச்சாதிகாரக் கலாசாரத்துடன் இதனை மேலும் இணைத்துப் பார்க்க வேண்டும். இத்தகைய எலும்புக் கூட்டின் பின்னணியில் தான் இராஜபக்ஷவின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கையைப் புரிந்துகொள்ளல் வேண்டும். இந்த வகையில் இராஜபக்ஷ ஓர் ஏகாதிபத்திய எதிர்ப்பாளராக நடைமுறையில் இல்லை என்பதே அதன் உண்மையாகும். இது நாணயத்தின் ஒருபக்கம்.

### இராஜபக்ஷ மீதான ஜே.வி.பியின் பிடி தளர்ந்தது

அடுத்து, நாணயத்தின் மறுபக்கமான உள்நாட்டு விவகாரத்தைப் பார்ப்போம். உண்மையான நடைமுறை அர்த்தத்தில் பரிசீலனை செய்யுமிடத்து இலங்கையின் ஐந்தாவது ஜனாதிபதிப் பதவி என்பது அதாவது இராஜபக்ஷவின் ஜனாதிபதிப் பதவி என்பது

## புலிகளையும் தமிழர்களையும் பழிவாங்கும் உணர்வுடன் ராஜபக்ஷவை நெருங்கத் தொடங்குகிறார் ரணில்

ஜே.வி.பிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் பிறந்த குழந்தையாகும். ஆதலால் இராஜபக்ஷவை எதிர்த்துத் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த ரணில் விக்கிரமசிங்காவின் ஆத்திரம் முற்றிலும் புலிகளின் பக்கமும் ஜே.வி.பியின் பக்கமுமே திரும்பியுள்ளது. இதில் இக்குழந்தையைத் தற்காலிகமாக ரணில் தத்தெடுப்பதன் மூலம் ஓர் அரசியல் வியூகத்தை வகுக்கவிரும்புகிறார். இதைச் சற்று விவரமாக ஆராயவேண்டும்.

இராஜபக்ஷாவின் வெற்றியானது சுதந்திரக்கட்சியினரை ஐக்கியப்படுத்திவிட்டது என்பது மட்டுமல்ல அது ஐ.தே.கவையும் இராஜபக்ஷவிற்கு அனுசரணையாகிவிட்டது. இது விடயத்தில் ஜே.வி.பி. மிகப்பெரும் தோல்வியைச் சந்தித்துவிட்டது. சு.கவிற்குள் ஏற்பட்டிருந்த குடும்பாதிக்கப் பிளவை ஜே.வி.பி. தனக்குச் சாதகமாய் அறுவடை செய்ய முற்பட்டது. இராஜபக்ஷ வெற்றி பெற்றதும் செத்த நாயில் உண்ணி கழன்றது போல திருமதி சந்திரிகாவுடன் ஒட்டிக்கொண்டிருந்தோர் எல்லாம் இராஜபக்ஷவை நோக்கி அணிதிரளலாயினர். இதனால் பிளவு ஒட்டப்பட்டுவிட்டது. மறுவளமாக ஜே.வி.பியின் தனிப்பெரும் சக்தியாலன்றி புலிகளின் நிலைப்பாட்டால் தான் இராஜபக்ஷ வெற்றி பெற்றார் என்ற நிலையில் இராஜபக்ஷ மீதான ஜே.வி.பியின் பிடி தளர்ந்தது.

அதேவேளை, புலிகளின் நிலைப்பாட்டா

## ஜே.வி.பியினரின் தப்புக் கணக்கால் அரசியல் அனாதைகளாக அவர்கள்



இந்தியாவின் அதிகாரப் பரவலாக்கல் மாதிரியைப் பார்க்கும் ஜனாதிபதி.
(நன்றி: டெய்லி மிரர்)

லேயேதான் தோல்வியடைந்ததாக ஆத்திரப்படும் ரணில், புலிகளையும் தமிழரையும் குரூரமாய்ப் பழிவாங்கவேண்டுமென்ற உணர்வில் இராஜபக்ஷவை நெருங்கத் தொடங்கிவிட்டார். அதுவும் ஜே.வி.பியின் மீதான தங்குநிலைமை இராஜபக்ஷவிற்குக் குறைந்துள்ளது. ரணிலினதும் ஐ.தே.கவினதும் நிலைப்பாட்டை வரலாற்றின் இன்னோர் இரத்தோட்டத்திற்கூடாக நாம் ஆராயவேண்டும். ரணிலின் இப்போதைய பிரதான எதிரிகள் ஜே.வி.பியினரும் புலிகளும்தான். உண்மையில் இராஜபக்ஷ இப்போது ஜே.வி.பியின் தயவில்தான் நாடாளுமன்றத்தை தன்கையில் வைத்திருக்கின்றார். இந்நிலையில் இராஜபக்ஷவிற்கு நாடாளுமன்றத்தில் அனுசரணையாக இருப்பதன் மூலம் ஜே.வி.பியினரின் பிடியிலிருந்து இராஜபக்ஷவை விடுவிக்க ரணில் விரும்புகிறார் போலத் தெரிகின்றது. இது முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் தத்துவம். இதை அவரது வாரிசு இப்போது சரிவரப் பிரயோகிப்பதுபோல் தெரிகின்றது. இது ஜே.வி.பிக்கு இன்னொரு மீளமுடியாத பின்னடைவாகத் தோன்றுகின்றது.

இந்நிலையில் புலிகளின் தேர்தல் நிலைப்பாடுதான் தம்மை ஓர் அரசியல் அநாதையாக்கிவிட்டதாக ஜே.வி.பியினர் இப்போது உணர்கின்றனர். அப்படியாயின் புலிகள் தோற்கடித்தது ரணிலை மட்டுமல்ல கூடவே ஜே.வி.பியினரையும்தான். ஜே.வி.பியினர் தமது ஏக பலத்தில்தான் இராஜபக்ஷ வெல்லுவார். என்றும், அதன் மூலம் தாமே இராஜபக்ஷ அரசாங்கத்தின் உண்மையான நடத்துநர் என்றும் போட்டிருந்த கணக்க தப்பிப் போய் விட்டது. புலிகளைப் பற்றிய ஜே.வி.பியின் தப்புக் கணக்குத்தான் ஜே.வி.பியை அரசியல் அநாதையாக்கியுள்ளது. இப்பின்னணியில் ஜே.வி.பியினர் புலிகளின் மீது வெக்காறான சினம் கொண்டுள்ளனர். இத்தகைய சூழலில் ஜே.வி.பியினரை ஓரங்கட்டுவது இலகுவானதென ஐ.தே.க. கருதுவதால் அதற்கேற்ப இராஜபக்ஷவிற்கு ஊன்றுகோலாயிருக்க விரும்புகின்றனர்.

இது பார்வைக்கு விநோதமாயிருக்கும் ஓர் உண்மை யாதார்த்தம். இதற்கு வரலாற்றில் ஏகப்பட்ட உதாரணங்களுண்டு. இரண்டாம் உலக யுத்தத்தின் பின்பு அப்போது பிரதமராயிருந்த வின்சன் சேர்ச்சிலை தொழிற்கட்சி தோற்கடித்ததும் தொழிற்கட்சியில் தனக்கு சாதகமாயிருக்கவல்ல அல்லிப் பிரபுவை சேர்ச்சில் பிரதமராக்கி ஆதரித்தமை இங்கும் நினைவு கூரத்தக்கது. இதன் மூலம் தொழிற்கட்சியைத் தீவிர தொழிற்கட்சி வாதிகளிடம் சிக்கவிடாது சேர்ச்சில் தடுத்துவிட்டார். இதன்படி பார்க்கையில் இப்போது தோற்றப்பாடுகளுக்கு வெளியே உள்நாட்டு அர்த்தத்தில் இராஜபக்ஷ ஐ.தே.க. மொத்தையில் ஒரு புதிய கள்ளாக உள்ளார்.

மேற்கூறிய வெளிநாட்டு, உள்நாட்டு அரசியல் அர்த்தத்தின் பின்னணியில்தான் இராஜபக்ஷவின் அரசியல் நிலைப்பாட்டை அவரது மகிந்த சிந்தனையை நாம் மதிப்பீடு செய்ய வேண்டும். இத்தகைய அரசியல் யதார்த்தத்தினால் வடிவமைக்கப்பட்ட ஓர் அரசியல் வார்ப்புச் சிலையாக இராஜபக்ஷ இந்தியாவிற்கு தனது முதலாவது அரசுமுறை பயணத்தை மேற்கொள்கின்றார். இப்போது காணப்படும் இஸ்லாமிய எதிர்ப்பு உலக அரசியலின் நிமித்தமும் அதனுடன் இணைந்த உலகமயமாக்கலின் நிமித்தமும் இந்தியா மேற்குலகின் ஒரு நல்ல நண்பனாகும். அதேவேளை இந்தியாவிற்கு இலங்கை அரசியல் அதன் வாசற்படிப் பிரச்சினையாகும். ஆதலால் இராஜபக்ஷாவினது இப்போதைய நிலைப்பாடானது அமெரிக்க நலன் - இந்திய நலன் இலங்கையின் இராஜபக்ஷவினது உள்நாட்டு ஆதிக்க நலன் ஆகிய நிலவரங்கள் அனைத்திற்கும் இடையேயான ஒரு சமன் செய்தற்போக்கைப் கொண்டதாய் அமையவேண்டியுள்ளது.

### அரசியல், பொருளாதார யதார்த்தத்தின் கொடுக்குப்பிடியால் உண்டாகும் தீர்மானங்கள்

அரசியல் தீர்மானங்கள் மனவேகங்களினாலும் ரம்மியமான ஆசைகளினாலும் நிர்ணயமாபவையல்ல. மாறாக அரசியற் பொருளாதார யதார்த்தத்தின் கொடுக்குப் பிடியில் நிர்ணயமாகின்றன. இந்நிலையில் இராஜபக்ஷ எவ்வளவுதான் தமிழின எதிர்ப்புவாதத்தைக் கொண்டவராக இருந்தாலும் அவர் யதார்த்தத்திற்கு வளைந்து கொடுக்கவேண்டியவராகவே இருப்பார். அரசியல்வாதிகளின் வளைந்து நெளிதலுக்கு வெளியே அரசியல் பொருளாதாரத்தின் தர்க்கபூர்வப்போக்கே இறுதியானது என்பது உண்மையானது. ஆயினும் வளைந்து நெளிதலுக்கென ஒரு தற்காலிகப் பாத்திரம் இருக்கவே செய்யும். அதன்படி இராஜபக்ஷ இந்தியாவுடன் இனப்பிரச்சினைக்கான அரசியற் தீர்வு பற்றி கொள்கையை முன்வைத்தே ஆகவேண்டும்.

மகிந்த சிந்தனையில் சொல்லப்பட்டிருக்கும் ஒற்றையாட்சி என்பது அவர் தனது காலில் மாட்டியிருக்கும் ஒரு விலங்கு. இப்போது அந்த ஒற்றையாட்சி என்ற விலங்குதான் ஜே.வி.பியினருக்கு உள்ள உளவியல் ரீதியான ஒரே ஒரு அரசியல் பலம். ஜே.வி.பி. - மஹிந்தசிந்தனையில் அல்லது அதன் ஒற்றையாட்சி சங்கிலியில் தொங்கியெழும்பி கொழும்பைக் குழப்பவல்ல சக்தியாக மாற அதற்கு கால அவகாசம் தேவைப்படுகின்றது. தன்னளவில் சமஷ்டி மனப்பாங்கைக் கொண்ட மேற்குலகம் அந்த அடிப்டையில் இராஜப்பக்ஷவிடம் ஒரு தீர்வைக் கோருகின்றது. இன்றைநிலையில் இந்தியாவிற்கு மனவிருப்பத்திற்குரிய தீர்வு எதுவும் இலங்கையிடம் இல்லை. ஆதலால் இருக்கும் நிலையைப் பேணுவதுதான் தனக்கிருக்கக் கூடிய ஆகக்கூடிய தெரிவென புதுடில்லி கருதுகின்றது. ஆதலால் மேற்குலகோ, இந்தியாவோ யுத்தத்தை விரும்பவில்லை. எனவே யுத்தத்திற்கு எதிராக பயன்படுத்தக்கூடிய தமது சக்திகள் அனைத்தையும் பயன்படுத்த விரும்புகின்றன. இதன்படி யுத்தத்தை வெடிக்கவிடாது தடுப்பதே வெளிநாடுகள் அனைத்தினதும் முதல்நிலைச் சமரச மையமாய் இப்போதுள்ளது. இதற்குப் பொருத்தமான வகையில் அல்லது ஈடுகொடுக்கும் வகையில் இராஜபக்ஷ ஒரு தீர்வுத்திட்டம் பற்றி கதைத்தாக வேண்டியுள்ளது. அது எது?

இராஜபக்ஷவிடம் ஒரு நியாயமான தீர் விருப்பதாக அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த ஜப்பானிய விசேட தூதர் யசூசி அகாசி கூறியுள்ளமை கவனிக்கத்தக்கது. அதன்படி பார்க்கையில் அகாஷியிடம் இராஜபக்ஷ தனது தீர்வுத்திட்டத்தை கூறியோ அல்லது காட்டியோ உள்ளார்போலத் தெரிகின்றது. அவர் இந்தக் கருத்தை வெளியிட்ட இடம் கிழக்கு மாகாணமாகும். எல்லாவற்றையும் வைத்துப் பார்க்கும் போது இராஜபக்ஷ முன்வைக்கவுள்ள தீர்வுத்திட்டத்தின் போக்கை ஓரளவு விளங்குவது சாத்தியம். எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்காவின் பிராந்திய சபைகள் திட்டம் தான் அவரது தீர்வுத்திட்டதின் அடிப்படை போல் தெரிகின்றது. அப்பிராந் திய சபை முறையை சற்றுப் பூசி மெழுகி அரைக்கால் சமஷ்டி முறை ஒன்றை உருவாக்க அவர் தயாராகின்றார். பண்டா - செல்வா ஒப்பந்தத்தின் கீழான பிராந்திய சபைகளானவை ஓர் ஒற்றையாட்சி முறையின் கீழ் தமிழ் பேசும் பிராந்தியங்களுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் ஒரு முறையாகும். பிரிட்டன் ஓர் ஒற்றையாட்சி நாடென்றும், அங்கு ஸ்கொட் லாண்டிற்கு பிராந்திய அதிகாரம் பங்களிக் கப்பட்டிருப்பதாகவும் காரணம்





**மு.திருநாவுக்கரசு**
(அரசியல் ஆய்வாளர்)

காட்டி இராஜபக்ஷ மேற்குலகிற்கும் ஒரு விளக்கமளிக்க ஓர் ஏதுவாய் அமையலாம். ஸ்கொட்லாண்ட் வகை பிராந்திய ஆட்சி முறையை ஒற்றை யாட்சி என்று சிங்களவர்களுக்கும் அதுதான் சமஷ்டி என்று தமிழர்களுக்கும் இரட்டை விளக்க மளிக்க இத்தீர்வு முறை ஏதுவாய் அமையும். அத்துடன், அதனை இந்தியாவின் அரை சமஷ்டிக்கும் ஒப்பிட வாய்ப்பிருக்கும்.

அன்று அட்டசீலங்களுடன்பௌத்த மதத்தைப் பரப்புவதற்கு மகிந்த தேரர் இந்தியாவில் இருந்து இலங்கை வந்தது வரலாறு. நிறைவேற்ற முடியாத ஒரு வெள்ளை அறிக்கையால் இந்தியாவை முற்றிலும் வென்றெடுக்க இராஜபக்ஷ திட்டமிடுகின்றார். ஆனால், சிங்கள மக்களுக்கும் தமிழ்மக்களுக்கும் உள்ள இடைவெளியானது இட்டு நிரப்பப்பட முடியாத அதளபாதாளமான இடைவெளி என்று இலங்கை - இந்திய ஒப்பந்தத்தைச் செய்ய முற்பட்ட வேளை அப் போதைய

(14ஆம் பக்கம் பார்க்க)

## மழை பாதித்த குடும்பங்களுக்கு உதவிப்பொருள்

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் கடந்த வாரம் பெய்த கடும் மழை காரணமாக வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 'லீட்ஸ்' நிறுவனம் உலர் உணவு அல்லாத பொருள்களை வழங்கியுள்ளது.

நல்லூர் ஜே/106, ஜே/107,ஜே/108,ஜே/109 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகள் திருநெல்வேலி ஜே/114 கிராம அலுவலர் பிரிவு, கொக்குவில் மேற்கு ஜே/99,ஜே/128 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கே உலர் உணவு அல்லாத பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 458 குடும்பங்களுக்கு உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன எனக் கூறப்பட்டது. (எ-86)

## கண்ணீர் அஞ்சலி



### ச.க.நடராசா

தோற்றம் 10.05.1927 மறைவு 23.12.2005

இணுவில் கந்தசுவாமி கோயில் தர்ம கர்த்தாசபை நிர்வாகக் குழு உறுப்பினராக இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக கடமை ஆற்றிய **ச.க.நடராசா** அவர்களின் மரணச் செய்தி அறிந்து மனம் வருந்துகின்றோம். அவரது சேவைக்காலத்தில் பல புனரமைப்பு வேலைகள் கோயிலில் நடைபெற்றுள்ளது. பூரண ஒத்துழைப்பு தந்து உதவியவர்.

அன்னாரின் மறைவினால் துயருறும் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அமரரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இணுவை கந்தப் பெருமானையும், சாந்தியடி வயிரவப்பெருமானையும் பிரார்த்திக்கின்றோம்.

"ஓம் சாந்தி"

கந்தசுவாமி கோயில், இணுவில். (44528) (39-17-16-18) தர்மகர்த்தாசபை நிர்வாகக் குழுவினர், பூசகர்கள், பணியாளர்கள்.


## வீட்டுக்கொரு கணினி

# COMPUTER

400 MHz, 64MB RAM, 4.3GB Hard Disk, AGP 4MB 3D Card, Sound Card, Network Card, CD Drive, Floppy Drive, 2 USB Port

அத்துடன் 10000/- பெறுமதியான

**17" Colour Monitor**

Windows XP, MS Office XP, Page Maker, Coral Draw, Photoshop, Flash, Dream Weaver, மென்பொருட்களுடன்

உடன் கொள்வனவுக்கு 18000/-

ஒரு மாத முற்பதிவுடன் 15000/

இரண்டு மாத முற்பதிவுடன்

**12,000/-மட்டும்**

(இச்சலுகை இன்றும் நாளையும் மட்டும்)

**SAAMSTECH**

841, Hospital Road, Jaffna. 4591571
233/4, Kasthuriar Rd, Jaffna. 2229505
198, 1st Flr, Galle Rd, Dehiwala . 2739939
145–157, St.Johon Street, London. EC1V 4PY
8345 NW 66th Street #9164, MIAMI FL 33166-2628



ACTION CONTRE LA FAIM

**RECEPTIONIST (JAFFNA)**

Action Contre La Faim is an International NGO involved in humanitarian activities in SriLanka, since 1997. Current activities are based in Batticaloa, Jaffna and Tricomalee districts. **We require a Receptionist for the Base of Jaffna.**

This position is suitable for a man or woman who has experience in receptionist work. (S) he has to answer to the phone and to dispatch the calls. She will help the staff in every secretarial work. She has to record appointments and to record and dispatch all the letters. She is able to translate in English the incoming messages written in Tamil.

Applicants must be fluent in Tamil and English and able to do basic communication in Sinhala. Computer literacy, especially MS Word and Excel is required.

***Duration:*** 1 year with insurance coverage

Apply as soon as possible:
ACF Administration
No. 40, Racca Lane, Chundikuli,
JAFFNA
TP/ FAX : 021 222 2465/ 021 222 6993


## சங்கானை ஆஸ்பத்திரியில் மழைநீர் சேகரிப்புத் தொட்டி

வலி.தென்மேற்கு, டிசெ.25

சங்கானை அரசினர் வைத்தியசாலையில் மழைநீர் சேகரிப்புத் தொட்டி ஒன்று நிறுவப்பட்டுவருகிறது.

யாழ். மாவட்ட அரச அதிபர் இதற்கான நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார்.

மேலும் நிதியைப் பயன்படுத்தி இந்த மழைநீர் சேகரிப்புத் தொட்டி நிறுவும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-135)

## கணிப்பீட்டுச் செயலமர்வு

தென்மராட்சி, டிசெ.25

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கணிதம், தமிழ் ஆகிய பாடங்கள் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பாடசாலை மட்டக் கணிப்பீட்டுச் செயலமர்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (எ-117)

## நெருப்பு நினைவுகள் இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம், டிசெ. 25

அரியாலையூர் எம்.வி.கே.குமணனின் தயாரிப்பில் ராகம்ஸ் இசைக்குழுவின் இசையமைப்பில் உருவான 'நெருப்பு நினைவு' கள் இறுவட்டு வெளியீடு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவன் எஸ்.ரீ நமனன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில்,ஸ்கந்தவரோதயக் கல்லூரி உப அதிபர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் முன்னாள் பொதுமுகாமையாளர் லயன்ஸ் வி.எஸ் சொக்கலிங்கம், கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அதிபர் லயன்ஸ் வி.மாணிக்கம், சக்தி எப்.எம். சந்தைப்படுத்தல் முகாமையாளர் பி.தேவா, உலகத்தமிழர் வானொலி விரிவாக்கல் முகாமையாளர் என்.பிரகாஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

இறுவட்டு வெளியீட்டைத் தொடர்ந்து ஆய்வுரையை கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் ஆ.இரவீந்திரன் நிகழ்த்துவார். (எ-204)


## வகுப்பு

A/L மாணவர்களுக்கான பௌதிகவியல் அலகு ரீதியாகவும் பிரத்தியேகமாகவும் கற்பிக்கப்படும்.

தொடர்பு: 0779515726
(44529)(18.16.17)



ICT Information & Communication Technology

Grade - 10

ICT கற்கைநெறிக்கான விரிவுரைகள் [தரம்-10 மாணவர்களுக்கு] நாளை [25.12.2005] ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன. எனவே முன்கூட்டியே மாணவர்கள் பதிவு செய்துகொள்ளவும்.

C.B.Computer Academy
Station Road, Kondavil.
T.P.: 021 4590291.



## UNIVAC

**Software Engineering Park**

2006 ஆம் ஆண்டில் 1000 கணனி மென்பொருள்பொறியியலாளரில் நீங்களும் ஒருவராக வர

**இன்றே விண்ணப்பியுங்கள்**

**யுனிவெக் போட்டிப்பரீட்சை**

விண்ணப்ப முடிவு திகதி 31.12.2005
213, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.0776176476




## தெய்வீக ஒளியே! தேவனின் மகனே!

தெய்வீக ஒளியே! தேவனின் மகனே!
வையக வாதையில் வருவீர்! சுவாமி!

கரிசனை நோக்கில் கைதந்து காக்கும்
பரிசுத்த பாலனைப் பணிந்திட வாரீர்!

விசுவாச நம்பிக்கை இருகண் இலங்க
நிசமான புதுவாழ்வு நிர்மலன் தருவார்

தோயும் அன்பில் தோத்திரம் செய்யப்
பாயும் பீதிகள் பறந்து போகும்

இழப்பில் துடிக்கும் இதயக் கொதிப்பில்
குழந்தை இயேசு இறங்கி வருவார்!

சஞ்சலம் தீர்க்கும் சற்குரு வேந்தன்
நெஞ்சில் இருக்க நிம்மதி சுரக்கும்

ஏழைகள் முகத்தில் யேசுவைப் பாரீர்
தோழமைக் கரத்தால் தொடுவார் தினமும்

(44531)(18.16.17) ஞா.அரியமலர், மிருசுவில்.

## நினைவினில் நீங்கா ஓராண்டு நினைவு

தோற்றம் 27 . 09 . 1951 மறைவு 06 . 12 . 2004



**அமரர் கனகசபை - சிவபாலன்**

(முன்னாள் இளநிலை நிர்வாக உத்தியோகத்தர், இலங்கை வங்கி, ஊர்காவற்றுறை)

நேற்றென நினைக்கிறோம்
நிறைந்தது ஓராண்டு!
பாசமுடன் எம்மைக் காத்து
பண்புடன் வளர்த்து வந்தீர்
ஊர் போற்ற உத்தமராய்
உவகையுடன் வாழ்ந்தீர்
பாதியிலே எம்மை விட்டு
பரனடி சேர்ந்தீரோ!
நாம் இன்று துன்பக் கடலில்
உழலகின்றோம் - உம் நினைவால்
நீங்கள் இறை உலகிலிருந்து
என்றும் எமை வழிநடத்த
வேண்டுகின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

67, அரசடி வீதி, யாழ்ப்பாணம். பிரிவால் வாடும்: மனைவி, பிள்ளைகள், உறவினர்கள். (44533)(18.16.17)

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### கதிரவேலு பரமசாமி

திதி: தசமி

தெய்வத் தொண்டும் பிறர் நலமும் தமிழ்ப் பற்றும்
வாழ்வியலாய்க் கொண்ட தம்பி!
விண் விரைந்து ஐந்தாண்டாயினும்
மண் உன் பணி பேசுதையா!
ஞானவைரவர் பாத நிழலில் - உன்
ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கும்-

திருமதி கு.ஷண்முகடாஸ் (சகோதரி).

தலையாழி, கொக்குவில். (44500)(18.16.17)




தமிழர் திருநாளாம் உழவர் பெருநாளை முன்னிட்டு நிதித்துறையின்
பொங்கல் விழா ஏற்பாட்டுக் குழுவினர் நடத்தும்

# மாபெரும் மாட்டு வண்டி ஓட்டுகைப் போட்டி

## 2006.01.12

இடம்:விசுவமடு தொட்டியடி ஓட்டுகைத் திடல்

நேரம்: பி.ப. ஒரு மணி

போட்டியில் பங்குகொள்ளும் காளைக் குழுக்கள் அ,ஆ,இ,ஈ
என நான்காகப் பிரிக்கப்பட்டுள்ளன.

வெற்றிபெறும் குழுக்களுக்கு பெறுமதிமிக்க
பணப்பரிசில்கள் வழங்கப்படும்.

''தமிழரின் பண்பாட்டை உலகெங்கும் பறைசாற்றும் போட்டிகளிலொன் றான மாட்டுவண்டி ஓட்டுகைப் போட்டியிற் காளைகளின் வீரமும் காளை களை வழிநடத்துவோரின் தீரமும் காண வாரீர்''

பரிசில்கள்
அ,ஆ,இ

முதலாம் பரிசு உரூபா 25,000
2ஆம் பரிசு உரூபா 15,000
3ஆம் பரிசு உரூபா 10,000

பரிசில்கள்
ஈ

முதலாம் பரிசு உரூபா 15,000
2ஆம் பரிசு உரூபா 10,000
3ஆம் பரிசு உரூபா 5,000

பல்வேறு நாடுகளிலும் வாழும் தமிழ் மக்கள் போட்டிகளைத் தொலைக்காட்சியில் கண்டு மகிழலாம்.

''எமது பண்பாடுதான் எமது தேசத்தின் உயிர்
எமது இனத்தின் ஆன்மா''
- தமிழீழத் தேசியத் தலைவர்

விழா ஏற்பாட்டுக் குழு
நிதித்துறை.
தமிழீழ விடுதலைப் புலிகள்.

அனைவரும் வாரீர்; பண்பாட்டில் நனைவோம் பாரினில் நிமிர்வோம்.

(அ-47047)(25-11-19)

## ஆஞ்சநேயர் ஆலயச் சூழலில்

மருதனார்மடம் அருள்வளர் ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் ஆலய இலட்சார்ச்சனையை முன்னிட்டு நடைபெறும் தெய்வீக இசையரங்கு நிகழ்வில் இன்று ஞாயிற்றுக்கிழமை யதுநந்தினி இராமநாதனின் பாட்டுக் கச்சேரி நடைபெறும்.வயலின் எம். விஸ்வமூர்த்தி, மிருதங்கம் கிருபா அனந்தகோபன், கடம் ஏ.செல்வரட்ணம் ஆகியோர் அணி செய் கலைஞர்களாகப் பங்கேற்பர். (எ-204)

---

அரியாலையூர் M.V.K. குமணாவின் தயாரிப்பில்
ராகம்ஸ் இசைக்குழு வழங்கும்

## நெருப்பு நினைவுகள்

TSUNAMI 9.0

இறுவட்டு வெளியீடு

இடம்: திவ்ய ஜீவன சங்க மண்டபம்
(சட்டநாதர் கோயில் அருகில், நல்லூர்.)
காலம்: இன்று (25.12.2005) ஞாயிறு பிற்பகல்3மணி

இந்த ஆற்றுகை இறுவட்டு வெளியீட்டு நிகழ்வில் அனைவரையும் பங்குகொள்ளுமாறு அன்புரிமை யோடு கேட்டுக்கொள்கின்றோம்.

அரியாலையூர் எம்.வி.கே.குமணா
(ராகம்ஸ் இசைக்குழு)

(44509)(26-16-19)

---

பருத்தித்துறையில்....
புதிய கணனி வகுப்புக்கள் ஆரம்பம்

A/L 2008 மாணவர்களிற்கான GIT
* General Information Technology *
தரம் 5 முதல் O/L மாணவர்களிற்கான
* Certificate in Computing for Kids *

* Diploma in MS Office Applications *
* Diploma in Desktop Publishing *
* Diploma in Internet & Email *
* Diploma in Hardware Technology *
* Diploma in Computer Programming *
அனைத்து மாணவர்களிற்கும் Internet Email வகுப்புக்கள் இலவசமாக நடாத்தப்படும்.

Internet Browsing Center @ PointPedro

Jeyantha Computer Park
75/22, Thumpalai Road, Sivankovilady,
PointPedro. Phone: 021 226 4303
கிளை: Universal Education Center
Manthekai, Puloly. Phone: 021 226 3860

---

சிவமயம்

## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு



அன்புடையீர்!
கடந்த 25-11-2005 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்ப விளக்கு
திருமதி
**கலைமகள் (சித்திரபூபதி) மகாலிங்கம்**

அவர்களின் அந்தியேட்டிக்கிரியை நேற்று (24-12-2005) சனிக்கிழமை வேலணை சாட்டியில் நடைபெற்றது. வீட்டுக் கிருத்தியம் இன்று (25-12-2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். தாங்கள் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.18,கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்.
(46288)(26-16-19)
குடும்பத்தினர்.

---

## மரண அறிவித்தல்



**யோக்கப் புஸ்பதாஸ்** (செல்வராசு ) J.P.
*(வீதி மேற்பார்வையாளர்)* R.M.C.

அச்சுவேலி,பத்தமேனியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யோக்கப் புஸ்பதாஸ் அவர்கள் 22.12.2005 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோக்கப் - திரேசா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பேதுருப்பிள்ளை மற்றும் மரியம்மா தம்பதியரின் மருமகனும் இராஜேஸ்வரியின் (மல்லிகா) அன்புக் கணவரும் புஸ்பதாஸ் ரெரன்ஸ் (டாக்டர்), பரமேஸ்வரன் ரெலானி புஸ்பதாஸ் ரெலாகினி ஆகியோரின் பாசமுள்ள தகப்பனும் பரமேஸ்வரனின் (வ.கி.சு. அமைச்சின் பிரதம கணக்காளர்) அன்பு மாமனும் பரமேஸ்வரன் ரெபிக்ஸ்சனின் பேரனும் காலஞ்சென்றவர்களான இன்னாசிமுத்து நவமணி, யோசேப்பு, இராஜேஸ்வரி, டானியல் புஸ்பமேரி மற்றும் துரைசிங்கம் தவமலர், மரியதாஸ் மலர்நாயகி, யோக்கப் ஜெயதாஸ் ஆகியோரின் சகோதரனும் சுந்தரலிங்கம் பற்றிமா (கனடா), ஏனக்சிசிலியா (கனடா) மற்றும் ஜெகதாசன் (கனடா), இதயதாசன் (கனடா), அன்ரனிதாஸ் (கனடா), அமலதாஸ் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஆத்மசாந்திக்காக அச்சுவேலி புனித அந்தோனியார் ஆலயத்தில் நாளை (26.12.2005) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுத்து பின்னர் பூதவுடல் வல்வை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கிளாக்கர் வீதி,பத்தமேனி,
அச்சுவேலி.
(44527) (24-26-16-19)
தகவல்:
ரெரன்ஸ் (ரெறா - மகன்).

---

SALE SALE SALE SALE SALE SALE



## நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு
## காவேரியின்
## மாபெரும் மலிவு விற்பனை

24.12.2005 முதல் 31.12.2005 வரை

புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட

- அனைத்து ரக சாறி வகைகள்,
- ஸ்கேட் & பிளவுஸ்,
- சல்வார், எலிபன்ட் கிட்ஸ்,
- சூட்டிங் & சேட்டிங் வகைகள்,
- சிறுவர், சிறுமியர்களுக்கான றெடிமேட்

ஆடைகள் அனைத்தும்
மலிவு விலையில்.....

## காவேரி சில்க்ஸ்

48, பெரியகடை, யாழ்ப்பாணம்.
222-2333

(அ.47009) (39-26-16-19)

SALE SALE SALE SALE SALE SALE

# ENGLISH மொழியா? உங்கள் பிரச்சினை

## இன்றே தபால் மூல ஆங்கிலப் பாடநெறியில் இணையுங்கள்

நீங்கள் இருக்கும் இடத்தில் இருங்கள் நாம் அங்கு உங்களுக்கு ஆங்கில கல்வியை குருகிய காலத்தில் (அடிப்படையில் இருந்தே) கற்பிக்கின்றோம்

Free

## இதோ இலவச அழகிய குடை



எமது எந்த ஒரு பாடநெறியிலும் இணையும் அணைத்து மாணவ / மாணவிகளுக்கு அழகிய குடை ஒன்றும் 2006ம் ஆண்டுக்கான வர்ண கலண்டர் ஒன்றும் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும் (முந்துங்கள்)



மேலதிக விபரங்களுக்கு சுயவிலாசத்துடன் 5.00 பெறுமதியான 3 முத்திரைகள் அனுப்பி பெறுங்கள்

**UNION EDUCATIONAL INSTITUTE**

P.O. BOX 143, KANDY, SRI LANKA. TEL: 0773 123 523

சில கல்வி நிலையங்கள் போன்று மாணவர்களிடம் பணத்தை அறவிடுவது அல்ல எமது நோக்கம்



# வீட்டில் இருந்தவாரே ஆங்கிலம் கற்க முடியும்

இலகுவான முறையில் ஆங்கிலம் கற்க வேண்டுமானால் E.L.I. யின் தபால் மூல ஆங்கில பாடநெறிகள் தான்

## அழகிய டீ.சேர்ட் இலவசம்

* பாடநெறியைத் தொடரும் உங்களுக்கு இலவச டீசேர்ட் ஒன்று
* இலவச 30 day's Easy Way English புத்தகம்
* 2006ம் ஆண்டு அழகிய வர்ண கலண்டர்

என்பன அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படும்



மேலதிக விபரங்களுக்கு 5.00 பெறுமதியான 3 முத்திரைகள் அனுப்பி பெறலாம்.

**THE ENGLISH LANGUAGE INSTITUTE**

P.O. BOX 83, KANDY. Tel: 0777-220002



# CATWAS.COM
## COMPUTER ACADEMY

No.26, Somasundram Avenue, Chundukuli, Jaffna.
TP: 021 222 3805

## புதிய ஆண்டிற்கான புதிய பிரிவுகள்

**O/L.** பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான விசேட பிரிவுகள் ஆரம்பம். உங்கள் விடுமுறைக் காலத்தை பயனுள்ளதாகவும், பெறுமதிமிக்கதாகவும் மாற்ற எம்முடன் இணைந்து கணனி உலகில் இணைவதற்கு உங்களை தயார் படுத்திக் கொள்ள இது ஒரு மிகவும் அரிய சந்தர்ப்பம்

### ONE MONTH DIPLOMA COURSES

| | |
|---|---|
| Ms Office | 1500/= |
| DTP | 1750/= |
| Hard Ware | 1500/= |

பதிவுக்கான திகதி 26.12.2005 - 29.12.2005

**26.12.2005 அன்று பதிவை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு அனுமதிக் கட்டணம் இலவசம்.**

புதிய ஆண்டிற்கான புதிய பிரிவுகள் ஏனைய மாணவர்களுக்கும் அரச, அரசசார்பற்ற உத்தியோகத்தர்களுக்கும் ஆரம்பமாக உள்ளதால் உங்களுக்கான பதிவுகளை 26.12.2005 - 29.12.2005 வரை மேற்கொள்ளவும்

| FOUR MONTH DIPLOMA COURSES | | CERTIFICATE COURSES | |
|---|---|---|---|
| Ms Office | 1750/= | Word | Power Point |
| DTP | 2000/= | Excel | Photo Shop |
| Hard Ware | 1750/= | Access | Page Maker |
| Web Design | 3000/= | HTML | Corel Draw |

உங்கள் சிறார்களை கணனி அறிவில் வளர்க்க எம்முடன் Ms- Kids Program இல் இணைத்து கொள்ளுங்கள்


# என்றும் எங்கள் எண்ணங்களில்...



நாட்டுப்பற்றாளர்.

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20 | 26 |
| 05 | 12 |
| 1941 | 2004 |

## திருமதி பிலோடனம்மா ஜோர்ச் (ரீச்சர்)

எங்களை விட்டு நீங்கள் பிரிந்த கொடுமை
நெஞ்சு வலிக்கிறது கண்கள் சொரிகின்றன
எங்களோடு தான் நீங்கள் இருக்கிறீர்கள்
அதனால்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

மார்கழி 26,2005 திங்கட் கிழமை அன்று நண்பகல் 12 மணியளவில் கோப்பாவில், புதுக் குடியிருப்பில் நடக்கவிருக்கும் நினைவஞ்சலி, மதிய போசனத்தில் கலந்துகொள்ளுமாறும்.

28-12-2005 புதன்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் சக்கோட்டை புனித சவேரியார் ஆலய வளவில் கட்டப்பட்டிருக்கும் நினைவாலயத் திறப்பு விழாவில் கலந்துகொள்ளுமாறும் போராளிகள், நண்பர்கள், உறவினர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கோப்பாவில், சக்கோட்டை. (43832)(52)

குடும்பத்தினர்.

gtz Partner for the Future. Worldwide.

ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் (ஜீ.ரி.சற்) தேச நிர்மாணத்திற்கும் அபிவிருத்திக்குமான அமைச்சுடனும், மாகண,மாவட்ட,பிரதேச மட்டங்களிலுள்ள பங்குதாரர்களின் பங்களிப்புடன் யுத்தத்தாலும் சுனாமியாலும் பாதிக்கப்பட்ட திருகோணமலை, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாண மாவட்டங்களில் பொருளாதார, பௌதீக, சமூக கட்டமைப்புக்களின் மீள் நிர்மாணத் திட்டங்களுக்கு உதவிகள் வழங்கி வருகிறது.

ஜீ.ரி.சற் நிறுவனம் டிபாருத்தமான தராதரமும் தகமையுமுடைய ஒருவரை தொழில்நுட்ப மேற்பார்வையாளர் பதவிக்கு தெரிவு செய்யவுள்ளது.

# பணிநிலைக்கான வெற்றிடம்

## தொழிநுட்ப கள மேற்பார்வையாளர்

### கடமைகள்,கட்டுமான கள மேற்பார்வை

- வாராந்த தொழிநுட்ப அறிக்கைகள் தயாரித்தலுக்கும் தரநிர்ணய திட்ட கட்டுப்பாட்டு விடயங்களுக்குமாக முன்னொழுங்கு செய்யப்பட்ட, இணங்கப்பட்ட கள பார்வையிடல் அட்டவணைப்படி தினசரி களத்தினைப் பார்வையிடல்.
- நேர அட்டவனைப்படி வேலை முன்னேற்றத்தைச் சோதனையிடல்
- கணியச்சிட்டை மற்றும் வரைபடங்களுக்கு அமைய அளவீடுகள் மற்றும் நடைபெற்ற வேலையின் அளவு என்பனவற்றை சரிபார்த்தல்
- பிரதேச சபை மற்றும் பிரதேச செயலக தொழிநுட்ப உத்தியோகத்தர்கள், திட்ட முகாமையாளர்கள், வடபுரமைப்புத் திட்டத்துடன் சம்பந்தப்பட்ட உள்ளூர் மற்றும் சர்வதேச அமைப்புக்கள் ஆகியோருடன் நிரந்தரத் தொடர்புகள் வைத்து அடிப்படை தொழிநுட்ப அறிக்கை மூலமாக கள முன்னேற்றத்தினை அறிவித்தல்
- குறுகிய முன்னறிவித்தலில் களத்திற்குச் சென்று எழும் பிரச்சனைகள் பற்றி அறிந்து அவற்றினைத் தீர்த்தல்

### சம்பந்தப்பட்ட அனைவருக்கும் நிபுணத்துவ ஆலோசனை

- செய்யப்படும் பௌதீக உட்கட்டுமான அமைப்புத் வேலைகளுக்குத் தேவையான அடிப்படை தொழிநுட்ப மற்றும் இதர தகவல்களை உள்ளூர் அதிகாரிகளுக்கும் ஒப்பந்த பங்காளிகளுக்கும் கொடுத்து உதவுதல்
- வரைபடங்கள், கணியச் சிட்டைகள், வேலைத்திட்டங்கள், நேர அட்டவனைகள் போன்ற கேள்விப் பத்திரங்களைத் தயாரிக்க உள்ளூர் பங்காளிகளுக்கும் ஒப்பந்தப் பங்காளிகளுக்கும் உதவுதல்
- ஜீ.ரீ.இசட். வதிவிடப் பொறியியலாளருக்கு ஒப்பந்த வேலைத்திட்டப் படிமுறைகளில் எழக்கூடிய பிரச்சனைகளுக்கு உதவிசெய்தல்
- வடக்கில் உள்ள ஜீ.ரீ.இசட். ஒப்பந்த பங்காளிகள் (யாழ்ப்பாணம்/ கிளிநொச்சி/ முல்லைத்தீவு) மற்றும் கொழும்பிலுள்ள ஒப்பந்த முகாமை ஆகியோருடன் ஒரு இணைப்பினை வைத்திருத்தல்
- உள்ளூர் அதிகாரிகளுக்கும் ஒப்பந்தப் பங்காளிகளுக்கும் ஒரு பொருந்தக் கூடிய திட்ட கண்காணிப்பு முறையை (உதாரணமாக நிர்மாணப் பதிவேடு) உருவாக்க உதவுதலும் திட்ட முன்னேற்ற அறிக்கையுடன் இதனை சரிபார்த்தலும்
- சம்பந்தப்பட்ட ஒப்பந்தகாரர் மற்றும் உள்ளூர் மானிய ஒப்பந்தம் பெறுநர்களின் செலவுச் சிட்டைகளை கணக்குப்படியும் தொழிநுட்பரீதியாகவும் சரிபார்த்தல்
- நிர்மாண முகாமைக்கு கிரமமாக அறிக்கைகள் சமர்ப்பித்தல்

### விண்ணப்பிப்போர்

- தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் தேர்ச்சியடைநதவராக இருத்தல் வேண்டும்
- எல்லாவற்றிற்கும் ஈடுகொடுக்கக் கூடியவராகவும் துடிப்புள்ளவராகவும் இருத்தல் வேண்டும்
- வேலையாட்களை வழிநடத்தக் கூடியவராகவும் கிராம மக்களுடன் கூட்டங்களை நடத்தக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்
- குறிப்பெடுத்தல், அறிக்கை தயாரித்தல், தொடர்புகள், சந்திப்புக்கள் போன்றவற்றிற்கு ஒருநாளைக்கு 2 மணித்தியாலங்களுக்கு மேல் அலுவலகத்தில் செலவு செய்தல் கூடாது
- பொறியியல் துறையில் சான்றிதல் பெற்றவராகவும் அனுபவமுள்ளவராகவும் இருப்பதோடு நிர்மாணத் துறையில் குறைந்தது 8 வருடங்கள் அனுபவமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவு திகதி :- 01.01.2006**

விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய முகவரி:-
முதன்மை ஆலோசகர்
472, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

# கொலைகளை நிறுத்துங்கள்

அண்மைய நாட்களாக வடக்கிலும் கிழக்கிலும் படுகொலைகள் அதிகரித்து வருகின்றன. விடுதலைப்புலிகள், அரச படையினர், தமிழ் பொதுமக்கள், முஸ்லிம்கள் மற்றும் மாற்றுக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் என நாள்தோறும் பலர் கொல்லப்பட்டு வருகின்றனர்.

கொலைகளை செய்பவர்களுக்கு அது மிக இலகுவான காரியமாக இருக்கலாம். ஆனால் ஒரு உயிரை பறிகொடுக்கின்ற அந்தக் குடும்பத்தினது நிலையை எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்களது துயரை எண்ணிப்பார்க்க வேண்டும். கொலையாகின்ற பலரைப்பார்த்தால் அவர்கள் திருமணம் செய்து மனைவி குழந்தைகளுடன் வாழ்ந்தவர்கள். அந்தக்குடும்பத்தினை காப்பாற்றியவர்கள். இவர்கள் கொல்லப்பட்ட பின்னர் அந்தக் குடும்பத்தின் கதியென்ன? மனைவியின் நிலையென்ன? எவ்விதம் அவர்கள் வாழமுடியும்? உணவுக்கு என்ன செய்வார்கள்? ஏனைய அத்தியாவசிய தேவைகளை எவ்விதம் பூர்த்தி செய்வார்கள்?

அக்குடும்பத்தின் குழந்தைகளை எடுத்துக் கொண்டால் தந்தை இல்லாத துயரை எவ்விதம் அவர்களால் தாங்கிக்கொள்ள முடியும்? தந்தையின் பாசத்தினை, பிரிவினை அவர்கள் வேறு எங்கு ஈடு செய்யமுடியும்? தந்தையின் இழப்பினை அக்குழந்தைகளால் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? எல்லாவற்றிற்கும் மேலாக அக்குழந்தைகளுக்கு கல்வியை வழங்கி ஒரு நல்ல எதிர்காலத்தை காட்டுவது யார்?

மறுபுறம் கொலையுண்டவர்களின் தாய் தந்தைக்கு யார் ஆதரவு? வயதான காலத்தில் அவர்களுக்கு இந்த இழப்பு எவ்வளவு பெரிய தாக்கமாக அமையும்? மேலும் கொலையுண்டவர்களுக்கு சகோதர சகோதரிகள் இருந்தால் அவர்களுக்கு உதவுவது யார்? கல்வி கற்கின்றவர்களாக இருந்தால் தொடர்ந்து உதவுவது . யார்?. சகோதரிகளது தேவைகளை பூர்த்தி செய்து அதிகளவில் சீதனம் எதிர்பார்க்கின்ற இன்றைய



சூழலில் அவற்றையெல்லாம் வழங்கி திருமணம் செய்து வைப்பது யார்?

இப்படி ஒரு உயிருக்கு பின்னால் ஆயிரமாயிரம் கடமைகளும், இழப்புகளும், துன்பங்களும் பின்னிப் பிணைந்துள்ளன. கொலை செய்பவர்களுக்கு இதுவெல்லாம் ஒரு பொருட்டேயல்ல. கொல்ல வேண்டும், ஆளை முடிக்க வேண்டும். அவ்வளவு தான். கொல்லப்படுவது தன்னைப்போன்ற இன்னுமொரு மனிதப்பிறவி தானே என்று சிந்திக்கக்கூட முடியாத அளவிற்கு கொலைவெறி மனிதத்தை மறைக்கின்றது.

கொலைக்கு பல காரணங்களை கூறலாம். எதிரி, மாற்றுக்கருத்துகளை உடையவர்கள், துரோகி இப்படிப்பல. ஆனால் அரசியல் ரீதியான அல்லது மாற்றுக்கருத்தியல் ரீதியான வேறுபாடுகளைக் கொண்ட ஒருவரை கொல்வது தானா தீர்வு? மறுபுறம் மக்களது விடுதலைக்காக போனவர்-களை பணம், சுகத்திற்காக எதிரிகளோடு சேர்ந்து கொலை செய்வது சரியானதா?

ஒவ்வொருவருக்கும் தாம் விரும்பிய ஒரு கொள்கையை கடைப்பிடிக்கும் உரிமை இல்லையா? அவ்விதமே அது மாறுபட்டதாயினும் கொலை என்பது ஒரு மிகப்பெரிய தண்டனை. அழிவு இல்லையா? கொலை செய்பவர் ஒரு கொள்கையை வைத்திருக்கலாம். அதற்கு மாற்றானவர்கள் இவரை கொல்ல முயற்சிக்கலாம். அல்லது இவர் மாற்றுக்கருத்துக்காரரை கொல்ல முயற்சிக்கலாம் அப்படியென்றால் இதன் முடிவுதான் என்ன?

கொல்லப்படுபவர் யாராக இருந்தாலும் அவர் அரசனானாலும் ஆண்டியானாலும் விடுதலை வீரரானாலும், துரோகியானாலும், தமிழரானாலும், முஸ்லிமானாலும் அந்த குடும்பத்திற்கு கவலை, துயரம், இழப்பு ஒன்று தான். கண்ணீர் ஒன்றுதான். அழுகை ஒன்று தான். துப்பாக்கிகளுக்கு இவை புரிவதில்லை. அவற்றிற்கு தெரிந்தது கொலை மட்டுமே. அதன்பின் இன்னுமொரு கொலை. பின்னர் இன்னுமொன்று.

தற்போது கூட வடகிழக்கில் சில அரசியல்வாதிகள் இனக்கொலைகள், கலவரங்கள், வன்முறைகளுக்கு பின்னால் இருப்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. தமது சுயநலத்திற்காக, பட்டம் பதவிகளுக்காக உயிர்களை பலியெடுக்கும் இவர்களுக்கு இருதயம் இரும்பால் செய்யப்பட்டதா? அல்லது சாகா வரம் பெற்றவர்களா?

எனவே யாராக இருந்தாலும், என்ன காரணமாக இருந்தாலும் கொலைகள் வேண்டாம். தயவு செய்து கொலைகளை நிறுத்துங்கள். மக்களுக்காக, மக்களது கண்ணீருக்காகதயவு செய்து கொலைகளை நிறுத்துங்கள்.

- சாதாரணன்




## வாசகர் கவனத்திற்கு...

கருத்தாடல் களத்திற்கு உங்கள் கருத்துக்களும் வரவேற்கப்படுகின்றன. அத்தோடு விழிப்பின் பதிவுகள் தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் விமர்சனங்களையும் நாங்கள் எதிர் பார்க்கிறோம்.

எழுதி அனுப்ப வேண்டிய முகவரி
விழிப்பின் பதிவுகள்
யங் ஏசியா டெலிவிஷன்
இல, 713. டிபி. விஜயசிங்க மாவத்தை,
பெலவத்தை, பத்தரமுல்லை.
மின்னஞ்சல்முகவரி :- villippu@yatv.net

## அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம்

### உறுப்புரை - 08

அவ்வந்நாட்டின் அரசியலமைப்பினால் அல்லது சட்டத்தினால் அவர்களுக்கு அளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளை மீறும் செயல்களுக்காக தகுதி வாய்ந்த தேசிய நியாய சபைகளினால் வழங்கப்படும் பயனுறுதியுடைய பரிகாரத்திற்கு ஒவ்வொருவரும் உரிமையுடையவர்களாவர்.

### உறுப்புரை - 09

ஒரு தலைப்பட்ட மனப்போக்கான வகையில் கைது செய்யப்படுதல், தடுத்து வைத்தல், நாடு கடத்தப்படுதல் ஆகியவற்றுக்கு எவரும் உட்படுத்தப்படலாகாது.

(தொடர்ச்சி அடுத்த வாரம்)

## சகோதர மொழியிலிருந்து சில துளிகள்

### துப்பாக்கியுடன் நான்

உங்களை குறிவைத்து
உங்களை அடக்கிவைத்து
உங்களை தடுத்து நிறுத்த
எனக்கு துப்பாக்கி தந்தனர்

இதில் எனக்கு உடன்பாடில்லை
என் பிரச்சனை வேறு
வீட்டில் வறுமை
கட்டிலில் அப்பா
கட்டிக்காக்கவேண்டிய
தட்டிக்கழிக்க முடியாத
குடும்பப்பொறுப்பு

ஏழை எனக்கு ஏது தொழில்
எல்லாம் அந்த
ஏமாற்று செல்வந்தர் கையில்

வருமானத்திற்காக
வந்தேன் படைக்கு - இப்போது
உங்கள் ஊரில்
உங்கள் எதிரியாக
துப்பாக்கியுடன் நான்

ரஞ்சன் ஜயரட்ண

## கருத்தாடல் களம்

### மலையக மக்களை கைவிடவில்லை.

மலையக மக்கள் குறித்து விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு என்ன என்ற கட்டுரையை விழிப்பின் பதிவுகளில் வாசிக்கமுடிந்தது. இதன் மூலம் மலையக மக்கள் எவ்வளவு தூரம் வடகிழக்கு மக்களையும் புலிகளையும் நம்பியுள்ளனர் என்பதை என்னால் விளங்கிக்கொள்ள முடிந்தது. ஆனால் விடுதலைப்புலிகள் சுயநலமாக தமது மக்களது விடுதலையை மட்டுமே நோக்கமாக கொள்வார்கள் என்று நான் நினைக்கவில்லை. சில அரசியல் கள நிலமைகள் காரணமாக வெளிப்படையாக இது பற்றி கூறாவிடினும் நிச்சயமாக இவ்விடயம் அவர்களது சிந்தனையில் இருக்கும் என்றே நான் நம்புகிறேன். அது மட்டுமல்ல வடகிழக்கு மக்கள் ஒருபோதும் மலையக தமிழ் மக்களை கைவிட மாட்டார்கள் என்பதை என்னால் உறுதியாக கூறமுடியும்.

ஆர். பிரதாபன்.
யாழ்ப்பாணம்.

### முஸ்லிம் சமூகம் செயற்படும்

கிழக்கு படுகொலை சம்பவங்களில் முஸ்லிம் அமைச்சர்களின் சம்பந்தமானது எங்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியது கடந்த காலங்களில் முஸ்லிம்கள் மீதான வன்முறைக்கு எதிரான போராட்டங்களை நடத்திய முஸ்லிம் சமூகம் நிச்சயம் இந்த துரோகத்திற்கு எதிராகவும் செயற்படும். செயற்படவேண்டும் என்பதே எனது கருத்து.

ஏ.எம். முஹமட் இர்பான்
வாழைச்சேனை

### புலிகள் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

முஸ்லிம் சமூகம் மீதான தாக்குதல்கள், வன்முறைகள் தொடர்பில் தற்போது புலிகள் ஓரளவு நம்பகத்தன்மையாக நடந்து கொண்டாலும் யாழ்ப்பாணத்தில் இருந்து முஸ்லிம்களை வெளியேற்றியது, கிழக்கில் படுகொலைகளை மேற்கொண்டது போன்ற காரணங்களினாலும் போரினால் முஸ்லிம்களும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றவகையிலும் அரசாங்கத்தைப் போலவே விடுதலைப் புலிகளும் முஸ்லிம் சமூகத்தின் பாதுகாப்பு குறித்து அதிக கவனம் செலுத்த வேண்டும்.

ஐ.எம். நஸ்ரினா ஹக்
சம்மாந்துறை

## கண்டது.. கேட்டது.. படித்தது..

கலாநிதி சி. க. சிற்றம்பலம் எழுதிய
### யாழ்ப்பாண தொன்மை வரலாறு
என்ற நூலில் இருந்து

சிங்கள மக்களின் வரலாற்றினை அறிந்து கொள்வதற்குரிய இலக்கிய தொல்லியற் சான்றுகள் ஆராயப்பட்டது போல தமிழ் மக்களின் வரலாற்றினை விளக்கும் தொல்லியல் சான்றுகள் விரிவான முறையில் ஆராயப்படவில்லை.

இந்நாடு சிங்கள பௌத்தர்களுக்கே உரிய நாடு என்ற நோக்கில் எழுதப்பட்ட பாளி நூல்களிலே தமிழரின் வரலாற்றினை பற்றிய விரிவான தடயங்கள் காணப்படவில்லை. சிங்கள அரசின் வரலாற்றிலே தமிழ் மக்களின் தலையீடுகள் ஏற்பட்ட போதுதான் தமிழ் மக்கள் பற்றிய குறிப்புகள் இவற்றில் உள. இத்தகைய குறிப்புகள் தமிழ் மக்களின் வரலாறு பற்றி அறியப்போதிய சான்றாதாரங்களாக அமையவில்லை.

தமிழ் நூல்களாகிய கைலாய மாலை, வையாபாடல் , யாழ்ப்பாண வைபவ மாலை ஆகியன நல்லூர் அரசின் எழுச்சிக்காலத்தில் எழுதப்பட்ட போதிலும் நல்லூர் அரசு பற்றிய விரிவான சான்றுகள் இவற்றிலும் இல்லை. அதுமட்டுமன்றி இவ்வரசிற்கு முன்னர் உள்ள காலப்பகுதி பற்றி அங்குமிங்குமாக தொடர்ச்சியற்ற முறையில் தான் குறிப்புகள் சில உள.

தொல்லியற் சான்றுகளை நோக்கும் போது சிங்களஅரசுகள் நிலைத்திருந்த பகுதிகளோடு ஒப்பிடுகையில் வடபகுதி பெரும்பாலும் தொல்லியலாளர்களின் கவனத்தினை ஈர்க்காத பகுதியாகவே விளங்கியுள்ளது.

இந்நிலையில் ஈழத்து வரலாற்றினை எழுதியோர் பாளி நூல்களை மூலாதாரமாகக்கொண்டு எழுதியதாலேயே தமிழ் மக்கள் இன்று செறிந்து வாழும் பிரதேசங்களில் அவர்களின் வரலாற்றுக்குரிய பங்கினை அளிப்பதற்கு பதிலாக சிங்கள தலைநகர்களுக்கே முக்கியத்துவம் கொடுத்தனர். தமிழ் மக்களின் பிராந்தியங்களுக்குரிய இடத்தினை அவை நல்கவில்லை. இருந்தும் தமிழ் மக்களின் பங்களிப்பு பற்றியும் வடபகுதி ஈழத்து வரலாற்றில் பெற்றிருந்த முக்கியத்துவம் பற்றியும் இந்த நூற்றாண்டின் இருபதுகளில் சேர் போல் பீரிஸ் கந்தரோடையில் மேற்கொண்ட மேலாய்வுகளும் இதனைத் தொடர்ந்து இராசநாயக முதலியார், சுவாமி ஞானப்பிரகாசர் போன்றோர் இப்பகுதி வரலாறு பற்றி எழுதிய நூல்களும் ஆய்வுக்கட்டுரைகளும் வெளிவந்திருந்தும் கூட ஈழத்து வரலாற்றிலே தமிழ் மக்களின் பங்களிப்பையும் குறிப்பாக வடபகுதிக்குரிய இடத்தினையும் சிங்கள வரலாற்று ஆசிரியர்கள் அங்கீகரிக்கவில்லை.

## இவ்வார விழிப்பில்...

- சுனாமிப் புனரமைப்பு ஓர் மீளாய்வு
- கிழக்கில் சுனாமிப்பாதிப்புற்றோரும் தொழில் பிரச்சினையும்
- தென்னிலங்கையில் சுனாமி அபிவிருத்தி ஒரு பார்வை
- வடக்கில் யுத்த பீதியுடன் சுனாமிப்பாதிப்புற்றோர்.
- கிழக்கு கரையின் அழைப்பு

## சமாதான நிகழ்வு

தேசிய சமாதானப்பேரவையின் ஆதரவில் தெற்கிலிருந்து சுமார் 60பேர் கொண்ட ஊடகவியலாளர் குழுவொன்று இம்மாத ஆரம்பத்தில் திருகோணமலயின் பல பகுதிகளுக்கும் சென்று நிலமைகளை பார்வையிட்டது. திருகோணமலை நகரம், கிண்ணியா, ஆலங்கேணி போன்ற பகுதிகளில் போரினாலும் சுனாமியினாலும் பாதிக்கப்பட்ட மக்களையும் இவர்கள் சந்தித்து கலந்துரையாடினர்.



விழிப்பின் பதிவுகள் தொடர்பான மேலதிக விடயங்கள் ரூபவாஹினி 'ஐ' அலைவரிசையில் திங்கள் இரவு 7.30மணிக்கும், TNL அலைவரிசையில் செவ்வாய் இரவு 7.25 மணிக்கும் ஒளிபரப்பாகும். விழிப்பு நிகழ்ச்சி தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி : விழிப்பு, யங் ஏசியா டெலிவிஷன். இல 713, டி.பி. விஜயசிங்க மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை,தொலைபேசி இல 0112787041-9 தொலைநகல் இல 0112787051 மின்னஞ்சல் முகவரி villippu@yatv.net இணையத்தள முகவரி www.yatv.net

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

# CIMA

**Foundation & Managerial Level**

ஆரம்பம் - 07.01.2006 11.30 a.m.

## aat (SriLanka)

**Medium - Tamil & English**

ஆரம்பம் - 07.01.2006 11.30 a.m.

**Further Details:**
**Director**
**Jaffna College Undergraduate Dept.,**
464, Hospital Road,
Jaffna.

(C/46862)(21.11.45)


# காரைநகரில் இன்று மகரஜோதிப் பெருவிழா

யாழ்ப்பாணம்,டிசெ.25

காரைநகர் வியாவில் ஐயனார் கோயில் மகரஜோதிப் பெருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

சாஸ்தாபீடம் பிரம்மஸ்ரீ மகாதேவ குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில், நாதஸ்வர மேதை அமரர் காரை என்.கே.கணேசனின் புதல்வன் க.பவப்பிரியனுக்கு அமரர் களுமாத்தையா நினைவுப் பதக்கம் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும்.

(எ-204)


# IIS COMPUTER COURSES

சர்வதேச அங்கிகாரம் பெற்ற கணனி நிறுவனம் ஒன்றின் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய ஓர் அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்

**01.01.2006**
அன்று பதிவினை
மேற்கொள்ளும்
அனைத்து
மாணவர்களுக்கும்
பதிவுக்கட்டணத்தில்
**50%**
கட்டணச்சலுகை
வழங்கப்படும்

## New Batches Start on

Batch 1 [Weekend] : 01.01.2006
Batch 2 [Weekday] : 03.01.2006
Batch 3 [Weekday] : 11.01.2006
Batch 4 [Weekend] : 14.01.2006
at 10.00 A.M.

| பயிற்சி நெறிகள் | வழமையான கட்டணம் | சலுகைக் கட்டணம் |
|---|---|---|
| Diploma in MS Office | ~~4800/=~~ | 2000/= |
| Diploma in Desk Top Publishing | ~~4000/=~~ | 2000/= |
| Diploma in Internet Technology | ~~6000/=~~ | 3000/= |
| Diploma in Hardware Technology | ~~7000/=~~ | 3000/= |
| Diploma in Computer Programming | ~~10000/=~~ | 6000/= |
| PageMaker, CorelDRAW, Flash, Photoshop | ~~1500/=~~ | 1000/= |

கணனிக் கல்விக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்

**INSTITUTE OF INFORMATICS STUDIES (IIS)**
#100, Clock Tower Road, Jaffna
T.P.No. : 021 222 2831
Email : iiscc@sltnet.lk



யாழ் மண்ணில் புதுப்பொலிவுடன்

அறுசுவை உணவுகளுக்கு நாடவேண்டிய ஒரே இடம்

## SKY LINE RESTAURANT
## ஸ்கை லயின் போசனசாலை



உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யும் ஒரே இடம்

திருமணம், பிறந்தநாள் போன்ற வைபவங்களுக்கு தேவையான உணவுப்பண்டங்களை எங்களிடம் ஓடர் செய்வதன் மூலம் உங்களின் பணத்தை மிகுதிப்படுத்திக்கொள்ளலாம். ஓடர் செய்யப்படும் உணவுகள் உங்களின் வைபவ இடத்திற்கே கொண்டுவந்து தரப்படும்.

இல.198, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 7539


# ஆறாத் துயருடன் அகவை ஒன்றில்...

## செல்வி
## தனுஷியா கொன்சன்ரைன்

(யாழ்ப்பாணம், தேசிய கல்வியியற் கல்லூரி முகிழ்நிலை ஆசிரியை,
யா/தும்பளை சிவப்பிரகாச வித்தியாசாலை உள்ளகப் பயிற்சி ஆசிரியை)



"சீவியத்தில் என்னை நேசித்தவர்களே
மரணத்திலும் என்னை மறவாதீர்கள்"

அழகிய கனவு கலைந்து கரைந்தது - உன்
கள்ளமற்ற கலகலத்த பேச்சு காதினில் ஒலிக்குது
எண்ணங்களில் ஏமாற்றம் தந்து எங்கம்மா சென்றாய்?
எண்ணித் தவிக்கின்றோம் ஏங்கித் துடிக்கின்றோம்.

சின்ன நடை நடந்து சிங்காரக் கொண்டை போட்டு
பள்ளிக்குச் செல்வதைப் பார்த்து மகிழ்வோமே - இன்று
நீ நடந்த வழிமுழுதும் நிழலாக உன்னுருவந்தேடி அலைகின்றோம்.
ஏங்கியழ வைத்துவிட்டு எங்கம்மா சென்றுவிட்டாய்
எம் கடைக்குட்டியே!
வண்ணக் கனவுகளின் எண்ணத்தில் மிதந்தவளே
வனப்பு மிகு மணநாளை வாஞ்சையுடன் பார்த்திருந்தோம்
இதயம் இடிந்ததம்மா இருள் எம்மைச் சூழ்ந்ததம்மா
தேறிட முடியாமல் தேம்பிப் புலம்புகின்றோம்

அவனியுள்ளவரை அணையாது உன் நினைவு.

அன்னை மடியில் 08.01.1980 ஆழிப்பேரலையில் 26.12.2004

ஆழிப்பேரலையில் ஆகுதியாகிய எமது அன்பு மகளின் நினைவாக நாளை (26.12.2005) திங்கட்கிழமை காலை 7 மணிக்கு புலோலி தெற்கு, கிராமக்கோட்டு புனித சூசையப்பர் ஆலயத்தில் திருப்பலிப் பூசைகள் ஒப்புக்கொடுக்கப்படும். உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து எமது கண்மணியின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறும் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

✱ இதனையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

பிரிவால் துயருறும் :
**குடும்பத்தினர்.**
'மனோ இல்லம்', வல்லிபுரப்பரியாரியார் வீதி,
பருத்தித்துறை. T.P 0712373378

(44526)(22-11-19)

# மக்கள் துன்பத்திலும் அரசியல் இலாபம்; நிர்வாகக் குளறுபடியால் 40 பேருக்குமேல் மரணம்!

உலக வலம்

மேனா

அண்மையில் தமிழ்நாட்டில் இடம் பெற்ற தொடர் மழையால் பாதிக்கப்பட்ட ஏழைமக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்ட போது மக்கள் முண்டியடித்து முன்னேறி கொடுப்பனவுகளை முதலில் பெற்றுக் கொள்ள முயன்ற சம்பவத்தில் 40 பேருக்கு மேற்பட்டவர்கள் நசியுண்டு மரணமானதாகவும் பலபேர் காயமுற்றதாகவும் வெளிவந்த செய்திகள் அனைவர் மனங்களையும் கசியச் செய்துவிட்டதில் ஆச்சரியமில்லை.

தமிழ்நாட்டில் கடந்த வருடம் ஆழிப் பேரலையின்போதும் ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டதுடன், எண்ணிறைந்தவர்கள் நிர்க்கதிக்குள்ளானமையும் தெரிந்த விடயம். அந்தத் துன்பத்திலிருந்து ஒருவாறு மீண்டு கொண்டிருந்தவேளையில் தொடர் மழையும் வெள்ளப்பெருக்கும் தமிழ்நாட்டு மக்களைப் பெரும் துன்பத்துக்குள்ளாக்கி விட்டன.

இந்தத் துன்பத்தையும் இடர்பாடுகளையும் தீர்த்துவைத்து மக்களை மீண்டும் இயல்பான வாழ்வுக்குத் திரும்பக்கூடிய எல்லா வகையான வசதிகளையும் செய்துகொடுக்க வேண்டியது பதவியிலிருக்கும் தமிழ்நாடு அரசின் பொறுப்பு - அதற்குச் செவ்வையான முறையில் நிதி ஆதாரங்களை வழங்கி உதவவேண்டியது மத்தியில் பதவி வகிக்கும் தலைவர்களின் கடமை. இவைக்கு மேலாக தமிழ்நாடு அரசு எடுக்கும் நல்லகாரியங்களுக்கு எதிர்க்கட்சிகளும் இடையூறு விளைவிக்காமல் உதவவேண்டும் என்று பொதுவாக எதிர்பார்க்கப்படுகின்றது. ஒரு ஜனநாயக அமைப்பில் இதுவே நாகரிகமான செயற்பாடு.

ஆனால், அங்கு என்ன நடக்கின்றது? ஆழிப்பேரலை அனர்த்த விவகாரத்தை மட்டுமன்றி மழைவெள்ளத்தால் ஏற்படும் பாதிப்புகளையும் கூட ஆளும் கட்சி தனது அரசியல் ஆதாயத்துக்கு - பிரசாரத்துக்குப் பயன்படுத்திக்கொள்வதாகச் செய்திகள் கூறுகின்றன. அதுமட்டுமன்றி துன்பத்தில் உழலும் மக்களுக்கு உதவிகளை வழங்கும்போது அவை முறையாகத் திட்டமிடப்படாமல் ஏனோதானோ என்றவகையில் அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் நடந்துகொள்வதாகக் கூறப்படுகின்றது.

இம்மாதிரி நடவடிக்கைகள்தான் அண்மையில் நிவாரண உதவி பெறுவதற்கு மக்கள் பெரும் எடுப்பில் முண்டியடித்து நசிபட்டு இறக்கக் காரணமாகியுள்ளது. இதற்குப் பதவியிலிருக்கும் ஜெயலலிதா அரசு பொறுப்பேற்கவேண்டும். பதவியிலிருந்து விலகவேண்டும் என்றெல்லாம் எதிர்க்கட்சிகள் குறிப்பாக திராவிட முன்னேற்றக்கழகமும் அதன் தோழமைக் கட்சிகளும் கூப்பாடு போட்டுவருகின்றன.

நிர்வாகச் சீர்கேட்டின் விளைவாக் இவ்வாறு மக்கள் பலியானமைக்கு அரசு பொறுப்பேற்று - அதற்குக் காரணமாய் இருந்துள்ளவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுப்பது அவசியம் - அவசரம். மக்கள் துன்பங்களை அடுத்துவரும் தேர்தலை மனதில் வைத்துக்கொண்டு பயன்படுத்த ஆளும் கட்சி முயன்றதாலேயே இந்தத் துன்பியல் சம்பவம் நடந்தேறியது என்று எதிர்க்கட்சிகள் சாடுவதில் உண்மையில்லாமலுமில்லை. அந்த நோக்கிலேயே எதிர்க்கட்சிகளும் செயற்படுவதாகக் கூறப்படுகின்றது.

மக்கள் துன்பம், இயற்கைப்பேரிடர் என்று வரும்போது ஆளும்கட்சியினர் நேர்மையாகச் செயற்படவேண்டும். கட்சி சார்பற்ற முறையில் உதவிகளை வழங்கவேண்டும் என்று எதிர்பார்ப்பதில் தவறில்லை. அதே விதத்தில் எதிர்க்கட்சிகளும் செயற்படவேண்டும். ஆளும் கட்சியினரின் நல்ல செயற்பாடுகளுக்கு அரசியல் சாயம்பூசாமல் ஒத்துழைப்பது பெரும் எடுப்பில் மக்கள் துன்பங்களைத் தீர்த்துவைக்க உதவியதாக இருக்கும்.

மழையாலும் வெள்ளத்தாலும் லட்சக் கணக்கான மக்கள் துன்பத்தில் ஆழ்ந்திருக்கும் நிலையில் தமிழ்நாடு அரசியல் கட்சிகள் நிவாரண வேலைகளைப் போர்க்கால அடிப்படையில் அணுகுவதைவிடுத்து பெருமளவில் சந்தர்ப்பத்தை அரசியல் இலாபத்துக்குப் பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறார்கள் என்று தகவல்கள் வந்தவண்ணமிருக்கின்றன.

என்றாலும், கடந்தகாலங்களில் போலன்றி இம்முறை வெள்ள அனர்த்த நிவாரண நடவடிக்கைகளில் அரசியல் செயற்பாடுகள் குறைவாக இருந்துள்ளது என்று பார்வையாளர்கள் கூறுகின்றார்கள்:

* * *

## அறிவித்தபடியே பதவியைத் துறக்கப்போகிறார் பூட்டான் மன்னர்

**பூட்டான் மன்னரின் இறுதி முடிவு**


முன்பு அவ்வப்போது அறிவித்தது போலன்றி பூட்டான் மன்னர் தாம் அரசுக் கட்டிலிருந்து இறங்கப்போவது நிச்சயமே என்ற வகையில் இப்பொழுது உறுதியாக அறிவித்துவிட்டார். இமாலயத்திலுள்ள இந்தச் சிறிய இராஜ்யத்தில் 2008ஆம் ஆண்டு நடக்கவிருக்கும் பொதுத்தேர்தலையடுத்து மக்கள் தனது மன்னருக்கான அதிகாரங்களை நாடாளுமன்றத்திடம் கொடுத்துவிட்டு ஆட்சி அதிகாரத்திலிருந்து ஒதுங்கிக் கொள்வதாக அறிவித்துள்ளார்.

"எனது நாட்டு மக்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகின்றேன். நாடாளுமன்ற ஜனநாயக முறைப்படி 2008 ஆம் ஆண்டு முதன்முதலாக நாடாளுமன்றத்துக்கான பொதுத்தேர்தல் நடைபெறும்'' என்று மன்னர் ஜிக்மே சிங்யே வாங்சுக் ஒரு பொதுக் கூடத்தில் அறிவித்தார்.

சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் இருக்கும் மலைப் பிரதேசத்தின் மன்னர் தமது நாட்டில் மக்கள் ஜனநாயகத்தைக் கொண்டுவரப்போவதாக கடந்த மார்ச் மாதம் அறிவித்திருந்தார்.

1907ஆம் ஆண்டு பிரிட்டிஷ் அரசு இந்தியாவை ஆண்டபோது உருவாக்கப்பட்ட இந்த முழுமையான மன்னராட்சிக்குட்பட்ட இந்நாடு ஏறத்தாழ ஒரு நூற்றாண்டு காலம் மன்னர் ஆட்சியிலிருந்துள்ளது.

தமது நாட்டு மக்களால் கடவுள் போல் மதிக்கப்படும் 50 வயதான மன்னர் வாங்சுக் தமது பொறுப்புக்களைத் தனது 25 வயது மகனிடம் கையளிக்கப்போவதாகத் தெரிவித்துள்ளார். மன்னரின் 10 பிள்ளைகளில் மூத்தவரான கேசார் நம்சியால் வாங்சுக்



பதவி ஆசை இல்லாத பூட்டான் மன்னர் வான்சுக்

2008ஆம் ஆண்டு முடி சூட்டப்படுவார். தந்தையைப்போலவே இந்த இளவரசரும் கூடைப்பந்து, கால்பந்து விளையாட்டுகளில் விருப்பமுள்ளவர்.

நாட்டின் 5ஆவது மன்னராகத் தனது மகன் பொறுப்பெடுத்துக் கொள்வார் என்று கூறிய மன்னர், அதிகாரத்தில் எந்த அளவுக்கு மன்னருக்குப் பகிர்ந்தளிக்கப்படவிருக்கிறது என்பது பற்றி விவரிக்கவில்லை.

7 லட்சத்திலிருந்து இருபத்திரண்டரை லட்சம் மக்கள் தொகையைக் கொண்டிருக்கும் பூட்டானில் இதுவரை அரசியல் கட்சிகள் எதுவும் இருந்ததில்லை. இருகட்சி முறையை அறிமுகப்படுத்தவே மன்னர் விரும்புகின்றார்.

பூட்டானில் வெளிநாட்டு நாகரிகம் அளவுக்கும் தேவைக்கும் அதிகமாக நுழைவதை மன்னர் அனுமதிப்பதில்லை. நாட்டின் கலாசாரமும் கவனமாகப் பாதுகாக்கப்பட்டும் சுற்றாடலும் கெட்டுப்போகாமல் இருக்க இந்த ஏற்பாடு. வருடத்தில் சுமார் 6 ஆயிரம் மேற்கத்திய சுற்றுலாப் பயணிகளே அனுமதிக்கப்படுவார்கள். அவர்களும் மிக உன்னிப்பாக கண்காணிக்கப்படுவார்கள். நாடு நவீன மயமாவதை மன்னர் மிகக் கவனமாக வழிநடத்தி வந்துள்ளார். இன்றைய உலகிலிருந்து தமது நாட்டுத் தேவை எது என்பதை மட்டுமே தெரிந்தெடுத்து அனுமதித்துள்ளார். தொலைக்காட்சியும்கூட மிக அண்மையில்தான் அறிமுகப்படுத்தப்பட்டது.

* * *

## பண்டைக்கால பூதாகார மிருகம் மீண்டும் பூமியில் நடமாடப் போகிறது

**பழங்காலத்து வூலி மம்மத்**

யானையைப் போன்றது. ஆனால், யானையைவிட மிகப்பெரிய மிருகம். நீண்ட தந்தங்களைக்கொண்ட உடல் முழுவதும் அடர்த்தியான மயிர் கொண்ட மிக விலாசமான தேகம் கொண்ட (Wooly Mammath) என்றழைக்கப்பட்ட 10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் உயிர்வாழ்ந்த இம்மிருகம் மீண்டும் பூமியில் நடமாடப்போகிறது.

அதே மிருகமா அல்லது அதைப் போன்ற மிருகமாக என்பது கேள்விக்குறியானாலும் அவ்வாறான ஒரு மிருகத்தை உருவாக்குவதில் விஞ்ஞானிகள் இறங்கியுள்ளார்கள்.



10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் பூமியில் வாழ்ந்து மறைந்த 'வூலி மம்மத்'

இந்தப் பூதாகார மிருகத்தைப் பற்றிய விவரங்களையெல்லாம் [illegible]த்தறிந்துவரும் விஞ்ஞானிகள் அதன் உ[illegible]வம் பற்றிய மரபணுவின் இரகசியத்தைக் கண்டறிந்து அதன் ஒரு பகுதியை வடிவமைத்துவிட்டதாகவும் அதை முழுமையாக்க இன்னும் சிறிது காலம் பிடிக்கும் என்றும் அறிவித்திருக்கிறார்கள்.

சைபீரியாவில் உறைபனி புதைபடிவத்தில் மிகப் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டு இருந்துள்ள இம்மிருகத்தின் மரபணு மாதிரியிலிருந்து அதன் மரபணு மூலம் பிரித்தெடுக்கப்பட்டுள்ளது. அம்மூலம் படிப்படியாக மேலும் விரிவாக்கப்பட்டு ஒரு மிருகத்தை உருவாக்கும் அளவுக்கு முன்னேற்றம் காணப்பட்டவுடன் அந்த மிருகத்தின் வழிவந்த இன்றைய கால மிருகத்தில் 'குலோன்' செய்து அந்தப் பூர்வீக மிருகத்தைப் பிறப்பிக்கலாம் என்று இது பற்றி ஆராய்ந்துவரும் ரஷ்யா, ஜப்பானிய விஞ்ஞானிகள் அறிவித்துள்ளார்கள்.

இது பற்றி ஆராய்ந்துவரும் விஞ்ஞானிகள் குழுவில் உள்ள ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக விஞ்ஞானி ஒருவர் தகவல் தருகையில், இந்த ஆராய்ச்சி முன்னேறும்போது ஒரு யானையின் மூலம் அந்த பண்டைய மிருகத்தை உருவாக்குவதுபோல் ஒரு யானையையே அந்தப் பண்டைக்கால மிருகமாக மாற்றி உருவாக்கவும் முடியும் என்று கூறினார்.

* * *

**புதுவிதக் திருமணம்**

ஆணைப் பெண்ணும், பெண்ணை ஆணும் திருமணம் செய்துகொள்வதுதான் நம் நாடுகளில் உள்ள வழக்கம். ஆனால், ஓர் ஆணை இன்னோர் ஆணும் ஒரு பெண்ணை இன்னொரு பெண்ணும் திருமணம் செய்துகொள்ளும் வழக்கம் இந்த நாள்களில் புதிய கலாசாரம் வளர்ந்து வருவது பலருக்கு ஆச்சரியமாக இருக்கும்.

ஆசிய நாடுகளில் இது மிக அபூர்வமென்றாலும் மேற்கு நாடுகளில் இப்பொழுது சர்வசாதாரணமாக நடக்கத் தொடங்கியுள்ளது. சில நாடுகளில் அவ்விதத் திருமணங்களை அனுமதிக்கும் சட்டங்களும் கொண்டு வரப்பட்டுள்ளன.



. புதிய தம்பதி

சில நாடுகள் இவ்விதத் திருமணங்கள் சமூக சீர்கேட்டையே குறிக்கும் என்று விடாப்பிடியாக எதிர்த்த போதிலும் நாகரிகம் என்ற பெயரில் மட்டுமல்ல தனிமனித உரிமை, ஜனநாயக உரிமை என்ற வக்காலத்துகளை வைத்துக்கொண்டு அரசுகளை ஆட்டிப் படைக்கிறார்கள். இப்படியானவர்கள் சங்கங்களை அமைத்துக்கொண்டு ஆட்சியாளர்களை மிரட்டுகிறார்கள்.

இந்தத் திருமணங்களுக்குச் சில சமய ஸ்தாபனங்கள் இல்லாவிட்டாலும் சில சமயத் தலைவர்கள் பச்சைக்கொடி காட்டுகிறார்கள். சில சமயத் தலைவர்கள் தாமே முன்னின்று இத்திருமணங்களை நடத்தியும் வைக்கிறார்கள்.

இவ்விதமான ஒரு பெண்ணும் இன்னொரு பெண்ணும் திருமணம் செய்துகொண்ட நிகழ்வு அண்மையில் பிரிட்டனில் நடந்தது. சமயத் தலைவர்கள் கடுமையாக எதிர்த்தபோதும் இவ்வித திருமண[illegible]ளை ஆதரிக்கும் குழுக்கள் அவர்களுடன் மே[illegible]திக் கொண்டு உரிமைப் போராட்டம் நடத்தியுள்ளனர்.

கிறெய்னே குறோஸ் மற்றும் ஷன்னென் சிக்கெல்ஸ் ஆகிய இருவருமே இவ்வாறு திருமணம் புரிந்துகொண்ட பெண்கள்.

பெல்பாஸ்ட் நகர மண்டபத்தில் இவர்களின் திருமணம் சத்தியப்பிரமாணம் மோதிரம் மாற்றுதலுடன் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது வெளியில் ஆதரவாளர்களும் எதிர்ப்பாளர்களும் மோதிக்கொண்டனர்.

* * *

**ஆப்கானில் புதிய நாடாளுமன்று**

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் தோற்கடிக்கப்பட்டு நான்கு ஆண்டுகளின் பின்னர் முதல் தடவையாக ஆப்கானிஸ்தான் நாடாளுமன்றம் கடந்த திங்கட்கிழமை கூடி நடவடிக்கைகளை மேற்கொண்டது.

நாடாளுமன்றம் கூடுவதையொட்டி தலிபான்களின் தாக்குதல் இடம்பெறலாம் என்ற அச்சத்தில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. 249 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்திற்கு இளம்பெண்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள்.

நாட்டில் அமைதியையும் மீள் இணக்கப்பாட்டையும் புதிய நாடாளுமன்றம் கொண்டுவரும் என்று புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆப்கான் மக்களும் நம்புகின்றார்கள்.

தலிபான்களைப் பொறுத்தவரையில் புதிய நாடாளுமன்றம் அமெரிக்க ஆக்கிரமிப்பின் அடையாளம். அந்நியர்களின் கையாள்களாக ஆப்கானியர்கள் நடக்கக் கூடாது என்றும் எச்சரித்துள்ளார்கள்.

* * *

**இவ்வருட முக்கிய பிரமுகர்கள்**

'நியூயோர்க் டைம்ஸ்' சஞ்சிகை இவ்வருடத்திற்கான முக்கிய பிரமுகர்களாக உலக செல்வந்தர் பில்கேட்ஸ், அவரது மனைவி லின்டாகேட்ஸ் மற்றும் ஐரிஸ் ரொக் பாடகர் போனோ ஆகியவர்களைத் தெரிவுசெய்துள்ளது.

சிறப்பான பணிகளைச் செய்பவர்களை பாராட்டிக் கௌரவிக்கும் வகையில் 'டைம்ஸ்' சஞ்சிகை வருடந்தோறும் இவ்வாறான பிரமுகர்களைத் தெரிவுசெய்து கௌரவித்து வருகின்றது.

உலகிலேயே பெரும் செல்வந்தராக கருதப்படும் பில் கேட்ஸும் அவரது மனைவியும் கேட்ஸ் பவுண்டேஷன் என்ற தர்ம ஸ்தாபனம் மூலம் வறுமை ஒழிப்பு, எச்.ஐ.வி. மற்றும் எயிட்ஸ் தவிர்ப்புப் பணிகளைச் செய்துவருகின்றார்கள். அதேபோல பாடகர் டோனோ தமது சக பாடகர்களுடன் சேர்ந்து ஆபிரிக்க நாடுகளில் வறுமை ஒழிப்பிலும் கடன்களை இரத்துச் செய்யும் நடவடிக்கையிலும் ஈடுபட்டுவருகின்றார். *

# காலத்தைக் கருத்தில் கொள்ளாது நாட்டை மீண்டும் போருக்குள் தள்ளப் போகிறாரா ஜனாதிபதி?

ஸ்ரீலங்கா அரசுக்கும் - தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கைச்சாத்தான யுத்தநிறுத்த உடன்படிக்கை இன்னமும் நடைமுறையில் இருக்கின்றதா என்ற சந்தேகப்படும் அளவுக்கு நாட்டின் நிலைமை மோசமாகியுள்ளது.

இந்த உடன்படிக்கையின் பிரகாரம் தோற்றுவிக்கப்பட்ட யுத்தமற்ற அமைதியான - சூழலுக்கு பங்கம் விளைவிக்கும் வகையிலான செயற்பாடுகள் தற்போது தீவிரமடைந்து வருகின்றன.

படையினரின் பிரசன்னம், வீதித்தடைகள், சுற்றிவளைப்புத் தேடுதல்கள், படையினர் மக்கள் மீது மேற்கொள்ளும் தாக்குதல்கள், சூட்டுச் சம்பவங்கள், கிரனைட் தாக்குதல்கள் ஆகியன பெருகிவிட்டன.

படையினரின் செயற்பாடுகளால் மக்கள் மத்தியில் கொந்தளிப்பும் அச்ச நிலையும் தோன்றிவருகின்றன.

யுத்தநிறுத்த உடன்பாடு நடைமுறைக்கு வந்த பின் ஏ-9 பாதை திறக்கப்பட்டு, அரசியல் பணிக்காக விடுதலைப் புலிப் போராளிகள் யாழ்ப்பாணம் வந்தனர். ஆயுதங்கள் இன்றி மக்களின் ஆதரவுடன் - பங்களிப்புடன் அரசியல் பணிகளை முன்னெடுத்தனர்.



சமாதானத்தில் கொண்ட உறுதியுடன் உடன்படிக்கையைச் செம்மையாக நடை முறைப்படுத்த அவர்கள் தமது பங்களிப்பை வழங்கினர். இந்த உடன்படிக்கை மூலம் மக்கள் எதிர்பார்த்த இயல்பு வாழ்க்கை மீளத் திரும்பாத போதிலும், அமைதி நிலை - சுமுக நிலை - குடாநாட்டில் ஓரளவேனும் நிலவியது.

### மக்கள் போராட்டங்கள்

யுத்தநிறுத்த உடன்படிக்கையில் பரிந்துரைக்கப்பட்டவாறு பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் மீள்குடியமர்வு, சொந்தக் கிராமங்களுக்கு மக்கள் மீளத்திரும்பி விவசாய, கடற்றொழில் முயற்சிகளை சுதந்திரமாக முன்னெடுத்தல் போன்ற வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிட்டாததால் மக்கள் மத்தியில் பெரும் ஏமாற்றம் ஏற்பட்டது. அதன் விளைவாக விரக்தியும் ஏமாற்றமும் அடைந்த மக்கள், தமக்கே உரிய வழியில் போராட்டங்களை முன்னெடுத்தனர்.

பொங்குதமிழ் நிகழ்வு, எழுச்சி நிகழ்வுகள் என்பன நடத்தி அவர்கள் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தினர். தமது தாயகத்தில் சுயநிர்ணய உரிமையுடன் வாழ வசதியாக நடைமுறையில் உள்ள அரசை அங்கீகரிக்கவேண்டும் என்று சர்வதேசத்திடம் அவர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

மக்கள் தமது விருப்பை சர்வதேசத்திற்கு உரத்து வெளியிட்டுவந்த வேளையில் தெற்கு, ஜனாதிபதித் தேர்தல் ஒன்றைச் சந்தித்தது. பேரினவாதச் சக்திகளுடன் கூட்டு வைத்துச் சிங்கள - பௌத்த மேலாண்மைப் போக்கைக் கடைப்பிடித்து ஜனாதிபதியானார் மஹிந்த ராஜபக்ஷ.

தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவு செய்யக்கூடிய தீர்வை மகிந்த முன்வைக்கமாட்டார் என்பதை தமிழ் மக்கள் அறிந்திருக்கின்றனர்.

அவர்பதவியேற்று ஒரு வார காலத்துக்குள் மாவீரர் தினம் வந்தது. அந்த மாவீரர் தினத்தையொட்டி வருடா வருடம் ஆற்றிவரும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விடுதலைப் புலிகளின் கொள்கை விளக்கத்துடனான உரையை விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் ஆற்றினார்.

அந்த உரையில், மஹிந்தவுக்கு குறுகிய கால அவகாசம் ஒன்றை அவர் வழங்கினார். தமிழ் மக்கள் ஏற்கக்கூடிய தீர்வு ஒன்றை வைப்பதற்கான கால அவகாசமே அதுவாகும். அக்கால அவகாசத்திற்குள் தீர்வு முன்வைக்கப்படாத பட்சத்தில், தமது மக்களுடன் இணைந்து சுயநிர்ணய உரிமைப் போராட்டம் தீவிரப்படுத்தப்படும் என்று அவர் தெற்குத் தலைமைக்கு உறைக்கத்தக்கவகையில் தெரிவித்திருந்தார்.

மகிந்த பதவியேற்று இருவாரகாலம் ஆகு முன்னரே நீர்வேலியில் தேசவிடுதலைப் பற்றாளர்களான இருவர் படையினரின் புலனாய்வுப் பிரிவினர் மற்றும் ஒட்டுக்குழுவினர் இணைந்த கூட்டினால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

### கொந்தளிப்பின் ஆரம்பம்

இப் படுகொலைகள் கொந்தளிப்பை ஏற்படுத்தின. அதாவது படையினருக்கு எதிரான எதிர்ப்பு நடவடிக்கைகளை மக்கள் தீவிரப்படுத்தினர். இதனால் படையினர் முகாம்களுக்குள் முடங்கவேண்டிய சூழல் தோன்றியது.

அதனை முறியடிக்க எண்ணி, அரசு பெரும் எண்ணிக்கையான படையினரைப் பாதுகாப்பில் ஈடுபடுத்தி புரிந்துணர்வு போர்நிறுத்த ஒப்பந்தங்களுக்கு முந்தியகால நெருக்குதல் நிலையை உண்டாக்கி உள்ளது. பரவலாக மக்கள் மீதான தாக்குதல்களை படையினர் தீவிரமாக்கியதன் காரணமாக மக்கள் படையும் களமிறங்கியது. அதற்கான பதில் நடவடிக்கையாக மக்கள் மீதான தாக்குதல்களைப் படையினர் தீவிரமாக்கியுள்ளனர்.

மக்களை 'எஸ்லோன்' பைப்புகள், பொல்லுகள், துவக்குப்பிடிகள் கொண்டு தாக்கி அவர்களுக்கு பலவகையான உடற்பாதிப்புகளை ஏற்படுத்தி, உளவியல் ரீதியான போர் ஒன்றை அவர்களுக்கு எதிராகப் படையினர் முன்னெடுத்து வருகின்றனர். படையினரின் போக்கு மக்கள் மத்தியில் பதற்ற நிலையைத் தோற்றுவித்துள்ளது. மீண்டும் யுத்தச் சூழல் படிப்படியாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. சமாதான காலத்தில் சீன வெடி வெடித்தது போன்று துப்பாக்கிகள் வெளிப்படுத்தும் சன்னங்கள் வெடிக்க ஆரம்பமாகிவிட்டன.

சமாதான காலத்தில் உறங்கிக் கிடந்த துப்பாக்கிகள் மீண்டும் முழங்கத் தொடங்கிவிட்டன. மௌனமாக இருந்து கொண்டு யுத்தச் சூழலை உருவாக்கி வருகிறது அரசு.

கடந்தகாலங்களில் சமாதானப் பேச்சுக்கள் முறியும் போது விடுதலைப்புலிகள் பெரும் தாக்குதல் ஒன்றை நடத்தி யுத்தத்துக்கு முகங்கொடுத்து வந்துள்ளனர்.

இப்போது சமாதான முயற்சிகள் குறித்து சர்வதேசத்துடன் பேசுகிறார்கள். யுத்தநிறுத்தச் சூழலை எவ்வாறு தொடர்ந்து பேணலாம் என்பது குறித்து (சர்வதேச கண்காணிப்பாளர்கள் அங்கம் வகிக்கும்) கண்காணிப்புக் குழுவினருடன் பேசிக் கொண்டிருக்கிறார்கள். நோர்வே அனுசரணையாளர்களுடன் ஆலோசனை நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

### உச்ச நிலைக்குப் போகுமா?

ஆனால் மறுபுறத்தில் மக்களின் கொந்தளிப்பின் வெளிப்பாடாக தாக்குதல்கள் தீவிரமாகி வருகின்றன. படையினர் மக்கள் மீதான நெருக்குவாரங்களைத் தீவிரமாக்கிக் கொண்டிருப்பதால், அடுத்துவரும் வாரங்களில் மக்களின் கொந்தளிப்பு உச்ச நிலையை அடையுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

மக்கள் கொந்தளிப்பு தீவிரமாகும் போது, அதற்கான காரணத்தை உணர்ந்து தீர்வுகாணும் போக்கை, எண்ணத்தைத் தெற்குத் தலைமையிடம் சிறிதும் காணமுடியவில்லையே!

சர்வதேசத்தின் அனுசரணையுடன் உடனடியாகப் பேச்சுகளை ஆரம்பிக்க வேண்டும். அதன் மூலம் நாட்டில் அமைதி நிலையைத் தோற்றுவிக்க வேண்டும் என்ற சிந்தனை தெற்குத் தலைமையிடம் இன்னமும் உருவாகவில்லை என்றே கருத வேண்டி உள்ளது; இருளார்ந்த நிலையில் அதனை அரசு கடைப்பிடித்து வருகிறது.

தெற்கில் தமிழ் இளைஞர்களைக் கைதுசெய்வது, வடக்கில் படையினரின் பிரசன்னத்தை அதிகரிப்பது, யுத்தத்தை எதிர்கொள்ளப் படையினர்தயாரெனத் தெரிவித்து யுத்தத்துக்கான ஏற்பாடுகளைச் செய்வது போன்ற செயற்பாடுகளைத் தீவிரமாக்கி வருவது போன்ற நடவடிக்கைகள் மேற்சொன்ன எண்ணத்தையே உருவாக்குகிறது.

**வாராந்த அரசியல் அலசல்**
**குகா**

விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் எனச் சர்வதேசத்துக்கு தெரிவித்து ஐரோப்பிய ஒன்றியம் உட்பட பலநாடுகளை புலிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு தூண்டுவது, சர்வேதச அமைப்புப் பிரதிநிதிகள் மற்றும் ராஜதந்திரிகள் விடுதலைப் புலிகளைச் சந்திப்பதைத் தடுத்து, வடக்கு - கிழக்குக்கு வெளியே வாழும் தமிழ் மக்களிடையே அச்ச நிலையைத் தோற்றுவிப்பது போன்ற செயற்பாடுகளையும் தெற்குத் தலைமை கைவிட வேண்டும்.

உண்மையிலேயே, தமிழ் மக்களுக்கு தீர்வு ஒன்றை முன்வைத்து அதன் மூலம் நாட்டின் தேசிய பிரச்சினையான இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண மனச் சுத்தியுடன் தெற்குத் தலைமை செயற்பட முனையுமாயின், வன்செயல்கள் தீவிரமடைவதைத் தடுக்க வழி இல்லாமல் இல்லை.

### யாழ்.பல்கலைக்கழக அதிகாரிகள், மாணவர்கள் மீதான தாக்குதல்கள்


யாழ்.குடாநாட்டுத் தமிழ் மக்களின் உயர் கல்வி நிறுவனமான யாழ்.பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மற்றும் பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் இணைந்து மேற்கொண்ட அமைதிப் பேரணியை இரும்புக்கரம் கொண்டு தாக்கியமை, மறுநாள் பல்கலைக்கழக வளாகத்துக்குள் போய் விரிவுரையாளர்கள், மாணவர்களைத் தாக்கியமை போன்ற அடாவடித்தனமான செயல்களை மேற்கொண்டமை, "சமாதானத்தில் அல்ல யுத்தத்தின் மூலமே நாங்கள் தமிழருக்கு உரிமை கொடுப்போம்" என்று தெற்குத் தலைமையின் கொள்கையை வெளிப்படுத்தி நிற்கின்றது.

இந்த நிலையில், தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளின் அனுமதியுடன் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை கடந்த புதன்கிழமை சந்தித்துள்ளனர்.

மக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்களை எடுத்துக்கூறிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பல்கலைக்கழகத்துக்கு அருகில் உள்ள முகாமை அகற்றி சுமுக நிலையை ஏற்படுத்த வேண்டும் என அவரிடம் கோரினர்.

அவரது பதில் வெளிவர முன்னர், அங்கு சமுகம் அளித்திருந்த படை அதிகாரிகள் இக்கோரிக்கை ஏற்புடையதல்ல என்று தெரிவித்திருக்கின்றனர்.

ஆனால், அவர்கள் மேற்படி கருத்தை வெளியிட்ட பின்னர், 'யுத்தமற்ற சூழலையே நான் விரும்புகின்றேன். உங்கள் கோரிக்கையைப் பரிசீலனை செய்து விரைவில் மாற்று ஏற்பாடு ஒன்று செய்வேன்" என்று கூட்டமைப்பு எம்.பிக்களிடம் ஜனாதிபதி கூறியுள்ளார்.



"விரைவில் பேச்சுக்களை ஆரம்பிக்க விரும்புகிறேன். அதற்காக விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்திக்க விரும்புகிறேன். அவரிடம் நீங்கள் என்னைக் கூட்டிப் போவீர்களா?" என்றும் அவர் தமிழ் எம்.பிக்களிடம் கேட்டுள்ளார்.

தேர்தலுக்காகக் கூட்டுச் சேர்ந்த பேரினவாதச் சக்திகளை புறந்தள்ளிவிட்டு, உண்மையில் விசுவாசமாக சமாதான முயற்சிகளில் ஜனாதிபதிக்கு ஈடுபடும் விருப்பமும் இருக்குமாயின், தமது காய்நகர்த்தல் மூலம் அதை வெளிப்படுத்த வேண்டும்.

விடுதலைப்புலிகள் நீட்டியுள்ள நேசக் கரத்தைப் பற்றி, யுத்தநிறுத்த உடன்பாட்டு அமுலாக்கல் தொடர்பாக உடனடியாகப் நேரடிப் பேச்சை நடத்தி, யுத்த சூழலைப் பேண நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அப்படி அவர் செயற்பட்டால், அது நாட்டைச் செம்மையாகக் கட்டி எழுப்ப உதவும். தற்போதுள்ள நிலையிலேயே தொடர்ந்து நாட்டை வைத்திருக்கவேண்டும் என்று விரும்பினால், அழகிய இந்த சின்னச்சிறிய நாடு, குட்டிச்சுவராகும் நிலைதான் உருவாகும்.

ஜனாதிபதியின் செயற்பாட்டின் வெளிப்பாடாகவே அண்மைய தாக்குதல்களை நோக்கவேண்டியுள்ளது என்கின்றனர் நோக்கர்கள்.

உண்மையில் பற்றுறுதியுடன் அவர் செயற்பட்டு நாட்டைக் கட்டி எழுப்பப் போகின்றாரா? அல்லது தமது சகாக்களின் ஆலோசனைப்படி செயற்பட்டு, விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் வழங்கியுள்ள குறுகிய கால அவகாசத்தை - சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தாமல் நாலாம் கட்ட. ஈழப் போருக்குள் நாட்டைக் கொண்டு செல்லப் போகிறாரா?

இவற்றுக்கான பதிலை செயல்மூலம் வெளிப்படுத்த வேடிய காலம் இது. குடாநாட்டில் இன்று தொடரும் தாக்குதல்களும் இராணுவச் செயற்பாடுகளும் சொல்லும் செய்தியும் அதுதான். ✱

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# வன்முறையில் பதிலளிக்க தூண்டுகின்ற படைகள்

*"யாழ். குடாநாட்டில் நிலைகொண்டுள்ள படையினர் அங்கு தங்களைத் தாக்குகின்றவர்கள் மீது பதில் தாக்குதல் நடத்தத் தைரியம் இல்லாமல் அச்சமயத்தில் பொதுமக்களின் வீடுகளுக்குள் போய் ஓடி ஒளிந்துகொள்கின்றார்கள். பின்னர், வீதிகளுக்கு வந்து போவோர், வருவோரெல்லாரையும் கண்மண் தெரியாமல் தாக்குகின்றனர்; அடாவடித்தனம் பண்ணுகின்றனர்; அட்டகாசம் புரிகின்றனர். இதுவே படையினரின் கோழைத்தனமான - கையாலாகாத்தனமான - செயற்பாடு."*

- இப்படி நாடாளுமன்றத்தில் உண்மையைப் போட்டு உடைத்திருக்கின்றார் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்.

இத்தகைய படைச் செயற்பாடுகள் எ[illegible] விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை நாடாளுமன்றத்தில் [illegible]கின்றார் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரான சிவாஜிலிங்கம்.

*"வடக்கில் ஒவ்வொரு பகுதியிலும் அப்பாவிப் பொதுமக்கள் படையினரின் பொல்லு, கொட்டன் தாக்குதல்களுக்கு இலக்காகின்றனர். பாடசாலை மாணவர்களும் தாக்கப்படுகின்றனர். அவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளைச் சுற்றிச் சோதனைச் சாவடிகள் அமைக்கப்படுகின்றன. மாணவர்களின் கல்வி கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளைப் பாதிப்பனவாகப் படையினரின் அடாவடித்தனங்கள் அமைகின்றன"* - என்று சுட்டிக்காட்டுகின்றார் சிவாஜிலிங்கம்.

தங்களுடைய ஜனநாயகச் செயற்பாடுகள் படையினரின் அடாவடித்தனத்தால் அடக்கப்படுவதை ஆட்சேபித்துத் தமது எதிர்ப்பை அமைதி முறையில் வெளியிடவும் கண்டனத்தை இலங்கைக் கண்காணிப்புக் குழுவினரிடம் தெரிவிக்கவும் யாழ். பல்கலைக்கழகச் சமூகம் அமைதி ஊர்வலம் ஒன்றை நடத்த முற்பட்டபோது அது படையினரின் ஆக்ரோஷ அடாவடி மூலம் அடித்து நொறுக்கிக் குழப்பப்பட்டது.

படைத்தரப்பின் இத்தகைய முரட்டுத்தனமான - முட்டாள்தனமான - காட்டுமிராண்டித் தனமான - அட்டகாசத்தின் விளைவு என்ன?

தங்களுடைய கருத்துக்களை - மன எண்ணப்பாட்டை - ஜனநாயக மற்றும் அமைதி முறையில் வெளியிடுவதற்குத் தடை விதித்து வன்முறை பிரயோகிக்கப்படுவதையும் -

தமது தாயக மண்ணிலேயே ஆக்கிரமிப்புப் படைகளினால் காரணமின்றி மோசமாகத் தாக்கப்பட்டு அகௌரவப் படுத்தப்படுவதையும் -

பொறுக்கமுடியாத இளஞ்சமூகம் இவற்றுக்கு அதே வழியில் - வன்முறைப்பாணியில் - பதில் கொடுப்பதே பொருத்தமானது, உசிதமானது என்ற தீர்மானத்துக்குச் செல்வதற்குத் தள்ளப்படுகின்றது.

இதையே, அப்பாவித் தமிழ் இளைஞர்களை கண்மூடித்தனமாகத் தாக்குவதன் மூலம் அவர்களைத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்வதற்குத் தூண்டி, முட்டாள்தனமாகத் தமது தலையில் தாமே மண்ணைத் தூவிக் கொள்ளும் கைங்கரியத்தைப் படையினர் புரிகின்றனர் என்று நாடாளுமன்றில் சுட்டிக்காட்டியிருக்கின்றார் சிவாஜிலிங்கம் எம்.பி.

கடந்த மாவீரர் தினத்தை ஒட்டி லண்டனில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றிய புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் கூட இதையே "சிங்களவர்களுக்கு மேல்மாடி இல்லை" என்று நையாண்டிப் பாணியில் சொன்னார்.

யாழ். பல்கலைச் சமூகத்தின் அமைதி ஊர்வலம் மீது சகட்டு மேனிக்கு, கண்மூடித்தனமாக இராணுவத்தினர் நடத்திய தாக்குதலை அடுத்து, பல்கலைக்கழக மாணவர்கள் பலரும் தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்வதற்கு - சுய பாதுகாப்புக்கு - எங்களுக்கு ஆயுதப் பயிற்சி தாருங்கள் எனப் புலிகளை அணுகிக் கோரினர் என்ற செய்திகள் வெளியாகியிருந்தமை கவனிக்கத்தக்கது.

ஆயுதம் ஏந்திய விடுதலைப் போராட்டத்துக்கு தமிழர்களைத் தள்ளியவர்கள் - தூண்டியவர்கள் - வேறு யாருமல்லர். தமிழர்களை இன ரீதியாக அடக்கி, ஒடுக்கிய பேரினவாதிகளும் காலங்காலமாக ஆக்கிரமிப்பு அரசுகளுக்குத் தலைமை வகித்த அவர்களின் தலைவர்களும்தான் அதற்குப் பொறுப்பு.

1983இல் தமிழர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்ட திட்டமிட்ட பௌத்த, சிங்களப் பேரினவாதத்தின் கொடூர வன்முறைகளே தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தில் பெரும் வளர்ச்சியை - பாய்ச்சலை - ஏற்படுத்தின என்ற யதார்த்தத்தைச் சிங்கள சமூகம் இன்னும் கூடப் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை.

ஐம்பதுகளின் பிற்பகுதியில் தனிச்சிங்களச் சட்டம் மூலம் தமிழ்மொழியும் இனமும் இந்த நாட்டில் மூன்றாம் தர நிலைக்குத் தள்ளப்பட்டபோது அதற்கு எதிராக அகிம்சை வழியில் - சாத்வீக முறையில் - குந்துமறியல் செய்த தமிழ்த் தலைவர்கள் பௌத்த, சிங்களப் பேரினவாதப் படைகளால் நையப்புடைக்கப்பட்டு, நாய்களைப் போல அடித்துவிரட்டப் பட்டனர்.

அதன் விளைவே நான்கு தசாப்த காலத்தின் பின்னர், இராணுவம் ஓடஓட விரட்டப்பட்டுத் தாக்கப்படும் நிலைமையாக உருவாகியிருக்கின்றது.

இவ்வளவு பட்டறிவுக்குப் பின்னரும் - அனுபவப் பாடத்துக்குப் பின்னரும் - அதே மார்க்கத்தில் தமிழர்களின் உணர்வெழுச்சியை அடக்க முற்படுவது முட்டாள்தனமின்றி வேறென்ன? யாழ். குடாநாட்டிலும் பிற இடங்களிலும் படைகள் புரியும் அட்டகாசம் அவற்றின் விளைவுகள், அந்த அடாவடித்தனங்களினால் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள தமிழ் இளைஞர்களின் மனதில் நெருப்பாகக் கொதித்து எழும்பும் இன உணர்ச்சி, ஆவேசம் ஆகியவற்றை நோக்கும்போது இத்தூண்டல்களின் பெறுபேறாகக் கிடைக்கப் போகும் எதிர்விளைவுகளின் தாக்கத்தை அரசும் அதன் படைத்தரப்பும் சரிவரப் புரிந்துகொள்ளவில்லை என்பது தெளிவாகின்றது. அதற்குரிய 'மேல்மாடி' இல்லை என்றால் என்ன செய்வது? விளைவுகளை எதிர்கொள்வது தான் சிங்களத்துக்கு ஒரே வழி. பட்டுத்தெளியட்டுமே.

# சர்வமத ஆலயங்களிலும் நாளை பிரார்த்தனை கடற்கரையோரங்களிலும் விசேட வைபவங்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.25

பெரும் உயிரிழப்புகளையும் சொத்தழிவையும் ஏற்படுத்திய ஆழிப்பேரலை அனர்த்தம் நிகழ்ந்து ஓராண்டு நிறைவடைவதை நினைவுகூரும் பல்வேறு நிகழ்ச்சிகள் குடாநாட்டில் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளன.

ஆழிப்பேரலைத் தாக்கத்தினால் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சிகளைப் பல பொது அமைப்புகள் ஏற்பாடு செய்துள்ளன.

விசேடமாக நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு குடாநாட்டில் உள்ள அனைத்து ஆலயங்களிலும் பேரலையால் உயிரிழந்தோரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தனையும், விசேட பூசை வழிபாடுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இன, மத பேதமின்றி இந்த நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு மக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஆழிப்பேரலையால் கடுமையான அழிவுகளைச் சந்தித்த வடமராட்சி, வடமராட்சி கிழக்கு ஆகிய பகுதிகளில் கடற்கரையோரங்களில் உயிரிழந்தோருக்கு அஞ்சலி செலுத்தும் விசேட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையங்களிலும் இறந்தோருக்கான ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை-

ஆழிப்பேரலையால் உயிரிழந்தோருக்கு அஞ்சலி செலுத்தும் சர்வமதப் பிரார்த்தனை நாளை மாலை இளவாலை புனித யாகப்பர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

'கியூடெக்' நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்தப் பிரார்த்தனையில் அனைத்து மதப் பிரமுகர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-8)

# நிரந்தர சமாதானம் உருவாகப் பொறுப்புடன் ஒன்றிணைவோம்!

## மாவட்ட படைத் தளபதி நத்தார் செய்தி

யாழ்ப்பாணம்,டிசெ.25

நிரந்தர சமாதானம் கிடைக்க கடமை உணர்வுடனும் பொறுப்புடனும் ஒன்றிணைந்து செயற்படுவோம். நத்தார் திருநாள் இதற்கு வழி செய்ய வேண்டும்.

- இவ்வாறு தமது நத்தார் வாழ்த்தில் அழைப்பு விடுத்துள்ளார் யாழ். மாவட்ட படைத்தளபதி மேஜர் ஜெனரல் சந்திரசிறி.

இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் :-

உலகமெங்கும் வாழும் கோடிக் கணக்கான கத்தோலிக்க மக்கள் கௌரவத்துடனும் பக்தியுடனும் சந்தோசத்துடனும் இயேசு பிரான் பிறப்பைக் கொண்டாடும் இந்தத் தினத்தில் யாழ்ப்பாணத்தில் வசிக்கும் கத்தோலிக்க பக்தர்களுக்கு நத்தார் வாழ்த்துச் செய்தியைத் தெரிவிப்பதற்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன்.

பல வருடங்களுக்கு முன்பிருந்தே கிறிஸ்தவ போதனைகள் இலங்கையில் மிகவும் துரிதமாக இடம்பெற்று புத்துயிர்பெற்று வந்தன. 1948ஆம் ஆண்டு பிரித்தானியாவிடமிருந்து இலங்கைக்குச் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு அகிம்சை' வழியில் போராடியபோது கிறிஸ்தவ மக்கள் பெரும் பங்களித்திருந்தார்கள். அதே போல் கிறிஸ்தவர்கள், சகல இன மக்களுடனும் ஏனைய மதத் தலைவர்களுடன் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் போலச் செயற்பட்டு நாட்டின் அபிவிருத்திக்காகச் சொல்லாலும் செயலாலும் - பெரும் பங்காற்றியவர்கள்.

மனித சமுதாயத்தில் கலவரங்கள், வன்செயல்கள், கொடியதன்மை, இரத்தக்களரி மற்றும் போராட்டங்கள் - புரட்சிகள் போன்றன இடம்பெற்ற காலத்திலேயே இயேசுபிரான் இவ்வுலகில் பிறந்தார். அன்றுமுதல் அவர் போதித்ததும் சமாதானத்தின் பெறுமதியையே. இவ்வுலகில் அமைதியில்லாத இடத்தில் வாழமுடியாது என்பதை அவர் அப்போதே அறிந்திருந்தார்.

அதனால்தான், 'சமாதானக் குமரன்' என்றும் அவரை நாம் அழைக்கின்றோம். அவர் கிறிஸ்து தர்மத்தை இனம், குலம் வேறுபாடு இல்லாமல் அகில உலக மக்களுக்குப் போதனை செய்தார்.

சமாதானம் என்ற வார்த்தை இன்றைக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட வார்த்தையாக இல்லாமல் அதை நிரந்தரமாக்கிக்கொள்ள சகலரும் கடமையுடன் பொறுப்புடனும் ஒன்றிணைந்து செயற்படுவோம். (எ)

# பலாலி வீதியை அகலமாக்குவதற்கு சிறாம்பியடி மக்கள் ஒத்துழைப்பு

வலி.வடக்கு,டிசெ.25

யாழ். பலாலி வீதியை அகலமாக்கும் திட்டத்தின் கீழ் சிறாம்பியடி (ஜே/79) கிராம அலுவலர் பிரிவிற்கு உட்பட்ட பலாலி வீதிப் பகுதியை அகலமாக்குவதற்கு குறிப்பிட்ட பகுதிப் பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக உறுதியளித்துள்ளனர்.

வீதியை அகலமாக்க வசதியாக, தமது காணிகளில் வேலிகள் - மதில்களைப் பின்னகர்த்துவதற்கும் இவர்கள் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

பலாலி வீதியை அகலமாக்குவது சம்பந்தமாகப் பொதுமக்களுடன் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடல் ஒன்று அண்மையில் ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள ஐக்கிய வாலிபர் சன்மார்க்க சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

சிறாம்பியடிப் பகுதிக்கான கிராம அலுவலர்கள் தில்லை நடராசா தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் வீதி அதிகார சபையின் பொறியியலாளர் எஸ்.சுதாகரன் கலந்து கொண்டு வீதியை அகலமாக்கவேண்டியதன் அவசியம் குறித்து எடுத்துக் கூறினார்.

சிறாம்பியடி கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அடங்கும் பலாலி வீதியில் உள்ள 59 காணிகளின் உரிமையாளர்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் இதில் கலந்துகொண்டனர். (எ-86)

# ஊர்காவற்றுறையில் ரூ.43 லட்சம் செலவில் சிறுவர் விளையாட்டுத்திடல், தகவல் பூங்கா

யாழ்ப்பாணம்,டிசெ.25

ஊர்காவற்றுறையில் ரூ.43 லட்சத்து 30 ஆயிரம் ரூபா செலவில் சகல வசதிகளையும் உள்ளடக்கிய சிறுவர் விளையாட்டுத்திடலும் சிறுவர் தகவல் தொழில்நுட்பப் பூங்காவும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

ஊர்காவற்றுறையில் உதவி அரச அதிபர் பணிமனைக்கு அருகில் கடற்கரையோரமாக இவை அமைக்கப்படுகின்றன.

சிறுவர் பாதுகாப்பு - இலங்கை அமைப்பு வழங்கிய நிதியுதவியுடனும் பொதுமக்களின் சிரம உதவியுடனும் இவற்றுக்கான நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு துரிதகதியில் நடைபெற்று வருகின்றன என்று தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன் தெரிவித்தார்.

மேற்படி சிறுவர் விளையாட்டுத் திடலில் நிழல் தரும் மரங்கள் நடுகை செய்யப்படும். மர மீள் நடுகைத் திட்டத்தின் கீழ் இது நடைமுறைப்படுத்தப் படுகின்றது. அத்துடன், சிறுவர் நூலகம், சிறுவர் தொழில்நுட்பப் பூங்கா என்பனவும் இந்த விளையாட்டுத்திடலின் சூழலில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

விளையாட்டுத்திடலில் சிறுவர்களின் உடல் நலத்தைப் பேணும் வகையிலும் பொழுதுபோக்குக்கு உதவும் வகையிலும் விளையாட்டு உபகரணங்களும் பொருத்தப்படும் என்றும் உதவி அரச அதிபர் மேலும் கூறினார்.

தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனை, கரம்பன் கிழக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்மூலம் மேற்படி நிர்மாணப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. (எ)

# திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம்,டிசெ.25

ஏழாலை சொர்ணாம்பிகை உடனுறை அம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை முதல் திருவாசக முற்றோதல் இடம்பெறவுள்ளது. (எ)

## நாளை

மார்கழி 11
திங்கட்கிழமை
26.12.2005
திதி: தசமி
பிற்பகல்: 01.24 வரை
நட்சத்திரம் : சுவாதி
முழுவதும்
சுபநேரம் : 12.27 - 01.57
ராகுகாலம் : 07.57 - 09.27
(யாவும் பழைய நேரப்படி)

# வாகனத்தில் வந்து இறங்கும் படையினர் கைதடி வீதிகளில் திடீரெனச் சோதனை

### *அச்சத்துடன் பயணிக்க வேண்டிய நிலை என்கின்றனர் மக்கள்*

கைதடி,டிசெ.25

கைதடிப் பகுதியில் வாகனங்களில் வரும் படையினர் திடீரென வாகனங்களை நிறுத்திவிட்டு வீதிவழியே செல்லும் பயணிகளைப் பலத்த சோதனைக்கு உட்படுத்தி வருகின்றனர்.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இவ்வாறு கைதடியில் பல இடங்களிலும் சோதனையில் ஈடுபட்ட படையினர், பொதுமக்களைப் பல மணிநேரம் தடுத்து வைத்திருந்தனர் என்றும் - தெரிவிக்கப்படுகின்றது.

கைதடி மத்தி, கைதடி கோப்பாய் வீதி மற்றும் கைதடி பெற்றோல் நிலைய வீதி ஆகியவற்றின் ஊடாகச் சென்ற பொதுமக்களே இவ்வாறு சில மணிநேரம் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர்.

இதற்கென பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினர் கைதடிப் பகுதியில் குவிக்கப்பட்டு வீதிகள் எங்கும் காவலுக்கு நிறுத்தப்பட்டிருந்தனர்.

இதேவேளை- படையினரின் இந்த நடவடிக்கைகளை அடுத்து கைதடிப் பகுதியில் கடந்த சில நாள்களாகப் பதட்ட நிலை ஏற்பட்டுள்ளது. பொதுமக்கள் வீதிகளில் அச்சத்துடன் பயணிப்பதை அவதானிக்க முடிகின்றது. (எ-75)

## உதயவாக்கு

பிறரோடு ஒத்துப்போகும் தன்மையையும் இனிய பண்புகளையும் வளருங்கள், உலகம் உங்கள் வசப்பட்டு விடும்.

-ஓர் அறிஞர்.

# கொக்குவிலில் நடந்த மருத்துவ முகாமில் 200 இற்கு அதிகமானோர் பங்கேற்பு!

வலி.வடக்கு,டிசெ.25

கொக்குவில் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் கொக்குவில் மேற்கு பாரதி சனசமூக நிலையத்தில் அண்மையில் பொது மருத்துவ முகாம் ஒன்று நடத்தப்பட்டது.

அண்மையில் பெய்த கடும் மழையையடுத்து இப்பகுதி மக்கள் வெள்ளப் பாதிப்புக்குள்ளாகியிருந்தனர்.

- இவ்வாறு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நடத்தப்பட்ட இந்த மருத்துவ முகாமில் 200 இற்கும் மேற்பட்ட பொது மக்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர் என்று லயன்ஸ் கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

வைத்திய கலாநிதி எஸ்.மணிவாசன் தலைமையில் இடம்பெற்ற இந்த மருத்துவ முகாமில் நான்கு வைத்தியர்கள் கலந்துகொண்டு மருத்துவ சேவைகளை வழங்கினர். (எ-86)




## யாழ்ப்பாணத்தில்

ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்ஜியின்
வாழும் கலைப்பயிற்சி

நாள்:- 26.12.2005 திங்கட்கிழமை மாலை 5.30 மணி

பயிற்சி பற்றிய இலவச அறிமுக உரை

இடம்:- கம்பன் கோட்டம், நல்லூர், யாழ்ப்பாணம்.

பயிற்சி நாள்கள்:- 27.12.2005 முதல் 01.01.2006 வரை
பயிற்சி நேரம்: காலை 6.30 மணி முதல் 8.30 மணி வரை
அல்லது மாலை 5 மணி முதல் 7 மணி வரை

மேலும் தொடர்புகளுக்கு: 0779059549, 0779059544, 0776160214

www.artofliving.org (44463) www.srisriravishankar.org



## ரங்கன் இசைக்கருவியகம்

RANGAN MUSICAL STORE

இல.56, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

- சகலவிதமான, இசைக் கருவிகளும் திருப்திகரமாகத் திருத்திக் கொடுக்கப்படும்.
- சகல இசைக் கருவிகளினதும் உதிரிப்பாகங்கள் விற்பனை செய்யப்படுவதோடு, புதிய, பயன்படுத்தப்பட்ட இசைக் கருவிகளும் விற்பனை செய்யப்படுகின்றது.
- சினிமாப் பாடலை வாத்தியங்களில் மீட்டுவதற்கான இசைக் குறிப்புப் புத்தகம் விற்பனைக்குண்டு.

T.P.: 021-222-7729, 0779123033

(44207) (21.26-11)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### அன்பொளி கல்வி நிலையம் - சாவகச்சேரி

தென்மராட்சியில் எமது கல்வி நிலையத்தில் கல்வி கற்ற தரம் 5 மாணவர்களில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

01 
ர.தேனுசன்
169 புள்ளி
மாவட்ட நிலை – 2
தேசிய நிலை – 5

02 
த.செந்தாளன்
168 புள்ளி
மாவட்ட நிலை – 3
தேசிய நிலை – 7

| இல: | மாணவர் பெயர் | புள்ளி |
|---|---|---|
| 03 | கு.பபீஷணன் | 157 |
| 04 | ஜெ.கம்ஷனா | 151 |
| 05 | ஜெ.ஜெயகீதன் | 150 |
| 06 | ஸ்ரீ. கிறீடி | 149 |
| 07 | ஜெ. சஜீவா | 149 |
| 08 | பாடாருகீசன் | 145 |
| 09 | க.சிவனுசன் | 145 |
| 10 | இ.ஆரணி | 145 |
| 11 | சி.சாமினி | 143 |
| 12 | ஞா.விதுர்சன் | 141 |
| 13 | கு.ராகவன் | 141 |
| 14 | ச.கஜேந்தினி | 140 |
| 15 | பொ.கஸ்ரோ | 138 |
| 16 | மு.அனுஜன் | 138 |
| 17 | பா.சாயிஜன் | 137 |
| 18 | ர.டயாகரன் | 135 |
| 19 | ஸ்ரீ.துளசிகரன் | 135 |
| 20 | ச.டிலக்ஷன் | 135 |
| 21 | மா.சிவகண்ணன் | 135 |
| 22 | த.வினுஜா | 135 |
| 23 | சு.சுகேனியா | 135 |

| இல: | மாணவர் பெயர் | புள்ளி |
|---|---|---|
| 24 | ச.பிரணவன் | 134 |
| 25 | சி.இந்திகா | 134 |
| 26 | வை.யாழினி | 132 |
| 27 | த.நிமலன் | 132 |
| 28 | க.நிரஞ்சன் | 130 |
| 29 | ப.தனுஷன் | 130 |
| 30 | ந.சந்துருதீபன் | 128 |
| 31 | ச.றஜிதன் | 128 |
| 32 | த.தர்சிகா | 128 |
| 33 | நா.தனுசிகா | 128 |
| 34 | தே.ஆதிரை | 127 |
| 35 | இ.வசந்தராம் | 126 |
| 36 | ந.விசோபன் | 126 |
| 37 | பா.திலக்ஷன் | 125 |
| 38 | ச.சித்திராங்கி | 125 |
| 39 | ம.கோவர்த்தன் | 124 |
| 40 | க.மதுசூதனன் | 124 |
| 41 | மு.அபிராமி | 124 |
| 42 | சி.பைரவி | 124 |
| 43 | ந.தர்சன் | 124 |

### வளர்மதி கல்வி நிலையம்-மட்டுவில்

| | | |
|---|---|---|
| 44 | சு.கேதாரன் | 150 |
| 45 | சி.நிலுஜா | 135 |
| 46 | உ.கஸ்தூரி | 131 |
| 47 | பா.அஜீபன் | 131 |

| | | |
|---|---|---|
| 48 | பா.கபில்ராஜ் | 129 |
| 49 | இ.ஆராதனா | 128 |
| 50 | தி.நிரோஜா | 127 |

இன்று (25.12.2005)ஞாயிற்றுக்கிழமை பரிசளிப்புவிழாவில் பரிசில்களைப் பெற்றுக்கொள்ளும் இம் மாணவர்களையும் சித்தியடைந்த ஏனைய மாணவர்களையும் இவர்களோடு கல்வி கற்று வெட்டுப்புள்ளிகளுக்கு அண்மித்த புள்ளிகளைப் பெற்ற ஏனைய மாணவர்களையும் கல்விப்பாதையில்வெற்றிகள் பெற்றிட மனம் நிறைந்த பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் மு.வே. அன்பழகன், இயக்குநர்,
உதவியாசிரியர்கள், மாணவர்கள்.

(44492)(52)

அன்பொளி கல்வி நிலையம், சாவகச்சேரி.

# இணுவில் இளைஞர் கழக பரிசளிப்பு விழா

இணுவில் கிழக்கு இளைஞர் கழகத்தின் ஆண்டு நிறைவும் பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இணுவில் கிழக்கு கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இளைஞர் கழகத் தலைவர் இ. தமிழரசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் பிரதம விருந்தினராக கலந்துகொள்வார்.

யாழ் மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவி இயக்குனர் தி.சிவதட்சணாமூர்த்தி, நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைவர் பெ.கனகசபாபதி, மாவட்ட இளைஞர் சேவை அலுவலர் எஸ்.சக்தி வேல் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்வர்.

கழகத்தால் நடத்தப்பட்ட பயிற்சி நெறிகளில் பங்குபற்றியோருக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும். (எ-204)

# ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

ஊர்காவற்துரை பிரதேச மாதாந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை மறு தினம் செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்கு ஊர்காவற்றுறை உதவி அரசங்க அதிபர் பணிமனையில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத் தில் திணைக்களத் தலைவர்கள் மற்றும் அரச அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதி நிதிகள் கலந்துகொள் ளவுள்ளனர். (எ-73)

# அட்டசீலங்களுடன்...

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியப் பிரதமராயிருந்த ராஜீவ் காந்திக்கு அப்போதைய இந்திய உயர்ஸ்தானிகர் ஜே.என். டிக்ஷித் கூறிய அறிவுரை இங்கு மீண்டும் கருத்திலெடுக்கத்தக்கது.

**தமிழர்களின் முப்பெரும் சக்திகள்**

யார் விரும்பினாலென்ன, விரும்பாவிட்டாலென்ன இனப்பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு என்ற ஒன்றுக்கு இலங்கை வரலாற்றில் இடமில்லை. விரும்பினால் ஒரு விடயத்திற்கு மட்டும் இடமிருக்கின்றது. அது சுனாமிக் கட்டமைப்பை கைச்சாத்திட்டவாறே நடைமுறைப் படுத்துவதன் மூலம் யுத்தத்தை சிறிது ஒத்திப் போடலாம் என்பதுதான்எல்லாவிதமான உள்நாட்டு, வெளிநாட்டு அரசியற் பொருளாதார சக்திகளினது நலன்களுடனுமான கூட்டல் கழித்தல் விருத்திகளுக் கப்பால் தமிழீழ மக்களின் அடிப்படையான மூன்று முப்பெரும் சக்திகளான புலம் பெயர்ந்த தமிழர், தமிழகம், தமிழ் மண்ணில் கட்டுக் கோப்பான அரசியற்பலம் ஆகிய மூன்றும் அமைகின்றன. ஆதலால் மேற்படி நிலையை உடைக்கவல்ல வியூகத்தை ஒருபுறமாகவும் தனது நீண்டகால எதிரியான ஜே.வி.பியை பலமற்றதாக்கச் செய்யவல்ல திட்டத்தை இன்னொரு புறமாகவும் கொண்ட ஒரு கலப்புக் கொள்கையின் அடிப்படையிலான ஒரு தீர்வுத் திட்டத்தைதான் இராஜபக்ஷ வகுக்க முடியும். இதில் ஏற்படக் கூடிய துயரகரமான பக்கம் என்னவெனில் இராஜப்பஷவை திருப்திப்படுத்துவதற்கு இந்தியாவால் எடுக்கக்கூடிய எந்தவொரு நிலைப்பாடும் தமிழீழ மக்களுக்கு எதிரானதாக மட்டுமில்லாது அது ஜனநாயகத்திற்கும், நீதிக்கும் இந்தியாவிற் கும் கூடவே எதிரானதாய் அமைந்துவிடும்.

இப்போது இராஜபக்ஷ இந்தியாவிற்கு எடுத்துச் செல்வது இனப்பிரச்சினைக்கான ஒரு தீர்வு யோசனை போல காட்சியளிக்கலாம். உண்மையில் அவர் காவிச் செல்வது தனது அனைதத்து அரசியல் எதிரிகளுக்கும் எதிரான ஒரு வியூகத்தைத்தான். அவ்வியூகத்துள்ஜே.வி.பியும் ஒன்று.


## மீண்டும் குறைந்த கட்டணத்தில் சர்வதேச நாடுகளுக்கான பொதிகள் (PARCEL) சேவை.

பிரான்ஸ்,ஜேர்மனி,லண்டன்,கனடா,நோர்வே,
டென்மார்க், சுவிஸ், அமெரிக்கா,ஆஸ்திரேலியா

வெளிநாடுகளில் வசிக்கும் உங்கள் உறவினர், நண்பர்களுக்கு அனுப்ப வேண்டிய உணவு, உடை, அலங்காரப்பொருள்கள், வீடியோநாடா,கடிதங்கள் அகியவற்றை மேற்கூறிய நாடுகளுக்கு குறைந்த கட்டணத்தில் **மூன்று நாள்களில்** கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கலாம். ஒரு பொதியில் நிறை இரண்டு கிலோவுக் குமேல் இருத்தல் வேண்டும் 1Kg **கட்டணம் 1300**

விசேட விலைக்கழிவு ஐந்துகிலோவுக்கு மேல் அனுப்பும் பொதிகளுக்கு 1Kg கட்டணம் → லண்டன் 450/= சுவிஸ் 600/=

தொடர்புகளுக்கு:

RAINBOW TRAVELS &TOURS

32 1/2.கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021 222 3237, 0777 328219
(அபினயா நகைமாடத்திற்குமேல்)


## நீங்காத நினைவலைகள்

எட்டாம் ஆண்டு பத்தாம் ஆண்டு

மண்ணுகில்
16.04.1935

விண்ணுலகில்
22.04.1997



மண்ணுகில்.
11.06.1926

விண்ணுலகில்
25.12.1995

திருமதி
பிலோமினா அந்தோனிப்பிள்ளை

அமரர்
டானியல் அந்தோனிப்பிள்ளை

*எம்மோடு வாழ்ந்திட்ட காலங்கள்*
*எமை மகிழ்வித்த பொற்காலங்கள்*
*இறைமகன் யேசுவின் பிறப்பென்றால்*
*உளம் மகிழ வைத்து*
*ஊராரும் இன்புறவைத்தீர்கள்*
*இன்றோ, இதயக் கோவிலில் வைத்து*
*பூஜிக்கின்றோம் யாம்.*

கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கைகளாக்கி
உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் பிரார்த்திக்கும்...

24, முதலாம் குறுக்குத்தெரு,
பாஷையூர், யாழ்ப்பாணம்.
(44494) (39-26-11)

பாசமிகு பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


## Jaffna College Institute of Technology Vaddukoddai

**The Following Courses to Commence in 9th January 2006**

**Computer Certificate Courses**

1. MS OFFICE
   - MS Word
   - MS Excel
   - Ms Access &
   - Power point

   Duration: 4months
   Fee: 2500/-

2. Certificate in Mava
   Advantages: Advertisement creations, Computer Games, 2D background Creations, Miracle Animation, 3D Modelling Objects
   Duration: 3months
   Fee: 4000/-

3. Certificate in Printing Technology
   - Page Maker
   - PhotoShop &
   - CorelDraw

   Duration: 4months(Part time)
   Fee: 3,000/-

4. Certificate in Computer HardWare
   Duration: 3months
   Fee: 2000/-

5. Certificate in Macromedia Flash
   Duration: 3months
   Fee: 2000/-

Apply before 4th January 2006

FOR APPLICATION FORMS AND DETAILS CONTACT Director
Jaffna College Institute of Technology,
Vaddukoddai.

T.Phone:- 0602213139 E-mail:- jcit@sltnet.lk

(C46858)

# மரண அறிவித்தல்கள்

## இந்திரசித்து தசன்



(யாழ். இந்துக்கல்லூரி 9ஆம் தர மாணவன்)

சில்லாலை மேற்கு, சாந்தை பண்டத்தரிப்பைச் சேர்ந்த இந்திரசித்து தசன் அவர்கள் நேற்று (24.12.2005) சனிக்கிழமை அகால மரணமானார் அன்னார் இந்திரசித்து - தவமலர் தம்பதியரின் அன்பு மகன் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று (25.12.2005) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பின்னர் பூதவுடல் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாந்தை, சில்லாலை மேற்கு, பண்டத்தரிப்பு. (44603)(45-15-12-53) தகவல்: குடும்பத்தினர்.

## அமரர் சிவகுரு நவரத்தினம்

இணுவில் தெற்கு, இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு நவரத்தினம் அவர்கள் நேற்று (24.12.2005) சனிக்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (25.12.2005) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று சமாதிக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் தெற்கு, இணுவில். (44612)(45-15-12-53) தகவல்: சி.பஞ்சாட்சரம். (இணுவில் சப்பறகாரர்).

## மயில்வாகனம் அம்பிகைகுமாரன்

(முன்னாள் உரிமையாளர்-அம்பிகைகுமாரன் ஸ்ரோர்ஸ்-கொழும்பு)

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு பம்பலப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் அம்பிகைகுமாரன் நேற்று (24.12.2005) சனிக்கிழமை கொழும்பில் அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம்- பாக்கியலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிவஞானம்-உலக பரமேஸ்வரி தம்பதியரின் மருமகனும், தர்மவதியின் அன்புக்கணவரும் தர்சன், சுதர்சன்(மாணவர்கள் பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நாகேஸ்வரி, சத்தியலெட்சுமி, புஸ்பகாந்தி, பரமேஸ்வரி, வரதலெட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற வே.பாலசந்திரன் (முன்னாள் விற்பனை முகாமையாளர் கடதாசிக் கூட்டுத்தாபனம்-கொழும்பு), காலஞ்சென்ற பாலசந்திரன்(முன்னாள் கலைப்பீடாதிபதி யாழ் பல்கலைக்கழகம்), காலஞ்சென்ற சிவலிங்கம் (முன்னாள் அம்பிகைகுமாரன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்-கொழும்பு), கார்த்திகேசு (யாழ்ப்பாணம்), திருவிளங்கம் (U.K), ஜெயலட்சுமி, காலஞ்சென்ற இளம்பூரணன், சம்பூரணன், சிவபூரணன், மகாபூரணன் (Canada), பரிபூரணன் (கொக்குவில்), சுயபூரணன், சுதர்ஜி, ஞானேஸ்வரி, பூலோகபூரணன்(Canada) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திருமதி அ.தர்மவதி, 36, நந்தனாகடின், பம்பலப்பிட்டி, கொழும்பு-5. T.P.: 0112-586029

தகவல்: ப.கார்த்திகேசு (மைத்துனர்), 192,அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (44603)(45-15-12-53)


ஆண்டவரின் வார்த்தையாம் "விவிலியத்தை" கற்க விரும்புவோர்க்கு இதோ ஓர் அரியவாய்ப்பு தை 2006


நீங்கள் உங்கள் இல்லத்தில் இருந்தவாறே அஞ்சல் வழியூடாக விவிலியத்தைக் கற்றுக் கொள்ள முடியும். உங்களுக்கு விவிலியத்தைப் பற்றிய 21 நூல்கள் மாதாமாதம் அனுப்பி வைக்கப்படும்.

இப்பாடநெறியைப் பற்றி மேலும் அறிந்து நெறியில் சேர விரும்புவோர் கீழ்க்காணும் எமது முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

அஞ்சல் வழி விவிலியக்கல்வி "கிளாரட் அகம்", இல.15, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குழி, யாழ்ப்பாணம். (44499)(45-15-12-53)


# 31ஆம் நாள் நினைவலைகள்

## வைத்தி இராசையா



25.11.2005 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனை கிரியையிலும் இன்று 25.12.2005 நடைபெறும் நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும் மக்கள்,மருமக்கள் பேரப்பிள்ளைகள்

மணியகாரன் ஒழுங்கை, வேலணை வடக்கு, வேலணை -05. (44603)(45-15-12-53) தகவல்: பேரன் -செல்வேந்திரன், காந்தரூபன்.


A/L 2007, 2006

B.st.-Mr.பசில், Acc.-Mr.தவா

Eco.-Mr.கஜீதரன், Tam.-Mr.சிவா

Log.-Mr.இராமணன், Chr.-Mrs.A.மல்லிகா

Geo.-ஆசிரியர், Eng.-Mr.Ramanathashan

SHAMROCK

J/Eachchamoddai Rd.


# அறிவித்தல்

## கல் உடைக்கும் ஆலையை மூடுதல்

இராசவீதி, கோப்பாய் தெற்கில் இயங்கி வந்த மேற்படி ஆலையை சுற்றுச் சூழலைக் கருத்திற் கொண்டு வேறு இடத்திற்கு மாற்றும் பொருட்டு எதிர்வரும் (31.12.2005) சனிக்கிழமையுடன் மூடப்படுகின்றது என்பதை அறியத் தருகின்றேன்.

கோப்பாய். நா.அருணாசலம் (உரிமையாளர்). (44520) (39)


வைத்திய இயலகம் வைத்தியசாலை

24 மணிநேர சேவையை மேம்படுத்த பின்வரும் சேவைகளுக்கு தகுதியானவர்கள் தேவை

பதிவு செய்யப்பட்ட மருந்து கலவையாளர் (Registered Pharmacist)

பதிவு செய்யப்பட்ட தாதியர் (Registered Nurses)

தாதிப் பயிலுனர்கள் (ஆண்/பெண்) (Nursing Trainees)

வரவேற்பாளரும் இயக்குனரும் (Receptionist cum Telephonist)

விண்ணப்பதாரர்கள் தங்களது கல்வி மற்றும் அனுபவச்சான்றிதழ்களின் பிரதிகளுடன் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி:

வைத்திய இயக்குனர், 132, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.



இடம்தேவை

றொலெக்ஸ் ஹோட்டலில் இருந்து கஸ்தூரியார் வீதி ஊடாக வின்சர் தியேட்டர் வரைக்கும் இடைப்பிலான பகுதியில் 1/2 பரப் பளவிற்கு குறையாமல் விலைக்கு இடம் தேவை. நேரில் தொடர்பு கொள்வது விரும்பத்தக்கது.

தொடர்பு: ந.செல்லத்துரை, இல.11, சப்பல் வீதி, யாழ்ப்பாணம். T.P.No. 222 6358 (44767)



நாதன்ஸ் யாழ்ப்பாணம்

பிரசன்னா, லைலா உங்கள் பிரகாஷ்ராஜ் வழங்கும்

கண்ட நாள் முதல்

காட்சி நேரம்: 10.30, 2.00, 5.15, 8.15



மனோகரா யாழ்ப்பாணம்




காட்சி நேரம் - 10.30, 1.30, 4.30, 7.30, 10.30



நாகம்ஸ் சுன்னாகம்

அர்ஜுன், நமிதா, வடிவேல் நடித்த



ஆணை

தினசரி: பகு நேரம் 11.30, 1.30, 4.30, 7.30

26 முதல் கஸ்தூரிமான்



ராஜா யாழ்ப்பாணம்

விஜய், ஜோதிகா, வடிவேலு நடித்த

திருமலை

காட்சிநேரம்: பு.நே. 10.30, 2.30, 6.30


# 46 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 1944 - 06 - 10



மறைவு 2005 - 11 - 10

## செல்வராசா நேசமலர்

இன்று (25.12.2005) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தட்டாதெரு, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி. நேசமலரின் பிள்ளைகளும் குடும்பத்தினரும். (44608)(45-15-12-53)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிவகாமசுந்தரி கந்தையா

(ஓய்வுபெற்ற அதிபர், யா/அளவெட்டி வடக்கு, அ.மி.த.க பாடசாலை)

அளவெட்டி வடக்கு, கணேஸ்வரத்தை வதிவிடமாகக் கொண்ட திருமதி சிவகாமசுந்தரி கந்தையா அவர்கள் 23.12.2005 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் யா/அளவெட்டி வடக்கு அ.மி.த.க பாடசாலையின் முன்னாள் அதிபரும் யா/அளவெட்டி சதானந்த வித்தியாலய முன்னாள் உப அதிபர் கந்தையா அவர்களின் அன்பு மனைவியும் கிருஷ்ணப்பிரியாவின் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், விஞ்ஞானபீடம், யாழ்.பல்கலைக்கழகம்). அன்புத்தாயாரும், காலஞ்சென்ற கனசபை-மங்களேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் தாவடியைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற தம்பிமுத்து- செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நற்குணசிங்கம், பத்மநாதன், அருளானந்தன், கருணாநந்தன், சிவயோகசுந்தரி மற்றும் நித்தியானந்தனின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சிவநேசவதி மற்றும் லீலாவதி, தேவரஞ்சினி, கலா, சூரியகலா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று(25.12.2005) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கணேஸ்வரம், அளவெட்டி. (44613)(45-15-12-53) தகவல்: த.கந்தையா (கணவர்)

## சதாசிவம் கந்தையா நடராசா

(உபதலைவர், இணுவில் கந்தசாமி கோயில்)



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நடராசா அவர்கள் 23.12.2005 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா -தங்கம் தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தர்-மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், சண்முகவடிவேல் (உரிமையாளர், சரவணன் களஞ்சியம்), ஜோர்மன்), பிருந்தாபூஷணம் (ஜேர்மன்), கௌசலாதேவி (ஆசிரியர், யா/இராமநாதன் கல்லூரி), சாலினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அனுஷா, காசினி (ஜேர்மன்), கேதீஸ்வரத்தம்பி (ஜேர்மன்), இராமநாதன் (அதிபர், யா/பொன்பரமானந்த வித்தியாலயம்), திருப்பதிவாசன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் துரைராசா, முத்துப்பிள்ளை, இராசா, தம்பித்துரை, சதாசிவம், ஞானம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற குலசேகரம்பிள்ளை மற்றும் இராசதுரை, நாகரத்தினம், சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற பிரதம கணக்காளர்) ஆகியோரின் மைத்துனரும், கல்யாணி, சேயோன், சசிவதனன், தமஸ்வினி, ஞாலினி, ஞாலயன், ஞானலக்சன், பார்த்தன், ஞாலதி, ஆரணி, கோமதன், கௌதமன், வைஷ்ணவி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.12.2005) ஞாயிற்றுக்கிழமை காலை10 மணிக்கு அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'லக்ஷ்மி மகால்' கந்தசுவாமி கோயிடி, இணுவில் மேற்கு, இணுவில். (44604)(45-15-12-53) தகவல்: ந.சண்முகவடிவேல் (மகன்).

## அம்பலவாணர் கிருஸ்ணசாமி

(வட இலங்கை ஹோமியோபதி சங்கத் தலைவர், சித்த ஆயுள்வேத ஹோமியோபதி வைத்தியர்)



இல.35 , நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட டாக்டர் அம்பலவாணர் கிருஸ்ணசாமி அவர்கள் 23.12.2005 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி அம்பலவாணர் தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற இராசம்மாவின் கணவரும் காலஞ்சென்ற டாக்டர் கி.வரதராஜன் (அரலி கிராம சபை), டாக்டர் கி.அம்பலவாணர் (நீர்வேலி-UK), தனலட்சுமி ஆகியோரின் தகப்பனும் விக்கினேஸ்வரி, யோகருமாரி (UK), சிவகுமாரன் (உப அதிபர்-ஹோலி ரோசரி தமிழ் வித்தியாலயம்,கொழும்பு -02) ஆகியோரின் மாமனும் ராஜ்குமார், மீரா, கிருஸ்ணகாந்தன், சஞ்சீவன், டர்சிகா, ரஜீவன் (UK), ஜெனனி ஜோதிபாலன், கவிதா, சிந்து, சிந்துஜன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.12.2005) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் காலை 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

35, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (44547)(45-15-12-53) தகவல்: குடும்பத்தினர். T.P.: 0776735932

# நத்தார் பண்டிகை முற்றாக சோபை இழப்பு பீதியால் மக்கள் வீடுகளிலேயே பிரார்த்தனை

யாழ்ப்பாணம்,டிசெ.25

குடாநாட்டில் உருவாகி இருக்கும் பதற்றமும் பீதியும் நிறைந்த சூழ்நிலைக்கு மத்தியில் நத்தார் பண்டிகையை கத்தோலிக்க மக்கள் இன்று கொண்டாடுகின்றார்கள்.

வீதிக்கு வீதி அவலமான சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருவதால் நத்தார் பண்டிகை முற்றாக சோபை இழந்துபோயிருக்கிறது.

யாழ். நகரப் பகுதியில் நேற்று மாலை படையினர் நடத்திய தாக்குதல்களால் ஏற்பட்ட களேபரம் காரணமாக நகரின் சந்து பொந்து உட்பட அனைத்துப் பகுதிகளும் வெறிச்சோடின.

யாழ். கோட்டைப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதலின் பின்னர் நகரில் சகல இடங்களிலும் படையினர் வேட்டுக்களைத் தீர்த்து தாக்குதல்களை நடத்தியதால் பெரும் பதற்ற நிலை ஏற்பட்டது. இதனால் நேற்று நள்ளிரவு தேவாலயங்களில் இடம்பெற்ற கிறிஸ்து பிறப்பு ஆராதனைகளில் மக்கள் கலந்து கொள்ளவில்லை. பலரும் வீடுகளில் தங்கியிருந்து பிரார்த்தனைகளில் ஈடுபட்டனர்.

வீதியில் இறங்கி நடமாடமுடியாத நிலைமை காணப்டுவதால் தேவாலயங்களுக்கு மிக அருகே வசிப்போர் மட்டுமே ஆராதனைகளில் பங்கேற்றனர். ஏனையோர் வீடுகளில் தங்கியிருந்தவாறே பிரார்த்தனைகளில் ஈடுபட்டனர்.

பதற்றத்தின் மத்தியில் யாழ்.புனித மரியன்னை பேராலயத்தில் கிறிஸ்து பிறப்பு விழாஆராதனைஇரவு11.45மணிக்குயாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் நடைபெற்றது. (ஐ-8-12)

# கொக்குவிலில் நேற்றிரவு வேட்டுக்கள் தீர்ப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.25

கொக்குவில் பகுதியில் நேற்றிரவு 8 மணியளவில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டன. இதனால் அப்பகுதியில்பெரும் பதற்றமான நிலைகாணப்பட்டது.

கொக்குவில் சந்தியில் நின்றிருந்த படையினரை நோக்கி ஆடியபாதம் வீதிப் பக்கமாக இருந்து இனந்தெரியாதோர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும் படையினர் பதிலுக்கு வேட்டுக்களைத் தீர்த்தனர் எனவும் கூறப்பட்டது.

இந்தத் தாக்குதல்களின் போது துப்பாக்கிச் சன்னங்கள் சில வீடுகளைத் தாக்கின என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-12-14)

# ஆழிப்பேரலை காவுகொண்டோருக்கு மணி ஒலித்து, சுடர் ஏற்றி அஞ்சலி

யாழ்ப்பாணம்,டிசெ.25

பெரும் எண்ணிக்கையான உயிர்களை வாரிச்சென்ற ஆழிப் பேரலை அனர்த்தம் நிகழ்ந்து ஒரு வருடத்தைக் குறிக்கும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகள் நாளை நடைபெறவிருக்கின்றன.

உயிரிழந்த அனைவரையும் நினைவு கூரும் வகையில் நாளை முற்பகல் 10.30 மணிக்கு தமிழர் தாயகம் எங்கும் வணக்கம் செலுத்துமாறு விடுதலைப் புலிகள் கேட்டிருக்கின்றனர்.

இது தொடர்பாக விடுதலைப் புலிகள் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 26ஆம் நாள் ஆழிப்பேரலையால் எமது தாயகத்திலும் சிங்கள தேசத்திலும் தமிழகம் மற்றும் தென்னாசியா, தென்கிழக்காசியா, ஆபிரிக்கா ஆகிய பிராந்தியங்களிலும் பெரும் உயிரழிவு ஏற்பட்டது.

தமிழீழத் தாயகத்தில் பொத்துவில் தொடக்கம் காரைநகர் வரை எமது மக்களின் உயிர்கள் காலை 8.30 மணி தொடக்கம் முற்பகல் 10.30 மணிவரை ஆழிப் பேரலையால் காவு கொள்ளப்பட்டன.

ஆழிப் பேரலையால் காவுகொள்ளப்பட்ட எமது உறவுகளுக்காகவும் ஏனைய தேசங்களின் உறவுகளுக்காவும் 2005.12.26 ஆம் நாள் முற்பகல் 10.30 மணிக்குத் தமிழீழத் தாயகம் எங்கும் வணக்கஞ் செலுத்தப்படவுள்ளது.

முற்பகல் 10.30 மணிக்கு ஆழிப்பேரலையால் காவுகொள்ளப்பட்டோருக்கு அகவணக்கஞ் செலுத்தும் வகையில் மணியொலி எழுப்பப்படும். 10.31 இற்கு மக்கள் அனைவரும் அகவணக்கஞ் செலுத்துவர். தொடர்ந்து 10.32 இற்குச் சுடரேற்றல் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஐ-3-12-14)

# பத்திரிகைச் சுதந்திரத்துக்கு ஆபத்து!

லண்டன்,டிசெ.25

யாழ்ப்பாணத்தில் பத்திரிகைச் சுதந்திரத் துக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கின்றது என்று சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம் (IFJ) தெரிவித்திருக்கின்றது.

பத்திரிகையாளர் மீதான தாக்குதல்கள் பத்திரிகை அலுவலகங்கள் சோதனை நடத்தப்படல் மற்றும் பத்திரிகை விநியோகஸ்தர் ஒருவர் பத்திரிகை அலுவலகம் ஒன்றின் முன் பாக வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டமை ஆகிய சம்பவங்களைக் குறிப்பிட்டுக் கூறியுள்ள சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம், இந்த சம்பவங்கள் யாழ்ப்பாணத்தில் பத்திரிகைச் சுதந்திரத்தையும், கருத்துச் சுதந்திரத்தையும் முற்றாக முடக்கும் ஆரம்பமோ என்ற கவலையை ஏற்படுத்துகின்றன என்றும் குறிப்பிட்டுள்ளது. (ஐ).

## ஜோசப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். அங்கு ஜோசப் பரராஜசிங்கம் உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றத்துக்குத் தெரிவானவர் ஜோசப் பரராஜ சிங்கம். அவருக்கு மூன்று பிள்ளைகள் உள்ளனர்.

இந்தப் படுகொலை தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சி அலைகளைத் தோற்றுவித்திருக்கின்றது.

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் உட்பட பல தமிழ் எம்.பிக்கள் ஜோசேப்பின் படுகொலையைக் கண்டித்திருக்கின்றனர்.

அரச புலனாய்வுத் துறையினரே இந்தப் படுகொலைக்குப் பொறுப்பு என்று குற்றச்சாட்டுக்கள் கிளம்பியுள்ளன. (ஐ)

## யுவதி உட்பட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோட்டை அருகே தந்தை செல்வாவின் நினைவுத் தூபிக்கு எதிர்ப்புறமாக உள்ள வீதியில் சடலங்கள் காணப்பட்டன என்று தெரியவந்தது.

சுமார் இருபது இருபந்தைந்து வயது மதிக்கத்தக்க நான்கு ஆண்களின் சடலங்களும் ஒரு யுவதியின் சடலமுமே அங்கு காணப்பட்டன. யுவதியின் சடலம் நீல நிறத்திலான ஜீன்ஸ், சேர்ட் அணிந்த நிலையில் காணப்பட்டது.

அதற்கு சற்றுத்தள்ளி பண்ணைப் பக்கமாக கோட்டையின் பின்புறமாகச் செல்லும் வீதியில் ஏனைய மூன்று சடலங்கள் சற்றுத் தள்ளி சிறு இடைவெளியில் காணப்பட்டன. எனவும் கூறப்படுகிறது.

ஐந்தாவது சடலம் வீதியோரமாக - கடற்கரைப் பகுதியில் உள்ள - இராணுவ முட்கம்பி வேலிக்குப் பக்கத்தில் காணப்பட்டது.

சடலங்களுக்கு அருகே வெடிக்கக் கூடிய பொருள்கள் காணப்பட்டதால் பொலீஸார் நீண்டநேரமாக அவற்றை நெருங்கவில்லை என்று கூறப்பட்டது.

நேற்றிரவு 9.30 மணியளவில் நீதிவான் சரோஜினி இளங்கோவன் சம்பவ இடத்துக்குச் சென்று சடலங்களைப் பார்வையிட்டபின் அவற்றை யாழ்.மருத்துவமனையில் ஒப்படைக்குமாறு பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

ஜீன்ஸ் மற்றும் சேர்ட் அணிந்த நிலையில் காணப்பட்ட ஓர் ஆணின் சடலத்துடன் காணப்பட்ட வங்கி ஆவணம் ஒன்றில் 'திருநாவுக்கரசு ஜெயநந்தன் - குரும்பசிட்டி, தெல்லிப்பழை' என்ற விவரம் காணப்பட்டது. மற்றொரு சடலத்தில் காணப்பட்ட ஆவணத்தில் விமலேஸ்வரன் என்னும் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது எனவும் ஒரு தகவல் தெரிவித்தது.

சடலங்கள் ஐந்தும் நேற்றிரவு 10.30 மணியளவில் பொலீஸாரால் யாழ்.மருத்துவமனையில் சேர்க்கப்பட்டன. அடையாளம் காண்பதற்காகவும் பிரேத பரிசோதனைக்காகவும் ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டிருக்கின்றன.

நகரப் பகுதியில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக சடலம் கிடந்த பகுதிக்குச் சென்று தகவல்களைச் சேகரிக்க முடியவில்லை.

இதேவேளை -

நகரப் பகுதிக்கு தொழிலின் நிமித்தம் சென்ற சிலர் நேற்றிரவு வீடு திரும்பவில்லை என்று உறவினர்கள் முறையிட்டிருக்கின்றனர். அவர்கள் என்னவானார்கள் என்பது தெரியாமல் உறவினர்கள் பெரும் பதற்றமடைந்து காணப்பட்டனர்.

இதற்கிடையில் -

மோதலில் உயிரிழந்த ஐவரும் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் என்று இராணுவப் பேச்சாளர் பிரசாந் சமரசிங்க தெரிவித்தார்.

கிரனேட்டுக்கள், பிஸ்ரல்கள் மற்றும் கனரகத் துப்பாக்கி என்பனவற்றையும் இவர்களிடமிருந்து படையினர் கைப்பற்றினர் என்று அவர் கூறினார்.

யாழ்.கோட்டையை அண்டிய பகுதியில் பற்றைகளில் மறைந்திருந்த இவர்கள் இராணுவத்தினர் மீது தாக்குதல் தொடுத்தபோது மோதல் வெடித்தது என்று இராணுவ வட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்தன.

இந்த மோதலில் இராணுவத்தினர் தரப்பில் மேஜர் தர அதிகாரி ஒருவரும் சிப்பாய் ஒருவரும் காயங்களுக்கு உள்ளாகினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த படையினரில் ஒருவர் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர் என்றும் ஒரு தகவல் தெரிவித்தது.

காயங்களுடன் எடுத்துவரப்பட்ட சிப்பாய் ஒருவர் சிகிச்சைக்காக நேற்று முன்னிரவு யாழ்.மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

காயமடைநத மற்றைய படை அதிகாரி ஹெலிகொப்டர் மூலம் பலாலி இராணுவ ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டார் என்று தெரிகிறது. (ஐ-12-14)

## பேச்சை விரைந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளின் அரசியல் துறையினருக்கும் இடையிலான பேச்சு பிற்பகல் 12.20 மணியளவில் ஆரம்பித்தது. சுமார் இரு மணி நேரம் நீடித்தது.

விடுதலைப் புலிகளின் தரப்பில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன், சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் பேச்சுகளில் கலந்து கொண்டனர். இணைத் தலைமை நாடுகளின் தூதர்கள் தரப்பில் இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழுவின் தலைவர் ஜூலியன் வில்சன், ஐக்கிய இராச்சியத்தின் உயர்ஸ்தானிகர் ஸ்டீபன் ஈவன்ஸ், ஜப்பானியத் தூதுவர் அகியோ சூடா, இலங்கைக்கான நோர்வேயின் பிரதித்தூதுவர் ஒட்வர் லேக்ரீட் ஆகியோர் பேச்சில் பங்கேற்றனர்.

வடக்கு - கிழக்குப் பகுதியில் கடந்தசில நாள்களாக இடம்பெறுகின்ற தாக்குதல்கள் முழு அளவிலான போராக வெடிக்கக்கூடிய கள நிலைவரம் உருவாகி இருப்பது குறித்து இணைத்தலைமை நாடுகளின் கவலையை தூதர்கள் அங்கு வெளியிட்டனர்.

போர்நிறுத்த சூழலைப் பேணுவதற்கும் அதனை சரிவர அமுல்படுத்துவதற்கான பேச்சுக்களை விரைந்து ஆரம்பிப்பதற்கும் சாத்தியமாகக் கூடிய ஆலோசனைகளை இந்தச் சந்திப்பின்போது இணைத்தலைமை நாடுகளின் தூதர்கள் புலிகளிடம் முன்வைத்தனர் என்று கூறப்படுகிறது.

முதற்கட்டப் பேச்சுகளை நடத்துவதற்கான இடம் தொடர்பாக எழுந்துள்ள இழுபறி குறித்தும் அதிக கரிசனை காட்டிய தூதர்கள், இயலுமான வரை விரைந்து பேச்சுகளை ஆரம்பிக்குமாறு புலிகளிடம் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டனர்.

தூதர்கள் கிளிநொச்சியில் இருந்து பிற்பகல் மீண்டும் வவுனியா ஊடாக கொழும்பு திரும்பினர். (ஐ-3-12)

## இருபாலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த படையினர் மூவர் அச்செழு படைமுகாமுக்கு கொண்டுசெல்லப்பட்டனர் என்று ஒரு தகவல் தெரிவித்தது.

இந்தச் சம்பவத்தின் பின்னர் கல்வியங்காடு பகுதியில் படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் வீதியால் சென்று கொண்டிருந்த சுப்பிரமணியம் கோகுலன் (வயது 21) என்பவர் காலில் காயமடைந்தார். இவர் சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். (ஐ-12-180-14)

## நோர்வேயிலேயே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலியுறுத்துகின்றது என்று தூதர்களிடம் தமிழ்ச்செல்வன் எடுத்துக்கூறினார்.

ஜப்பானில் பேச்சு நடத்தவதென்பதில் எமக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை இருப்பினும் அனுசரணையாளராக இன்னும் நோர்வே இருக்கின்ற நிலையில் - அமைதி முயற்சியில் அந்த நாடு அதிக அக்கறை காட்டி முக்கிய பங்கு வகித்துச் செயற்படுவதனாலும் அங்கேயே - அவர்கள் முன்னிலைலேயே - முதலில் பேச்சை ஆரம்பிப்பதே எமது கடப்பாடு - என்றும் தமிழ்செல்வன் தெரிவித்தார். (ஐ-3-12)

## நோர்வேயில்...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

*கே:* அரசாங்கத்தின் அழுத்தத்தின் காரண மாகவே தூதர்கள் வந்தார்களா?

*ப:* அரசாங்கத்தின் அழுத்தம் போல தெரியவில்லை. இருதரப்பையும் சந்தித்து இப் போது இறுக்கமடைந்திருக்கும் சூழலை இயல்பு நிலைக்குக் கொண்டுவரும் முயற்சியாகவே இச்சந்திப்பு நடைபெற்றது.

**ஒட்டுப்படைகள் பற்றி....**

*கே:* ஆயுதக்குழுக்களை களைய வேண்டும் என்பது உடன்படிக்கையில் உள்ளது. இணைத்தலைமை நாடுகள் இது தொடர்பில் அழுத்தம் கொடுக்குமா?

*ப:* இணைத்தலைமை நாடுகள் பிரஸல்ஸில் எடுத்த தீர்மானத்தில் வெளிப்படை யாக இது சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

வன்முறைகளைத் தூண்டுகின்ற ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியிருக்கின்றார்கள். தமிழர் தாயகத்தில் இருந்து அக்குழுக்கள் அகற்றப்பட வேண்டும் என்பதை சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகள் பல கட்டங்களில் விட்டுக் கொடுப்புக்களைச் செய்திருப்பதை பாராட்டினார்கள். ஏற்றுக்கொண்டிருக்கின்றார் கள். பொதுக்கட்டமைப்பில் கூட தலைமைப் பீடம் எவ்வளவு விட்டுக் கொடுப்புக்களு டன் நடந்தது என்பதை கலந்துரையாடலின் போது சுட்டிக்காட்டினார்கள் என்றார் சு.ப. தமிழ்ச்செல்வன். (ஐ-3-12)

## மரண அறிவித்தல்

### சின்னப்பு அரியகுட்டி



இணுவில் கிழக்கு, தியேட்டர் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு அரியகுட்டி அவர்கள் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - குழந்தை தம்பதியரின் அன்பு மகனும் தெய்வமணியின் (பூரணம்) அன்புக் கணவரும் பாஸ்கரன் (ஹொலண்ட்), காலஞ்சென்ற கிருபாகரன் குமுதா, பிரபாகரன் (கனடா), மனோகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சரஸ்வதி, இரத்தினம், மகேஸ்வரி நல்லையா, காலஞ்சென்ற மகாலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் தர்ஷினி (ஹொலண்ட்), இராஜராஜேஸ்வரன் ஆகியோரின் மாமனாரும் கிருத்திகா (ஹொலண்ட்), துளசிகா (ஹொலண்ட்), பிருந்தாபன், பிரணவி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (25.12.2005) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பூவோடை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தியேட்டர் வீதி,*
*இணுவில் கிழக்கு.*

(சி-47050)(11-46-33)

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.12.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.